


மொழி, இனம், நாடு, கல்வி, சமயம், மக்கள் நலம், கோயில்கள் என பலவும் கருதிப் பார்த்து தமிழ் மொழி சிறக்க தமிழினம் உயர தமிழ்நாடு வளம் பெற பயனுறு சிந்தனை விதைகளை தம் வாழ்நாள் முழுவதும் இந்த மண்ணில் விதைத்தவர். உண்மை பேசுதல், உழைத்து வாழுதல், முயற்சி உடைமை, அறிவை வளர்த்தல், நேர்மையாக நடத்தல், பிறருக்குத் தீங்கு செய்யாமை முதலிய நேரிய வாழ்க்கைக்குரிய கொள்கைகளாம் என்று தாம் கூறியதற்கு ஏற்ப வாழ்ந்துக் காட்டிய மாமனிதர்.

- இரா. கலைக்கோவன்

(நூல் - இந்திய இலக்கியச் சிற்பிகள்)

# இராசமாணிக்கனார்

## மணிமேகலை



நிலவன் பதிப்பகம்

# மணிமேகலை

முனைவர் மா. **இராசமாணிக்கனார்**

நிலவன் பதிப்பகம்

<u>நூற் குறிப்பு</u>

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **மணிமேகலை** |
| ஆசிரியர் | : | முனைவர் மா. இராசமாணிக்கனார் |
| பதிப்பாளர் | : | இ. தமிழமுது |
| பதிப்பு | : | 2012 |
| தாள் | : | 16கி வெள்ளைத்தாள் |
| அளவு | : | 1/8 தெம்மி |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கம் | : | 16+104= 120 |
| நூல் கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| விலை | : | உருபா. 75/- |
| படிகள் | : | 1000 |
| மேலட்டை | : | தமிழ்க்குமரன் |
| நூலாக்கம் | : | திருமதி வி. சித்ரா |
| அச்சிட்டோர் | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்<br>வடபழனி, சென்னை - 26. |
| வெளியீடு | : | **நிலவன் பதிப்பகம்,**<br>எண். 20/33, பி 3 பாண்டியன் அடுக்ககம்,<br>ஸ்ரீநிவாசன் தெரு, தியாகராயர் நகர்,<br>சென்னை - 17.<br>044 2433 9030. |

# பதிப்புரை

மொழியாலும், இனத்தாலும், அறிவாலும் சிறந்தோங்கி விளங்கிய பழந்தமிழ்க் குலம் படிப்படியாய் தாழ்ச்சியுற்று மீள முடியாத அடிமைச் சகதியிலும், அறியாமைப் பள்ளத்திலும் வீழ்ந்து கிடந்த அரசியல் குமுகாய வரலாற்று உண்மைகளைத் தேடி எடுத்து வழங்குவதை நோக்கமாகக் கொண்டு தமிழ்மண் பதிப்பகத்தைத் தொலைநோக்குப் பார்வையோடு தொடங்கினேன்.

நீருக்கும் - நெருப்புக்கும், புதையுண்டும் - மறைக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் - சிதைக்கப்பட்டவையும் போக எஞ்சிய நூல்களைத் தேடி எடுத்து வெளியிட்ட பழந்தமிழ் அறிஞர்களை வணங்கி எம் தமிழ்நூல் பதிப்புச் சுவடுகளைப் பதித்து வருகிறேன்.

19ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலமும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலமும் தமிழ்மொழி, தமிழின வரலாற்றின் மறுமலர்ச்சிக் காலமாகும். இந்த மறுமலர்ச்சி காலத்தில்தான் தமிழை உயிராகவும், மூச்சாகவும், வாழ்வாகவும் கொண்ட அரும்பெரும் தமிழறிஞர்கள் தோன்றி தமிழ் மீட்டெடுப்புப் பணியை மேற்கொண்டனர். எதிர்காலத் தமிழ் தலைமுறைக்கு அழியாச் செல்வங்களாக அருந்தமிழ் நூல்களை கொடையாக வழங்கிச் சென்றனர். இவ்வருந்தமிழ்க் கொடைகள் எல்லாம் தமிழர் இல்லந்தோறும் வைத்துப் பாதுகாக்கத் தக்க புதைபொருள் ஆகும்.

அந்த வகையில் அறிஞர்களின் செந்தமிழ் கருவூலங்களை எல்லாம் தேடி எடுத்து குலை குலையாய் வெளியிட்டு தமிழ்நூல் பதிப்பில் எம் பதிப்புச் சுவடுகளை ஆழமாக பதித்து வருவதை தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறியும். எம் தமிழ்நூல் பதிப்புப் பணியின் தொடர் பணியாக தமிழ்ப்பேரறிஞர் முனைவர் மா. இராசமாணிக்கனார் நூல்களை வெளியிடும் நோக்கில் எம்

கைக்குக் கிடைத்த சில நூல்களை முதல் கட்டமாக வெளிகொணர்ந்துள்ளோம். எதிர்காலத்தில் அவருடைய ஆக்கங்கள் அனைத்தையும் தேடி எடுத்து பொருள்வழிப் பிரித்து கால வரிசையில் ஆய்வாளர்களுக்கும் தமிழ் உணர்வாளர் களுக்கும் பயன்படும் நோக்கில் திட்டமிட்டுள்ளோம்.

அகப்பகையும், புறப்பகையும் தமிழர் வாழ்வில் குடிபுகுந்து தமிழினம் நிலைக்குலைந்த வரலாறு கடந்தகால வரலாறு. தொன்மையும், பெருமையும் வாய்ந்த தமிழ்ப் பேரினம் தம் குடிமை இழந்து தாழ்வுற்று மருளும், இருளும் நிறைந்த மூட பழக்க வழக்கங்களால் தன்மானம் இழந்து தாழ்ந்து கிடந்த வரலாற்றை நெஞ்சில் நிறுத்துவோம். தமிழினம் மறுமலர்ச்சி பெறுவதற்கு தம் வாழ்வின் முழுபொழுதையும் செலவிட்ட அறிஞர்களை வணங்குவோம். இந்நூல்களை உங்கள் கையில் தவழ விடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**கோ. இளவாகம்**

# நுழையுமுன்

## மனிதரில் தலையாய மனிதரே!

ஆசிரியர், ஆய்வாளர், அறிஞர் என்று தம் உழைப்பாலும் திறமையாலும் விடாமுயற்சியாலும் படிப்படியாக உயர்ந்த **இராசமாணிக்கனார்** தமிழ்நாடு கண்ட மிகச் சிறந்த சிந்தனையாளர்களுள் ஒருவர். மொழி, இனம், நாடு எனத் தமிழ் கூறும் நல்லுலகம் பற்றி ஆழச் சிந்தித்தவர்களுள் அவர் குறிப்பிடத்தக்கவர். சமயஞ் சார்ந்த மூட நம்பிக்கைகளும், சாதிப் பிணக்குகளும், பிறமொழி ஈடுபாடும், பெண்ணடிமைத் தனமும், சடங்கு நாட்டமும், கல்வியறிவின்மையும் தமிழ்ச் சமுதாயத்தைச் சூறையாடிக் கொண்டிருந்த கால கட்டத்தில்தான் இராசமாணிக்கனார் தம் ஆசிரிய வாழ்க்கையைத் தொடங்கினார். தாமுண்டு, தம் குடும்பமுண்டு, தம் வேலையுண்டு என்று அவரால் இருக்க முடியவில்லை.

தமிழ் இலக்கியங்களைப் பழுதறப் படித்திருந்தமையாலும், இந்த நாட்டின் வரலாற்றை அடிப்படைச் சான்றுகளிலிருந்து அவரே அகழ்ந்து உருவாக்கியிருந்தமையாலும் மிக எளிய நிலையிலிருந்து உழைப்பு, முயற்சி, ஊக்கம் இவை கொண்டே உயரத் தொடங்கியிருந்தமையாலும் தம்மால் இயன்றதைத் தாம் வாழும் சமுதாயத்திற்குச் செய்வது தமது கடமையென அவர் கருதியிருந்தார். மொழி நலம், தமிழ்த் திருமணம், சாதி மறுப்பு என்பன அவருடைய தொடக்கக் காலக் களங்களாக அமைந்தன. தாய்மொழித் தமிழ், தமிழரிடையே பெறவேண்டிய மதிப்பையும் பயன்பாட்டையும் பெறாமலிருந்தமை அவரை வருத்தியது.

‘தமிழ் நமது தாய்மொழி’ ஈன்ற தாயைப் போற்றுதல் மக்களது கடமை. அது போலவே நமது பிறப்பு முதல் இறப்பு வரையில் நமக்கு உறுதுணையாக இருந்து நம்மை வாழச் செய்யும் மொழியைக் காப்பதும் வாழ்விக்கச் செய்வதும் தமிழராகிய நமது கடமை. ‘இன்றைய தமிழரது வாழ்வில் தமிழ் எவ்வாறு இருக்கின்றது?’ ஒரு தமிழன் மற்றொரு தமிழனோடு பேசும்போது பெரும்பாலும் பிறமொழிச் சொற்களைக் கலந்தே பேசுவதைக் காண்கிறோம். இப்பிறமொழிச் சொற்கள் நம் மொழியிற் கலந்து தமிழ் நடையைக் கெடுத்துவிடுகின்றன. ஒரு தமிழ்ச் சொல்லுக்குப்

பதிலாகப் பிற மொழிச் சொல்லைப் பயன்படுத்தினால், அந்தத் தமிழ்ச்சொல் நாளடைவில் வழக்கு ஒழிந்துவிடும்' 'பிறமொழிச் சொற்களைக் கலந்து பேசுவதில் தலைசிறந்தவர் தமிழரே ஆவார். மொழிக் கொலை புரிவதில் முதற்பரிசு பெறத்தக்கவர் நம் தமிழரே ஆவர்!

'நம் தமிழ்நாட்டுச் செய்தித் தாள்களில் தமிழ்ப் புலமையுடையார் பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம். அதனாலும், நல்ல தமிழை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் இன்மையாலும், மிகப் பலவாகிய பிறமொழிச் சொற்களைக் கலந்து தமிழ் எழுதி வருகிறார்கள். இவற்றைத் 'தமிழ்ச் செய்தித்தாள்கள்' என்று கூறுவதற்குப் பதிலாக 'கலப்பு மொழிச் செய்தித்தாள்கள்' என்று கூறுதலே பொருந்தும். இவ்வாறு செய்தித் தாள்களில் மொழிக் கொலை புரிவோர் வேற்று நாட்டவரல்லர், வேறு மொழி பேசும் அயலாரல்லர். தமிழகத்தில் பிறந்து தமிழிலேயே பேசிவரும் மக்களாவர் என்பதை வெட்கத்துடன் கூற வேண்டுபவராக இருக்கிறோம்'.

நாடு முழுவதும் மொழி நலம் குன்றியிருந்தமையைத் துறை சார்ந்த சான்றுகளோடும் கவலையோடும் சுட்டிக் காட்டியதோடு இராசமாணிக்கனார் நின்றுவிடவில்லை. மொழியை எப்படி வளர்ப்பது, காப்பாற்றுவது, உயர்த்துவது என்பதே அவருடைய தொடர்ந்த சிந்தனையாக இருந்தது. காலங் காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த சமுதாயம் அவர் கண் முன் நின்றது. வடமொழி ஆதிக்கமும் ஆங்கிலப்பற்றும் தமிழ் மக்களின் கண்களை மூடியிருந்தன. தம் மொழியின், இனத்தின், நாட்டின் பெருமை அறியாது இருந்த அவர்கட்குத் தமிழின் தொன்மையையும் பெருமையையும் சிறப்பையும் எடுத்துச் சொல்வது தம் கடமையென்று கருதினார் இராசமாணிக்கனார். அக்கடமையை நிறைவேற்ற அவர் கையாண்ட வழிகள் போற்றத்தக்கன.

தம்முடைய மாணவர்களை அவர் முதற்படியாகக் கொண்டார். நல்ல தமிழில் பேசவும் எழுதவும் அவர்களுக்குப் பயிற்றுவித்தார். சிறுசிறு கட்டுரைகளை உருவாக்கப் பயிற்சியளித்தார். மொழிநடை பற்றி அவர்களுக்குப் புரியுமாறு கலந்துரையாடினார். மொழி நடையைச் செம்மையாக்குவது இலக்கணமும் பல நூல்களைப் படிக்கும் பயிற்சியுமே என்பதை விளங்க வைத்தார். இலக்கணப் பாடங்களைப் பள்ளிப் பிள்ளைகள் விரும்பிப் படிக்குமாறு எளிமைப்படுத்தினார். அதற்கெனவே நூல்களை உருவாக்கினார். அவரிடம் பயின்ற மாணவர்கள் அவர் இலக்கணம் சொல்லிக் கொடுத்த அழகையும், படிப்படியாக இலக்கணத்தை நேசிக்க வைத்த திறனையும் பல இடங்களில் பதிவு செய்துள்ளனர். பயிலும் நேரம் தவிர்த்த பிற நேரங்களிலும் மாணவர்களுடன் உரையாடித் தமிழ் மொழியின் வளமை குறித்து அவர்களைச் சிந்திக்கச் செய்தார். அவரிடம்

பயின்றவர்களுள் பலர் பின்னாளில் சிறந்த தமிழறிஞர்களாகவும், நூலாசிரியர்களாகவும் உருவானமைக்கு இத்தகு பயிற்சிகள் உரமிட்டன.

பள்ளி ஆசிரியராக இருந்த காலத்திலேயே ஒத்த ஆர்வம் உடையவர்களைச் சேர்த்துக் கொண்டு அப்பகுதியிலிருந்த பொது மக்களுக்குத் தமிழ்க் கல்வியூட்டும் பணியை அவர் செய்துள்ளார். 'வண்ணையம்பதியில் தனலட்சுமி தொடக்கப் பள்ளியில் பேராசிரியரின் தமிழ்த்தொண்டு தொடங்கியது. அங்குத் தொடர்ந்து வகுப்புகள் நடத்தினார்.' பணிகளில் இருந்தவர்களுக்கு வார இறுதி நாட்களில் தமிழ் வகுப்பெடுத்தார். உறவினர்களைக் கூட அவர் விட்டு வைக்க வில்லை. 'குடியரசு' இதழில் சொற்ப ஊதியத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த தம் மைத்துனர் பு. செல்வராசனை 'வித்துவான்' படிக்க வைத்து, சென்னை அப்துல் அக்கீம் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணிபெறச் செய்தார்.

தமக்குக் கிடைத்த வாய்ப்புகளை எல்லாம் மொழிச் சிந்தனைகளை விதைக்கப் பயன்படுத்திக் கொண்டவர், 'தமிழர் நல்வாழ்க்கைக் கழகம்', 'நக்கீரர் கழகம்', 'மாணவர் மன்றம்' முதலிய பொது நல அமைப்புகளோடு தம்மை இணைத்துக் கொண்டார். 1946 இல் சென்னை நக்கீரர் கழகம் என்ற அமைப்பினைத் தொடங்கிய காலத்துப் பேராசிரியர் அவர்களின் அரவணைப்பும் தொண்டும் கழகத்திற்குக் கிடைத்துக் கழகம் வளர்ந்து சிறந்தது. 1946 ஆம் ஆண்டில் நக்கீரர் கழகம் 'திருவள்ளுவர்' என்ற திங்கள் ஏட்டினை நடத்தத் தொடங்கியபோது, பேராசிரியர் தம் கட்டுரைகளை வழங்கியதோடு அல்லாது, தாம் நட்புப் பூண்டிருந்த தவத்திரு ஈராஸ் பாதிரியாரின் கட்டுரையையும் பெற்றுத் தந்து இதழுக்குப் பெருமை சேர்ந்தார். அடியவனின் தமிழ் தொண்டிற்கு ஊக்கமும், உள்ளத்திற்கு உரமும், துவண்டபோது தட்டி எழுப்பி ஊட்ட உரைகளும் அளித்துச் சிறப்பித்தவர் பேராசிரியர்' என்று இராசமாணிக்கனாரின் தமிழ்த் தொண்டை நினைவு கூர்ந்துள்ளார் நக்கீரர் கழக அமைப்பாளர் சிறுவை நச்சினார்க்கினியன்.

கல்வி வழி விழிப்புணர்வில் பெருநம்பிக்கை கொண்டிருந் தமையால், 'அரசியலாரும் சமூகத் தலைவர்களும் நாடெங்கும் கல்விக் கூடங்களை ஏற்படுத்த வேண்டும். கல்வி கற்கும் வயதுடைய எந்தச் சிறுவனும் சிறுமியும் கற்காமல் இருத்தல் கூடாது' என்று முழங்கிய இப்பெருமகனார், தாம் வாழ்ந்த பகுதியில் இருந்த அத்தனை குடும்பங்களின் பிள்ளைகளும் பள்ளிப் படிப்புக் கொள்ளுமாறு செய்துள்ளார்.

பெண்கள் பின்தங்கிய காலம் அது. ‘அடுப்பூதும் பெண்ணுகளுக்குப் படிப்பெதற்கு’ என்று கேட்டவர்கள் மிக்கிருந்த காலம். அந்தக் கால கட்டத்தில்தான் பேராசிரியர் பெண் கல்விக்காகக் குரல் கொடுத்தார். எட்டாம் வகுப்பே படித்திருந்த தம் மனைவிக்குத் தாமே ஆசிரியராக இருந்து பயிற்றுவித்து அவரை, ‘வித்துவான்’ பட்டம் பெறச் செய்தார். ‘என் கணவர் எனக்கு ஆங்கிலப் பாடமும் தமிழ்ப்பாடமும் கற்பித்து வந்தார். பாடம் கற்பிக்கும் நேரத்தில் பள்ளி ஆசிரியராகவே காணப்பட்டார். ஒவ்வொரு பெண்ணும் தன்னைக் காத்துக் கொள்ளும் வகையில் கல்வி கற்றுப் பொருளீட்ட வேண்டும் என்பது என் கணவர் கருத்து. அதனால், என்னைப் பெண்கள் பள்ளியில் தமிழாசிரியராக அமர்த்தினார். மாணவியர்க்கு மொழியுணர்வும் நாட்டுணர்வும் வருமாறு பேசவேண்டும் என்று அவர் அடிக்கடி கூறுவார்’ என்று ‘என் கணவர்’ என்ற கட்டுரையில் திருமதி கண்ணம்மாள் இராசமாணிக்கனார் கூறியுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

மொழி, இனம், நாடு இவற்றைப் பற்றி அறிந்திருந்தால் தான் அவற்றை நேசிக்கவும் அவற்றிற்குத் துணை நிற்கவும் முடியுமென்பதில் அவர் தெளிவாக இருந்தமையால்தான், ‘கல்வி’யில் அக்கறை காட்டினார். அவருடைய ஆசிரியப் பணி அதற்குத் துணையானது. தம்மிடம் பயில வந்தவர்க்கு மொழியுணர்வூட்டினார். ‘தமிழகத்தில் ஆட்சி தமிழிலேயே இயங்க வேண்டும். எல்லாக் கல்வி நிலையங்களிலும் ஆங்கிலம் ஒழிந்த எல்லாப் பாடங்களையும் தமிழில் கற்பித்தல் வேண்டும்’ என்பது அவர் கொள்கையாக இருந்தது. “அறிவியல் மனப்பான்மையை ஊட்டி வளர்க்கும் முறையில் அமைந்த பாடநூல்களையே பிள்ளைகள் படிக்கும்படிச் செய்தல் வேண்டும்”. உலக நாடுகளோடு தம் நாட்டை ஒப்பிட்டுப் பார்த்துக் குறைகளை நிறைவாக்கும் மனப்பாங்கு வளரும்படியான முறையில் கல்வி அளிக்கப்படல் வேண்டும். கடவுள் பற்றும், நல்லொழுக்கமும், சமுதாய வளர்ச்சியில் நாட்டமும் ஊட்டத் தக்க கல்வியை ஏற்ற திட்டங்கொண்டு நடை முறைக்குக் கொண்டு வருதல் வேண்டும்’ என்று அவர் எழுதியுள்ளார்.

‘பேச்சுத் தமிழே எழுத்துத் தமிழுக்கு அடிப்படை ஆதலால், நமது பேச்சுத் தமிழ் பெரும்பாலும் தூய தமிழ்ச் சொற்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். அப்பொழுது தான் நாம் எழுதும் தமிழ் நல்ல தமிழ் நடையில் இருக்கமுடியும்’ என்பது அவர் கருத்தாக இருந்தமையால், தம்மிடம் பயின்ற மாணவர்களை அவர் நல்ல தமிழில் பேசுமாறு வழிப்படுத்தினார். அதற்காகவே தாம் பணியாற்றிய பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இருந்த மாணவர் மன்றங்களைச் செயலூக்கம் பெற வைத்தார். தமிழ் மன்றங்கள் இல்லாத கல்வி நிலையங்கள் அவற்றைப்

பெறுமாறு செய்தார். பேச்சையும் எழுத்தையும் இளைஞர்கள் வளப்படுத்திக் கொள்ள உதவுமாறு 'வழியும் வகையும்' என்றொரு சிறு நூல் படைத்தளித்தார். எண்ணங்களை எப்படி உருவாக்கிக் கொள்வது, அந்த எண்ணங்களை வெளிப்படுத்த எத்தகு சொற்களைத் தேர்ந்து கொள்வது, அச்சொற்களை இணைத்துத் தொடர்களை எப்படி அமைப்பது, பின் அத்தொடர்களைக் கேட்டார்ப் பிணிக்கும் தகையனவாய் எங்ஙனம் அழகு படுத்துவது என்பன பற்றி நான்கு தலைப்புகளில் அமைந்த இந்நூல் இளைஞர் களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன் இராசமாணிக்கனாரின் மொழி வழிச் சிந்தனைகளுக்கும் சிறந்த சான்றாக அமைந்தது.

தமிழ்மொழியின் தொன்மை, பெருமை இவற்றைத் தமிழர்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே 'தமிழ் மொழிச் செல்வம்', 'தமிழ் இனம்', 'தமிழர் வாழ்வு', 'என்றுமுள தென்றமிழ்', 'புதிய தமிழகம்' என்னும் அவருடைய நூல்கள் தமிழ் மக்களுக்கு அவர்கள் மறந்திருந்த மொழியின் பெருமையை, சிறப்பை அடையாளப்படுத்தின. 'ஒரு மொழி பேசும் மக்கள் தம் மொழியின் பழைமைகளையும் பெருமையையும் வளர்ச்சியையும் நன்கு அறிந்தாற்றான், அம்மொழியினிடத்து ஆர்வமும் அதன் வளர்ச்சியில் கருத்தும் அம்மொழி பேசும் தம்மினத்தவர் மீது பற்றும் கொள்வர். இங்ஙனம் மொழியுணர்ச்சி கொள்ளும் மக்களிடையே தான் நாட்டுப்பற்றும் இனவுணர்ச்சியும் சிறந்து தோன்றும். ஆதலின், ஓரினத்தவர் இனவொற்றுமையோடு நல் வாழ்வு வாழ மொழிநூலறிவு உயிர்நாடி போன்ற தாகும். இம்மொழி நூலறிவு தற்காப்புக்காகவும், தம் வளர்ச்சிக்காகவும் வேண்டற்பாலது என்பதைத் தமிழ் மக்கள் அறிதல் நலமாகும்' என்ற அவர் சிந்தனைகள் இந்நூல்கள் மக்களிடையே வேர் பிடிக்கச் செய்தன.

தமிழ் மக்களுக்கு மொழிப் பற்றையும், மொழியறிவையும் ஊட்டிய அதே காலகட்டத்தில், அவர்களை நாட்டுப்பற்று உடையவர்களாகவும் மாற்றினார். தமிழ் நாட்டின் பெருமையை, வரலாற்றை இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொரு குடிமகனும் நன்கு அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகவே, 'தமிழக ஆட்சி', 'தமிழ்க் கலைகள்', 'தமிழர் நாகரிகமும் பண்பாடும்', 'தமிழக வரலாறு' என்னும் நூல்களை எழுதி வெளியிட்டார். நாட்டுக்காக உழைத்த அறிஞர்களின் வரலாறுகளைச் சிறுசிறு நூல்களாக்கி இளைஞர்கள் அவற்றைப் படித்துய்ய வழிவகுத்தார். இளைஞர்கள் படித்தல், சிந்தித்தல், தெளிதல் எனும் மூன்று கோட்பாடுகளைக் கைக்கொண்டால் உயரலாம் என்பது அவர் வழிகாட்டலாக இருந்தது.

மொழி, இனம், நாடு எனும் மூன்றையும் தமிழர்க்குத் தொடர்ந்து நினைவூட்டல் எழுதுவார், பேசுவார் கடமையென்று அவர் கருதியமையால் தமிழ் எழுத்தாளர்கள் எங்ஙனம் அமைதல் வேண்டுமென்பதற்குச் சில

அடையாளங்களை முன்வைத்தார். 'தாமாக எண்ணும் ஆற்றல் உள்ளவரும் உண்மையான தமிழ்ப்பற்று உடையவருமே நல்ல எழுத்தாளர். தமிழ் எழுத்தாளர் தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் படித்தவராக இருப்பது நல்லது. தாழ்ந்துள்ள தமிழ்ச் சமுதாயத்தை உயர்த்தப் பயன்படும் நூல்களை எழுதுவதையே எழுத்தாளர்கள் தங்கள் சிறந்த கடமையாகக் கருத வேண்டும். சமுதாயத்தில் இன்றுள்ள தீண்டாமை, பெண்ணடிமை, மூட நம்பிக்கைகள், கண்மூடித் தனமான பழக்கவழக்கங்கள் முதலிய பிற்போக்குத் தன்மைகளை வன்மையாகக் கண்டிக்கும் நெஞ்சுறுதி எழுத்தாளர்க்கு இருக்கவேண்டும்' அத்தகைய எழுத்தாளர்கள், 'தமிழர்' என்ற அடிப்படையில் ஒன்று கூடுதல் வேண்டும் என்று அவர் விழைந்தார்.

அதனாலேயே மதுரையில் தியாகராசர் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில் மதுரை எழுத்தாளர் மன்றத்தை உருவாக்கி அது சிறந்த முறையில் இயங்குமாறு துணையிருந்தார். இம்மன்றத்தின் தலைவராக இருந்து மன்றத்தின் முதல் ஆண்டு விழாவில் அவர் ஆற்றிய உரை தமிழ் எழுத்தாளர் கடமைப் பற்றிய அவருடைய அறை கூவலாக அமைந்தது. 'தமிழகத்தில் பல நூற்றாண்டுகளாக ஆட்சி மொழியாக இருந்த நமது தமிழ் பிற்காலத்தில் தனது அரியணையை இழந்தது; இப்பொழுது வளர்ந்து வருகின்றது. எழுத்தாளர்கள் இதனை மனத்தில் பதிய வைத்தல் வேண்டும் அதன் தூய்மையையும் பெருமையையும் தொடர்ந்து பாதுகாப்பதே தங்கள் கடமை என உணர்தல் வேண்டும்.

'மக்கள் பேசுவது போலவே எழுதவேண்டும் அதுதான் உயிர் உள்ள நடை என்று சொல்லிப் பாமர மக்கள் பேச்சு நடையையே எழுத்தாளர் பலர் எழுதி வருகின்றனர். பாமர மக்களது நடை பொதுமக்களுக்கு நன்கு தெரியும்; அதைத் தெரிந்து கொள்ள எழுத்தாளர் நூல்களை விலை கொடுத்து வாங்க வேண்டிய தேவை இல்லை அல்லவா? கொச்சை மொழி பேசும் மக்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான படிப்பினைகளை ஊட்டுவதோடு, இனிய, எளிய, செந்தமிழ் நடையையும் அறிமுகம் செய்து வைப்பதுதான் எழுத்தாளரது கடமையாக இருத்தல் வேண்டும். எழுத்தாளர் தங்கள் எளிய, இனிய செந்தமிழ் நடைக்கு மக்களை அழைத்துச் செல்ல வேண்டுமே தவிர, மக்களுடைய பேச்சு நிலைக்குத் தங்களை இழித்துக் கொண்டு போவது முறையன்று. சிறந்த கருத்துக்களோடு பிழையற்ற எளிய நடையையும் பொதுமக்களுக்கு ஊட்டுவது எழுத்தாளர் கடமை என்பதை அவர்கள் மறந்து விடலாகாது. இதுவே அறநெறிப்பட்ட எழுத்தாளர் கடமை என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

சாதிகள் ஒழிந்து சடங்குகள் அற்ற சமயம் நெறிப்படத் தமிழர், 'தமிழ் வாழ்வு' வாழ வேண்டுமென்பதில் அவர் கருத்தாக இருந்தார். அதனால் தான், வாழ்க்கையின் தொடக்க நிலையான திருமணம் தமிழ்த் திருமணமாக அமைய வேண்டுமென அவர் வற்புறுத்தினார். இதற்காகவே அவர் வெளியிட்ட 'தமிழர் திருமண நூல்', தமிழ்ப் பெரியார்களின் ஒருமித்த வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது. தமிழ் நாட்டளவில் அதற்கு முன்போ அல்லது பின்போ, ஏன் இதுநாள் வரையிலும் கூட வேறெந்தத் தமிழ் நூலும் இதுபோல் தமிழ்கூறும் நல்லுலகத்தின் ஒருமித்த அரவணைப்பைப் பெற்றதாக வரலாறு இல்லை.

'எல்லோரும் வேலை செய்து பிழைக்கவேண்டும். பிச்சை எடுப்பவரே நாட்டில் இருக்கக் கூடாது' 'வலியவர் மெலியவரை ஆதரித்தால் நாட்டில் அமைதியும் இன்பமும் பெருகும்' என்று கூறும் இராசமாணிக்கனார், 'கல்வி மட்டுமே ஒருவரைப் பண்படுத்துவதில்லை. ஒழுக்கம் வேண்டும். எல்லோரும் ஒழுக்கத்திற்கு மதிப்பைத் தரவேண்டும். ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. ஒழுக்கத்தோடு உறையும் கல்விதான் மனிதனை உயர்விக்கும்' என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

மொழி, இனம், நாடு, கல்வி, சமயம், மக்கள் நலம், கோயில்கள் எனப் பலவும் கருதிப் பார்த்துத் தமிழ் மொழி சிறக்க, தமிழினம் உயர, தமிழ்நாடு வளம்பெறப் பயனுறு சிந்தனை விதைகளைத் தம் வாழ்நாள் அநுபவ அறுவடையின் பயனாய் இந்த மண்ணில் விதைத்த இராசமாணிக்கனார், 'உண்மை பேசுதல், உழைத்து வாழுதல், முயற்சியுடைமை, அறிவை வளர்த்தல், நேர்மையாக நடத்தல், பிறர்க்குத் தீங்கு செய்யாமை முதலியன நேரிய வாழ்க்கைக்குரிய கொள்கைகளாம்' என்று தாம் கூறியதற்கு ஏற்ப வாழ்ந்த நூற்றாண்டு மனிதர். மறுபிறப்பு நேர்ந்தால், 'மீண்டும் தமிழகத்தே பிறக்க வேண்டும்' என்று அவாவிக் கட்டுரைத்த தமிழ்மண் பற்றாளர். 'அவரை முழுமையாகப் படம்பிடித்துக் காட்டும் நூற்பா வடிவிலான ஒருவரி சொல்லட்டுமா?' எனக் கேட்கும் அவரது கெழுதகை நண்பர் வல்லை பாலசுப்பிரமணியம் சொல்கிறார்: 'இராசமாணிக்கனார் மதியால் வித்தகர்; மனத்தால் உத்தமர்', 'மனிதரில் தலையாய மனிதரே' எனும் அப்பர் பெருமானின் திருப்பூவணப்பதிகத் தொடர் இப்பெருந்தகையைக் கருத்தில் கொண்டே அமைந்தது போலும்!

**டாக்டர் இரா. கலைக்கோவன்**

# அறிவிப்பு

*ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய* **மணிமேகலை** *மாண்புடைய நூல் என்பதைத் தமிழர் நன்கு அறிவர். இவ்விழுமிய நூலைச் சிறிது கற்றவரோ அல்லது மாணவரோ படித்தல் இயலாது ஆதலின்,* **இந்நூலைப் பெரும்பாலும் தழுவிய வசன நூல்** *ஒன்று தேவை என்பது தமிழ் வளர்ச்சியில் நாட்டங் கொண்டோர் நன்குணர்வர். மணிமேகலை என்னும் பெயருடன் சில வசன நூல்கள் வெளிவந்திருப்பினும், அவை, 'நூலை முற்றும் தழுவியன அல்ல--கதையை மட்டுமே கூறுவன' என்பதை அறிஞர் அறிவர். காப்பியத்தை வாசிக்க இயலாதவர், மணிமேகலை வரலாற்றையும்* **சாத்தனார்** *புலமையையும் பழந்தமிழர் பழக்க வழக்கங்களையும் அறிந்து இன்புற வேண்டுமென்றே இந்நூல்* **இனிய-- எளிய தமிழ் நடையில்** *எழுதப்பட்டுள்ளது. நன்னோக்கம் கொண்டு வெளியிடப்பட்ட இந்நூல், தமிழ் உலகில் நல்வரவேற்புப் பெறும் என்னுந் துணிபுடையேன்.*

**மா. இராசமாணிக்கம்**

## நூல்கள்

### (கால வரிசையில்)

1. நாற்பெரும் வள்ளல்கள் 1930
2. ஹர்ஷவர்த்தனன் 1930
3. முடியுடை வேந்தர் 1931
4. நவீன இந்திய மணிகள் 1934
5. தமிழ்நாட்டுப் புலவர்கள் 1934
6. முசோலினி 1934
7. ஏப்ரஹாம் லிங்கன் 1934
8. அறிவுச்சுடர் 1938
9. நாற்பெரும் புலவர்கள் 1938
10. தமிழர் திருமண நூல் 1939
11. தமிழர் திருமண இன்பம் 1939
12. மணிமேகலை 1940
13. மொஹெஞ்சொதாரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் 1941
14. பாண்டியன் தமிழ்க் கட்டுரை (முதல் தொகுதி) 1941
15. பல்லவர் வரலாறு 1944
16. மறைந்த நகரம் (மாணவர் பதிப்பு) 1944
17. சேக்கிழார் (ஆராய்ச்சி நூல்) 1945
18 இரண்டாம் குலோத்துங்கன் 1945
19. கட்டுரை மாலை 1945
20. செய்யுள் - உரைநடைப் பயிற்சி நூல் 1945
21. முத்தமிழ் வேந்தர் 1946
22. காவியம் செய்த கவியரசர் 1946
23. விசுவநாத நாயக்கர் 1946
24. சிவாஜி 1946
25. சிலப்பதிகாரக் காட்சிகள் 1946
26. இராஜேந்திர சோழன் 1946
27. பல்லவப் பேரரசர் 1946
28. கட்டுரைக் கோவை 1946
29. சோழர் வரலாறு 1947
30. ஆராய்ச்சிக் கட்டுரைகள் 1947
31. பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரு 1947
32. வீரத் தமிழர் - 1947
33. இருபதாம் நூற்றாண்டுப் ஸபலவர் பெருமக்கள் 1947
34. இந்திய அறிஞர் 1947
35. தமிழ்நாட்டு வடஎல்லை 1948

36. பெரியபுராண ஆராய்ச்சி 1948
37. கதை மலர் மாலை (மலர் ஒன்று0 1948
38. இராஜன் சிறுவர்க்குரிய கதைகள் 1948
39. சிறுகதைக் களஞ்சியம் (பகுதி 1- 3) 1949
40. மேனாட்டுத் தமிழறிஞர் 1950
41. தென்னாட்டுப் பெருமக்கள் 1950
42. இந்தியப் பெரியார் இருவர் 1950
43. தமிழ்ப் புலவர் பெருமக்கள் 1950
44. நாற்பெரும் புலவர் 195
45. மறைமலையடிகள் 1951
46. அயல்நாட்டு அறிஞர் அறுவர் 1951
47. சங்க நூற் காட்சிகள் 1952
48. இளைஞர் இலக்கணம்
(முதல் மூன்று பாரங்கட்கு உரியது) 1953
49. விஞ்ஞானக் கலையும் மனித வாழ்க்கையும் 1953
50. பாண்டிய நாட்டுப் பெரும் புலவர் 1953
51. சேக்கிழார் (மாணவர் பதிப்பு) 1954
52. திருவள்ளுவர் காலம் யாது? 1954
53. சைவ சமயம் 1955
54. கம்பர் யார்? 1955
55. வையை 1955
56. தமிழர் திருமணத்தில் தாலி 1955
57. பத்துப்பாட்டுக் காட்சிகள் 1955
58. இலக்கிய அறிமுகம் 1955
59. அருவிகள் 1955
60. தமிழ் மொழிச் செல்வம் 1956
61. பூம்புகார் நகரம் 1956
62. தமிழ் இனம் 1956
63. தமிழர் வாழ்வு 1956
64. வழிபாடு 1957
65. இல்வாழ்க்கை 1957
66. தமிழ் இலக்கணம் (இளங்கலை வகுப்பிற்கு உரியது) 1957
67. வழியும் வகையும் 1957
68. ஆற்றங்கரை நாகரிகம் 1957
69. தமிழ் இலக்கண இலக்கியக் கால ஆராய்ச்சி 1957
70. என்றுமுள தென்றமிழ் 1957
71. சைவ சமய வளர்ச்சி 1958
72. பொருநை 1958
73. அருள்நெறி 1958
74. தமிழரசி 1958

75. இலக்கிய அமுதம் 1958
76. எல்லோரும் வாழவேண்டும் 1958
77. தமிழகக் கலைகள் 1959
78. தமிழக ஆட்சி 1959
79. தமிழக வரலாறு 1959
80. தமிழர் நாகரிகமும பண்பாடும் 1959
81. தென்பெண்ணை 1959
82. புதிய தமிழகம் 1959
83. நாட்டுக்கு நல்லவை 1959
84. தமிழ் அமுதம் 1959
85. பேரறிஞர் இருவர் 1959
86. துருக்கியின் தந்தை 1959
87. தமிழகக் கதைகள் 1959
88. குழந்தைப் பாடல்கள் 1960
89. கட்டுரைச் செல்வம் 1960
90. தமிழகப் புலவர் 1960
91. தமிழ் மொழி இலக்கிய வரலாறு (சங்க காலம்) 1963
92. தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் 1964
93. தமிழ் அமுதம் (மாணவர் பதிப்பு) 1965
94. சேக்கிழார் (சொர்ணம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள்) 1969
95. பத்துப்பாட்டு ஆராய்ச்சி 1970
96. கல்வெட்டுகளில் அரசியல் சமயம் சமுதாயம் 1977
97. இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி 1978
98. இலக்கிய ஓவியங்கள் 1979

### பதிப்பு ஆண்டு தெரியாத நூல்கள்

99. சிறுவர் சிற்றிலக்கணம்
100. பைந்தமிழ் இலக்கணமும் கட்டுரையும்
101. பாண்டியன் தமிழ்க் கட்டுரை (தொகுதி -2)

### ஆங்கில நூல்

102. The Development of Saivism in South India 1964

### பார்வைக்குக் கிடைக்காத நூல்கள்

1. பதிற்றுப்பத்துக் காட்சிகள்
2. செந்தமிழ்ச் செல்வம்
3. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்
4. பள்ளித் தமிழ் இலக்கணம்
5. செந்தமிழ்க் கட்டுரை (முதல், இரண்டாம் புத்தகங்கள்)
6. செந்தமிழ்க் கதை இன்பம் (முதல், இரண்டாம் பகுதிகள்)

# உள்ளுறை


பதிகச் செய்தி ...... 1

1. விழா அறை காதை ...... 3
2. ஊர் அலர் உரைத்த காதை ...... 6
3. மலர்வனம் புகுந்த காதை ...... 9
4. பளிக்கறை புகுந்த காதை ...... 14
5. மணிமேகலா தெய்வம் தோன்றிய காதை ...... 18
6. சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை ...... 22
7. துயில் எழுப்பிய காதை ...... 28
8. மணிபல்லவத்துத் துயர் உற்ற காதை ...... 32
9. பீடிகை கண்டு பிறப்பு உணர்ந்த காதை ...... 34
10. மந்திரம் கொடுத்த காதை ...... 36
11. பாத்திரம் பெற்ற காதை ...... 39
12. அறவணரைத் தொழுத காதை ...... 42
13. ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை ...... 45
14. பாத்திர மரபு கூறிய காதை ...... 48
15. பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை ...... 51
16. ஆதிரை பிச்சையிட்ட காதை ...... 53
17. உலக அறவி புக்க காதை ...... 57
18. உதயகுமரன் அம்பலம் புகுந்த காதை ...... 60
19. சிறைக் கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை ...... 64
20. உதயகுமரன் வெட்டுண்ட காதை ...... 67

21 கந்திற்பாவை வருவது உரைத்த காதை ...... 70

22. சிறை செய் காதை ...... 74
23. சிறை விடு காதை ...... 79
24. ஆபுத்திரன் நாட்டை அடைந்த காதை ...... 83

25.. ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை ...... 87

26. வஞ்சி மாநகரம் புகுந்த காதை ...... 92
27. சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட காதை ...... 94
28. கச்சி மாநகரம் புக்க காதை ...... 96
29. தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை ...... 101
30. 'பவத்திறம் அறுக' எனப் பாவை நோற்ற காதை ...... 103

# மணிமேகலை

## பதிகச் செய்தி

'**சம்பாபதி**' என்பது காவிரிப்பூம் பட்டினத்தின் பழைய பெயர். 'சம்பாபதி' என்பது ஒரு பெண் தெய்வத்தின் பெயருமாம். அத்தெய்வம் காவல் பூண்டு இருந்தமையின், காவிரிபூம் பட்டினம் இப்பெயர் பெற்றது.

மிகப்பழைய காலத்தில் '**காந்தமன்**' என்னும் சோழன் அகத்தியனை வேண்ட, அம்முனிவன்தன் கரகநீரைக் கீழே கவிழ்த்தான். அந்நீரே காவிரியாற்றின் தோற்றமாம். அது பெருக்கெடுந்தோடியது; கீழ்த்திசை நோக்கிச்சென்று 'சம்பாபதி' அயலிற் பாய்ந்தது. அதனைச் சம்பாபதி, "வேணவாத் தீர்த்த விளக்கே, வா" என வரவேற்றாள். அகத்தியன் காவிரியை நோக்கி, "தாயே, நின்னால் இவள் வழிபடுதற்கு உரியவள் " என,

"பாடல்சால் சிறப்பில் பரதத் தோங்கிய
கோடாச் செங்கோல் **சோழர்தங் குலக்கொடி**
கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
தான்நிலை திரியாத் **தண்டமிழ்ப் பாவை**"

யாகிய **காவிரி** சம்பாபதியைத் தொழுது நின்றாள். அப்பொழுது சம்பாபதி, "மஹாப் பிரம்மன் ஆறுவகைத் தெய்வகணப் பிண்டங்களையும் இருபது வகைப்பட்ட பிரம்மகணப் பிண்டங்களையும் படைத்த அந்நாள் முதல் இவ்வூர் என்பெயர் கொண்டு இருந்துவருகிறது. **இவ்வூர்க்கு இனி நின் பெயர் ஆகுக.** நீ வாழ்க" என ஆசீர்வதித்தாள். அன்று முதல் 'சம்பாபதி' என்னும் நகரம், '**காவிரிப்பூம் பட்டினம்**' என வழங்கலாயிற்று.

இப்பெருமை பொருந்திய காவிரிப்பூம் பட்டினத்தில் கணிகையர் மரபில் தோன்றிய **மாதவி** என்பாளுக்கும் வணிக மரபில் தோன்றிய **கோவலன்** என்பாற்கும் பிறந்தவள் **மணிமேகலை** என்பவள். அவளது வரலாற்றை விரித்து உரைப்பது 'மணிமேகலை' என்னும் இந்நூல். இது முப்பது காதைகளை (பகுதிகளை) உடையது. இது '**மணிமேகலை துறவு**' எனவும் பெயர் பெறும். இதனைச் செய்தவர் '**கூலவாணிகன் சாத்தனார்**' என்பவர். இவர் சேர நாட்டு இளம்புலவராய **'இளங்கோ அடிகள்'** முன்னிலையில் இந்நூல் பாடி முடித்தார். இவர் முன்னிலையில் அடிகள் **'சிலப்பதிகாரம்'** பாடி முடித்தார். இது கோவலன்-கண்ணகி வரலாறு பற்றிக் கூறுவது. எனவே, சிலப்பதிகாரமும் மணிமேகலையும் **'இரட்டை நூல்கள்'** என்னலாம்.

# 1. விழா அறை காதை

*(இந்திர விழாவை மாநகரத்தாக்க்கு அறிவித்த பகுதி)*

## இந்திர விழாவின் தோற்றம்

ஒரு காலத்தில் சோழன் ஒருவன் வானத்தில் தொங்கிக் கொண்டிருந்த மதில்களை அழித்த காரணத்தால் **'தூங்கெயில் எறிந்த தொடித்தோள் செம்பியன்'** எனப் பாராட்டப் பட்டான். அச்சோழன் அகத்தியன் கட்டளைப்படி இந்திரனைக் குறையிரந்து வேண்டிக் காவிரிப்பூம்பட்டினத்தில் இருபத்தெட்டு நாள் இந்திரவிழா நடத்தவும் அவ்விழாவில் இந்திரன் அருளவும் வரம் பெற்றான். அவன் காலமுதல் ஆண்டு தோறும் இவ்விழா நடைபெற்று வந்தது. இது, 'இந்திர விழா' எனவும், ' இந்திர கோடணை' எனவும், 'இந்திர கோடணை விழா' எனவும், 'ஆயிரங் கண்ணோன் விழா' எனவும், 'தீவகச் சாந்தி' எனவும் வழங்கும்.

## நகரத்தார் யோசனை

காவிரிப்பூம் பட்டினத்தில், மெய்ந்நூல்களைக் குறைவறக் கற்று உலகியலை நன்குணர்ந்த பெரியோரும் சோதிடரும் வாணிபத்தின் பொருட்டும், கைத்தொழில் பொருட்டும் வந்து குடி புகுந்த பல மொழி பேசும் மக்களும், அமைச்சர்-புரோகிதர் - சேனாபதியர்-தூதுவர்-சாரணர் என்னும் **ஐம்பெருங்குழுவும்**, கரணத்தியலவர்-கருமவிதிகள்-கனகச்சுற்றம்-கடைகாப்பாளர்-நகரமாந்தர்- படைத்தலைவர்- யானைவீரர்- குதிரை வீரர் என்னும் **எண்பேர் ஆயமும்** பிறரும் ஒருங்கு கூடினர்; கூடி "நாம், இந்திர விழவினைச் செய்யத் தவறுவோமாயின், அசுரர் விட்ட தாமதாஸ்திரத்தால் கண்ணும் மனமும் இருண்டு துன்புற்ற முசுகுந்தனை, மந்திரம் உபதேசித்து அத்துன்பத்தி லிருந்து காத்த பட்டினப்பாக்கம், மருவூர்ப் பாக்கம் என்னும் இரண்டிற்கும் இடையில் உள்ள **நாள் அங்காடிப்பூதம்**,

*'மடித்த செவ்வாய் வல்லெயி றிலங்க*
*இடிக்குரல் முழக்கத் திடும்பை செய்திடும்.'*

தவவேடம் புனைந்த வஞ்சகர், கணவனை வஞ்சித் தொழுகும் பெண்டிர், அரசனை வஞ்சிக்கும் அமைச்சர், பிறர் மனை விரும்புவோர், பொய்க்கரி புகல்வோர், புறங்கூறுலோர் முதலியோரைத் தன் பாசக்கயிற்றால் இழுத்துப் புடைத்து உண்ணும் **சதுக்கப் பூதம்** இந்நகரை விட்டுப் போய்விடும். ஆதலால், இந்திர விழவினைச் செய்தலே முறை" என முடிவு கட்டினர்.

## முரசறைத்து அறிவித்தல்

அவர் ஆணைப்படி முரசறையும் முதுக்குடிப் பிறந்தவன் எழுந்தான்; வச்சிராயுதம் நிற்கும் கோவிலில் இருந்த மணங்கெழு அலங்கரிக்கப்பட்ட யானையின் பிடரிமீது ஏற்றினான்; அம்முரசம் இடிபோல் முழங்க, வாள்மறவரும் தேரும் மாவும் களிறும் த;னனைச் சூழச் சென்றான். முதுக்குடிப் பிறந்தோன் யானைமீது அமர்ந்தான்; முரசறைந்து இந்திர விழாவைப் பின்வருமாறு மாநகரத்தார்க்கு அறிவித்தான்.

"திருவிழை மூதூர் வாழ்க! வானம் மும்மாரி பொழிக! மன்னவன், கோள்கள் நிற்கும் நிலைகுலையாமைக்குக் காரண மாகிய செங்கோலினன்ஆகுக! **தீவகக்சாந்தி*** செய்யும் காலத்தில் இந்திரனோடுள்ள நால்வேறு தேவரும் (முப்பத்து மூன்று தேவரும்) பல்வேறு தேவரும் (பதினென் கணங்களும்) இப்பதிக்கு வருவர்." கரிகாற்சோழன் பகைவரை வெல்லப் போன போது இந்நகர் வறிதாய்க் கிடந்தாற் போலத் தேவர் முதலியோர் இங்குவர, இந்திரலோகம் வறிதாய்க் கிடக்கும். ஆதலால், தோரணம் கட்டத்தகும் வீதிகளிலும் சபைகளிலும் பூரணகும்பம், பாலிகைகள், பாவை விளக்குகள் இவற்றைப் பரப்புக; குலைக்கமுகும் வாழையும் வஞ்சியும் பூக்கொடிகளும் கரும்பும் நடுக; திண்ணைகளிலும் தூண்களிலும் வரிசை வரிசையாக முத்து மாலைகளை முறையே நாற்றுக; மூதூர் வீதிகளிலும் எல்லோரும் தங்கும் மன்றங்களிலும் (மரத்தடிகளிலும்) பழமணலை மாற்றிப் புதிய மணலைப்

*__சம்புத் தீவக் காலல் தெய்வம்__ முற்காலத்தில் இத்தீவினர்க்கு அசுரரால் உண்டான தீங்கைப் போக்க இந்திரனுக்கு விழாச் செய்தமையால் இவ்விழவு '**தீவகச் சாந்தி**' எனப் பெயர் பெற்றது.

*பரப்புக; மாடங்களையும் வீட்டு வாயில்களையும் பலவகைப் பட்ட துகிற்கொடி விசேடங்களால் அணி செய்க;*

> *"நுதல் நாட்டத்(து)* ***இறையோன்*** *முதலாப்*
> *பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீ றாக"*

*உள்ள எல்லாத் தெய்வங்களின் கோவில்களிலும் ஆறு அங்கங்களையும் உணர்ந்த அறிஞர் செய்ய வேண்டுவனவற்றைச் செய்வாராக; மணற் பந்தர்களிலும் அம்பலங்களிலும் 'தரும பதம்' அறிந்தவர்கள் உபதேசிப்பாராக; சமயவாதிகள்* ***பட்டி மண்டபத்து*** *ஏறிப் பேசுவராக; பகைவரிடத்தும் கோபம் காட்டாதிருப்பாராக; கலகம் விளையாதிருப்பாராக; மணற் குன்றுகளிலும் தண்பூஞ் சோலைகளிலும் ஆற்றிடைக் குறைகளிலும் நீர்த்துறைகளிடத்தும் இந்த இருபத்தெட்டு நாளும் தேவரும் மனிதரும் ஒருங்கு வதிவர் ஆதலின் யாண்டும் அமைதியே நிலவுவதாக. பசியும் பிணியும் பகையும் நீங்குக! மழையும் செல்வமும் சுரக்க!"*

# 2. ஊர் அலர் உரைத்த காதை

## சித்திராபதி

இந்திர விழா நடக்கும் இருபத்தெட்டு நாட்களில் **மாதவி,** ஆண்டு தோறும் ஆடல் பாடல்கள் நிகழ்த்தல் வழக்கம். ஆயின், மேற் சொன்ன ஆண்டில் அவளோ - அவள் மகளான **மணிமேகலை**யோ ஆடல் பாடல்கள் நிகழ்த்திலர். இதைப்பற்றி ஊரார் பலவாறு பேசிக் கொண்டனர். '**ஊர் அலர்**' கேட்ட **சித்திராபதி** என்னும் மாதவியின் தாய் மனம் மாழ்கினாள்; மாதவியின் தோழியான '**வயந்த மாலை**' என்பாளை அழைத்தனள்; ஊர் அலரை மாதவியிடம் கூறுமாறு ஏவினள்.

## வயந்த மாலையும் மாதவியும்

மாதவியோ - கோவலன் மதுரையில் வெட்டுண்ட செய்தி கேட்டதும் உலகந் துறந்து உடல் மெலிந்து **பௌத்த பிக்குணி** ஆயினள்; அவள் மகளான மணிமேகலையும் அவளைப் பின் தொடர்ந்தாள். இருவரும் பூத்தொடுக்கும் மண்டபத்தில் இருந்த போது வயந்தமாலை அங்குத் தோன்றினாள்; மாதவியின் மேனி வாட்டங் கண்டு வருந்தினாள்; "பொன்னோர் அனையாய், நடந்ததைக் கேள்" என்று கூறத் தொடங்கி, "அரசர்க்காடும் கூத்து, பொது மக்கட்கு ஆடும் கூத்து என்பனவும், இசையும், தாள வழியே வரும் செந்தூக்கு முதலிய ஏழுதூக்குகளும், தாள அறுதியும், யாழுக்குரிய செய்கையும், அக-புற நாடகங்கட்கு உரிய உருக்களும், மத்தள வாத்தியமும், புல்லாங்குழலும், பந்தாட்டமும், சமையல் சாத்திரமும், வாசனைப் பொடி செய்முறைமையும், தூய நீராடலும், பாயல் இடமும், பருவங்கட்கேற்ற ஒழுக்கமும், உடலாற் செய்யப்படும் அறுபத்து நான்கு வகைச் செயலும், பிறர் கருதியதை உணர்தலும், தொடுத்துக் கூறும் சொல்வன்மையும், மறைந்து உறையும் வகையும், சித்திரம் தீட்டலும், மலர்களை ஆராய்ந்து தொடுத்தலும், காலத்துக்கேற்ப அழகு செய்துகொள்ளலும், மணிகளை ஒழுங்குபெறக் கோத்தலும், சோதிடமும்,

பரத்தையர்க்கு உரியவை என்று நூல்களில் கூறப்பட்டுள்ள யாழ் வாசித்தல் முதலிய அறுபத்து நான்கனுள் மேற் சொல்லப் பட்டவை நீங்கலாக உள்ள பிறவும், 'இவை நாடக மகளிர்க்கு உரியவை' என்று திறம்பட வகுக்கப்பட்ட ஓவிய நூலுள் கூறப்படுவனவும் ஆகிய பலவற்றையும் கற்றுப் பெருஞ்சிறப்பு எய்திய நங்கையே! இவை யாவும் பிறர்க்குப் பயன் படா வகையில் நீ துறவு பூண்டது நாணுடைத்து என்று மா நகரத்தில் அலர் எழுந்துள்ளது," எனப் பக்குவமாகப் பகர்ந்தாள்.

அது கேட்ட மாதவி வயந்த மாலையை நோக்கி, "என் காதலன் அடைந்த கடுந்துயர் கேட்டுப் போதல் செய்யா உயிரோடு நின்று இவ்வூரார் புகழுரையை இழந்தேன்; நங்காய்! நாணுத் துறந்தேன். என் செய்வது! உலகில்,

*"காதலர் இறப்பின் கனையெரி பொத்தி*
*ஊதுலைக் குருகின் உயிர்தகத் தடங்காது*
*இன்னுயிர் ஈவர்[1]; ஈயார் ஆயின்,*
*நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்[2];*
*நளியெரி புகாஅர் ஆயின், அன்பரோ (டு)*
*உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்[3]*
***பத்தினிப் பெண்டிர்."***

இம் மூவகைப் பத்தினிப் பெண்டிருள் ஓர் இனத்தையும் சேர்ந்தவள் இல்லை எம் ஆயிழையாள் ( **கண்ணகி** ). அவள் கணவற்குற்ற கடுந்துயர் பொறாது, சோர் கூந்தல் சிறுபுறம் மறைப்பக் கண்ணீரால் நனைப்புண்ட நகுலைத் திருகி மதுரையை எரியுண்ணச் செய்தாள். அம் மாபத்தினையின் மகளாகிய இம் மணிமேகலை அருந்தவ ஒழுக்கம் மேற் கொள்ளத் தக்கவளே அல்லது திருந்தாச்செய்கையாகிய தீத்தொழிலிற் படத்தகாதவள்.

"யான் இம்மாதவர் உறைவிடம் புகுந்ததேன். சிறந்த பக்திமானாகிய **அறவண அடிகள்** அடிகளில் வீழ்ந்து, என் காதலற் குற்றதைக் கூறி உளம் மயங்கி நின்றேன். அவ்வடிகள் அருளோடு என்னே நோக்கி,"

*'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம் ;*
*பிறவார் உறுவது பெரும்பே ரின்பம் ;*

*பற்றின் வருவது முன்னது ; பின்னது*
*அற்றோர் உறுவது ; அறிக'*

என்றருளினார். மேலும் அவர், காமம் - கொலை - கள் - பொய் - களவு என்னும் ஐவகைச் சீலத்து அமைதியும் காட்டி என்னை நல்வழியில் நிறுத்தினார். நீ, இச்செய்திகளை எல்லாம் என் தோழியர்க்கும் தாய்க்கும் விளங்க உரைப்பாயாக" என்றாள்.

வயந்தமாலை, பெறுதற்கரிய மாணிக்கத்தைப் பெருங் கடலுள் வீழ்த்தியவர்களைப் போல மயக்கமுற்ற மனத்தோடு செய்வகை தோன்றாது பெயர்ந்தாள்.

# 3. மலர்வனம் புகுந்த காதை

மாதவி வயந்த மாலையிடம் கூறிய கோவலன் - கண்ணகி செய்திகளைக் கேட்ட மணிமேகலை, கர்மங்களாகிய காரணங்கள் தத்தம் பயனைக் கொடுத்தற்குத் தோற்றும் (ஏது நிகழ்ச்சி) பருவம் வந்ததால், உள்ளகம் வெதும்பினாள். அவளது கண்ணீர் கண் வனப்பழித்துக் கீழிறங்கி, அவள் கட்டிக்கொண்டிருந்த மாலையை நீராட்டியதை மாதவி கண்டு, தாமரை தண் மதி சேர்ந்தாற்போலத் தன் காமர் செங்கையால் அவள் கண்ணீர் துடைத்தாள்; "தூய மலர் மாலை நின் கண்ணீர் பட்டு மாசுற்றது. ஆதலின், நீயே மலர் வனம் சென்று வேறு மலர்களை எடுத்துவா" என்றாள்.

அவ்வளவில் அங்கிருந்த **சுதமதி** என்னும் பார்ப்பனப் பெண், " குரவற்குற்ற கொடுந்துயர் கேட்டுத் தணியாத் துன்பம் தலைத்தலை எய்து, மணிமேகலைதன் மதிமுகம் வாடியது. இவள் கண்கள் துக்க நீரைச் சிந்தின. இவள் வருத்தத்தை காண நான் வருந்துகிறேன். இவள் துன்பத் தோற்றத்தைக் காணின், காமன் தன் படைகளை நிலத்தில் எரிந்து செயலற்றுக் கிடப்பான். இப் பாவையைப் புறத்தே காண்பவர் இவளை விட்டும் நீங்குவரோ? விட்டு நீங்குபவர் பேடியர் அல்லரோ? மேலும் பெண்கள் தனிப் போதல் தவறு. நான் தனிப் போந்த தவறுடைச் செயலால் அடைந்த தீமையைக் கூறுவேன், கேள் ;

## பெண்கள் தனிப் போதல் கேடு

"சண்பை நகரத்தில் **கௌசிகன்** என்னும் பார்ப்பனனின் தனி மகளான யான் ஒரு நாள் ஆராமத்தில் அலர் கொய்துகொண்டு இருந்தேன். அப்போது இந்நகரத்து இந்திர விழாவினைக் காண வானவழியே '**மாருதவேகன்**' என்னும் வித்யாதரன் வந்துகொண்டிருந்தான். அவன், தனியே இருந்த என்னைக் கண்டான். அவன் தாரன், மாலையன், தமணியப் பூணினன் ; பாரோர் காணப் பலர் தொழுபடிமையன் ; என்னைத் தூக்கிக்கொண்டு பறந்தனன். நான் அவன் கைப்பட்டு அவன்

என்னை இன்பத்திற்கு உரியவள் ஆயினேன். அவன் என்னை இந்நகரத்தில் விட்டு நீங்கினேன். நான் தனியே வெளிச் சென்றதால் வந்த கேடிது. ஆதலால், மணிமேகலையைத் தனியே வெளிச் செல்லவிடல் தவறு.

**சோலைகளின் வரலாறுகள்**

"இம்மாநகரில் சோலைகள் பல உள. ஆயினும் அவற்றுள் பல நாம் அணுகுதற்கு உரியவை அல்ல **இலவந்திகை** என்னும் சோலை அரசற்குரியது. அதில் யந்திர வாவி இருக்கின்றது. அச் சோலையில் அரசன் உழையோர் இருப்பர். ஆதலின் அச்சோலையில் நாம் செல்லல் இயலாது. அடுத்தது **உய்யான வனம்.** அதில் மனிதரால் விரும்பப்படாது தேவரால் மட்டுமே விரும்பப்படும் வண்டுகள் மொய்க்கப்பெறாத மலர்களையுடைய மரங்கள் நிறைந்துள்ளன. அவை, வாடாத பூமாலைகளைத் தூக்கி நிற்றலால், 'இவ்வனம் பாசக் கயிற்றையுடைய பூதங்களால் காக்கப்படுகின்றது போலும் ! ' என்று எண்ணிள, அறிவுடை யோர் அவ்வனத்தை அடையார். கதிரவன் சூட்டால் சிறகுகளை இழந்த 'சம்பாதி' இருந்த ***சம்பாதி வனமும்** காவிரிப் பாவையின் தாதையாகிய கவேர முனிவன் பெயர் கொண்டு விளங்கும் **கவேர வனமும்** மனிதர் செல்லத் தக்கவை அல்ல. அவற்றுள் மக்களைத் தீண்டி வருத்துந் தெய்வம் உண்டென்பர். ஆதலால், அறிந்தோர் அவண் செல்லார். எஞ்சி இருப்பது **உவ வனம்** ஒன்றே. அது,

*'அருளும் அன்பும் ஆருயிர் ஓம்பும்*
*ஒருபெரும் பூட்கையும் ஒழியா நோன்பில்*
*பகவன தாணையில் பன்மரம் பூக்கும் '*

இயல்புடையது. அங்குப் **பளிக்கறை மண்டபம்** ஒன்று உண்டு. அது தன்னுட் புகுவார் செய்யும் ஓசையை வெளிச் செல்லவிடாது ; உருவத்தை ம்ட்டும் வெளிக்காட்டும்.

* சம்பாதி – சடாயுவின் உடன் பிறந்தவன், காவிரிப்பூம் பட்டினத்திற்குப் பக்கத்தில் உள்ள சம்பாதி புரத்து (புள் இருக்கும் வேளூர்) ஈசனை இச் சம்பாதி வனத்திலிருந்தே பூக் கொண்டு வந்து பூசித்தான் போலும் ! அதனாற் போலும் இவ்வனம் 'சம்பாதி வனம்' எனப் பெயர் பெற்றது.

### பீடத்தின் பெருமை

அம் மண்டபத்துள் மாணிக்கச் சோதி பரந்த **புத்தனது பதும பீடம்** உண்டு. அப் பீடத்தில் இடப்படும் அரும்புகள் மலரும் ; பல ஆண்டுகள் கழியினும் அதில் இடப் பட்ட மலர்கள் வாடா ; அவற்றில் வண்டுகள் மொய்யா. அதன் பெருமை அறியத்தகுவது: ஒரு தெய்வத்தின் அடிகளைத் துதித்தவராய் மலர்களைப் புத்த பீடத்திற் சேர்ப்பின், அம்மலர்கள் அப்பீடத்திலிருந்து நீங்கி அக் குறிப்பிட்ட தெய்வத்தின் அடிகளிற் சென்று சேரும் ; ஓர் எண்ணமும் இன்றிப் பீடத்தில் இடப்படும் மலர்கள் பல ஆண்டுகள் ஆயினும் அவ்விடத்தை விட்டு நீங்கா. 'இதன் காரணம் என்னை?' எனிற் கூறுவேன், கேள் : 'செய்யும் கருமங்கள் மனத்திற் பொருந்தாத போதும் அவை பலிக்கும்' என்னும் விரதிகள் துன்புறவும், 'மனத்தோடு கூடாத வழிக் கருமங்கள் பலியா ' என்போர்க்கு எடுத்துக் காட்டாகவும் மலரை இட்டுக் காட்டற்கு **மயன்** என்னும் தெய்வத் தச்சனால் இப் பீடம் செய்யப்பட்டது.

இப் பெருமை பொருந்திய உவவனத்திற்கே மணிமேகலை போதற்கு உரியவள். நானும் அவளோடு சென்று மீள்வேன்'' என்றாள்.

### தெருக் காட்சிகள்

பின்னர் மணிமேகலையும் சுதமதியும் புறப்பட்டனர். அவர்கள் சென்ற வழிகளிற் பல காட்சிகள் கண்டனர் ; (1) **களிமகன் காட்சி** ; உறியிலே வைத்த குண்டிகையை உடையவனும் நுண்ணிய பிரம்பை உடையவனும் சினாலயத்தில் இருப்பவனும் உடை நீத்தவனும் காணாத உயிர்களிடத்தும் இரக்கம் செலுத்தபவனும் ஆகிய **சமணன்** ஒருவன் புழுதி படிந்த மேனியனாய் மெலிந்த உடம்போடு வருந்தலையுடைய யானை போலத் தெருவில் வந்துகொண்டிருந்தான். கட்குடியன் ஒருவன் அவனை அடைந்து, ''அடிகளே, உம் மலரடி தொழுதேன். இம் மதுவை உண்ணும் ; உண்டால், காற்றுப் புகாத அறையிற் புகுந்தவர் போல அழுக்குடைய உடம்பிற் புகுந்து அல்லலுறும் உமது உயிர் அவ்வருத்தம் ஒழிந்து மிக்க இன்பத்தை அடையா நிற்கும்,'' என்றான். கள்ளும் ஊனும் கடிந்தவனாகிய அந்நோன்பி, சீலம் இல்லாதவரோடு வாயாற் பேசலும் தக்கதன்றாதலின் அவன் அப்புறம் செல்லுமாறு கையை அசைத்துச் சைகை

செய்தான். களிமகன் செல்லானாய் "தெங்கின் கொழுமடலில் விளைந்த இத் தேறலின்கண் கொலையும் உண்டோ? இதனை உண்டு தெளிந்து இந்த யோகத்தின் உறு பயனைக் காணின், பின்பு என்னைக் கையால் அகற்றுவீர்; இதனை ஒரு முறை யேனும் உண்பீர்" என்று சூளுற்று இரந்து பின் சென்றான். அவனைத் தொடர்ந்து சென்றது ஒரு கூட்டம்.

*(2)* ***பித்தன் செயல்*** *:* மையலுற்ற ஒருவன் அலரி மாலையால் கட்டிய தோள்களை உடையனாய், எருக்கமாலை அணிந்தவனாய், உடல் முழுவதும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, மலரோடும் பொருத்த மற்ற சொற்களைப் பேசி, அழுதலும் விழுதலும் அரற்றலும் கூவலும் தொழுதலும் எழுதலும் ஓடலும் ஒதுங்கி நிற்றலும் நிழலொடு சினத்தலும் போல்வன செய்தான். பலர் அவன் செயலை இரக்கத்துடன் பார்த்து நிற்கின்றனர்.

*(3)* ***பேடிக் கூத்து*** *:* பெண் இயல்பு மிகுந்து ஆண் இயல்பு கலந்த பேடிக் கோலம் இட்டு ஆடும் கூத்து ; சுருங்கிய மோவாய்க் கட்டை, பூங்குழல், பவளச் செவ்வாய், தவளவாள் நகை, நெடுங்கண், வெண்தோடு, கருங்கொடிப் புருவம், அழகிய நுண்ணிய இடை, காந்தள் மலர் போன்ற செங்கை, வட்டுடை முதலியவற்றோடு விளங்கியது அப்பேடிக்கோலம். அப் பேடிக் கூத்துத் திருமால் மகனான **காமன்**, தன் இளவலாகிய (வாணாசுரன் மகளான உழையின்பாற் காதல் கொண்டு வாணானால் சிறைப்படுத்தப்பட்ட) அநிருத்தனை மீட்டற் பொருட்டுச் சேர நகரத்தாடிய ஆடல். இவ்வாடலைக் கண்டு பலர் வீதியில் நின்று கொண்டிருந்தனர்.

*(4)* ***ஓவியங் காண்போர்*** *:* புகாரில் இருந்த அயல் நாட்டு வாணிபர் கட்டிய மாடங்களில் சிற்பாசாரியரால் தீட்டப் பட்டிருந்த வானவர் முதிலியவர் உருவங்கள் கண்டோர் கண்களைக் கவர்ந்தன. அவற்றைப் பலர் கண்டு நின்றனர்.

*(5)* ***சிறுவர் விளையாட்டு*** *:* விழாச் செய்து முடித்த வீதியில் செல்வ மகளிர் சிலர் கூடி நின்றனர்; நின்று பொன் நாணிற் கோத்த நன்மணிக் கோவையும், ஐயவி அப்பிய

நெய்யணிந்த மயிர் முடியும், செவ்வாய்க் குதலையும், சொட்டு நீரால் நனைக்கப்பட்ட ஐம்படைத்தாலியும், விளங்கும் பூணும் உடைய இளம் புதல்வரை - முத்து வடம் தாழவும், மணிக் கோவை அசையவும் பொன்தேரின் மீதுள்ள யானையில் ஏற்றி வைத்தனர்; வைத்து, "ஆலமர் செல்வன் மகன் (முருகன்) விழாவிற்குக் கால் கொள்ளலைக் காண்க" என்று கூற, அதனைக் கண்டு பலர் நின்றனர்.

## கண்டோர் கூற்று

இங்ஙனம் நின்ற ஐவகை மக்களும் அவ்வழிச் சென்ற மணிமேகலையை, முன்னர் விராட நகரத்தில் பேடி வடிவங் கொண்டு சென்ற அர்ச்சுனனைக் கண்டு வியந்து சூழ்ந்து கொண்டவர்களைப் போலச் சூழ்ந்தனர்; சூழ்ந்து, "மிகுந்த அழகுடைய இவளைத் தவவழியிற் புகுத்திய தாய் மிகவும் கொடியவள்; இவள் மலர் பறிக்கச் சோலையுள் புகுவாளாயின், அங்குள்ள அன்னப் பறவைகள் இவள் நடைக்கு நாணுமே! மயில்கள் இவள் சாயலைக் கண்டு ஏங்குமே! கிளிகள் .இவள் சொற்களைக் கேட்டுக் கற்குமே! இவளுடைய நடை, சாயல், கிளவி இவற்றுக்கு அன்னம், மயில், கிளி இணையாகா", என்று பல பாராட்டி, அவள் அழகில் ஈடுபட்டு மயங்கி நின்றனர்.

அவ்வேளையில் மணிமேகலை, செந்தளிர்ச் சேவடி நிலத்தை வடுச் செய்யாவாறு மென்னடை நடந்து, உவவனம் நண்ணினள்.

## சோலைக் காட்சி

அவ்வனத்தில்-குராமரம், வெண்கடப்ப மரம், குருந்த மரம், கொன்றை மரம், மஞ்சாடி மரம், மகிழ மரம், வெட்சி மரம், நாரத்தை மரம், சுரபுன்னை மரம், புன்னை மரம், குட்டிப் பிடவம் என்னும் கொடி, செம்முல்லைக் கொடி, தாழைச் செடி, வெட்பாலை மரம், மூங்கில், அசோக மரம், செருந்தி மரம், வேங்கை மரம், சண்பக மரம், இலவ மரம், முதலியன இருந்தன. அவை, தத்தம் மலர்களைப் பரப்பி வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச் சித்திரச் செய்கைப் படாம் போர்த்தது போலத் தோன்றின. சுதமதி அவ்வுவவனத்தைத் தொழுது காட்ட மணிமேகலை அதனுள் மலர் கொய்யப் புகுந்தாள்.

# 4. பளிக்கறை புகுந்த காதை

## சோலைக் காட்சி

சோலையுட் புகுந்த சுதமதி மணிமேகலையை நோக்கி, "நங்காய், இருட்கூட்டம் சூரியனுடைய ஒளிக்கதிர்களாகிய சேனைக்கு அஞ்சி இங்கு ஒளிந்துகொண்டிருக்கின்றதென்று காண்போர் கூறத்தகும் செறிந்த இருளையுடையது இவ்வனம். இச்சோலையுள் தும்பிகள் வேய்ங்குழலைப் போல இசையைத் தருகின்றன; வண்டுகள் யாழ் போல் ஒலிக்கின்றன; மயில்கள் நடனம் செய்கின்றன. அந்நடனத்தை மந்திகள் மரக் கிளைகளிருந்து காண்கின்றன. நீ இக்காட்சிகளைக் காண்க. தெளிந்த நீருள்ள இக் குளத்தின் நடுவில் மலர்ந்துள்ள தாமரைகளின் இடையில் உயர்ந்து தோன்றும் ஒரு மலரில் அரச அன்னம் மகிழ்ச்சியுடன் அமர்ந்திருப்பதைப் பார். கரையில் மயில் ஒன்று நடனம் செய்தலைக்காண்: அந்நடிப்புக்கேற்பச் சம்பங்கோழி முழவுபோல ஒலிப்பதையும் மரக்கிளைகளில் குயில்கள் இருந்து கூவுதலையும் நோக்கு. தெருவிற் பறக்கின்ற தூசுகளால் மழுங்கிய நினது முகத்தைப்போல- இத்தாமரை மலர்கள், கரைமீதுள்ள தாழையின் மகரந்தத் தூள் விழுந்து ஒளி குன்றியிருப்பதைப் பார். அழகிய நின் விழிகளை மலர்களெனக் கருதி மொய்க்கின்ற வண்டுகளை ஓட்டுகின்ற கையைப் போல- அலர்ந்த தாமரையின்மீது கயல் மீன்கள் பாய்ந்து துள்ளுவதைக் கண்டு சிச்சிலிப்பறவை அதனைப் பற்ற விரையப் பாய்தலையும் மீன் கிடைக்கப் பெறாமல் வருந்துதலையும் காண்க, எனப் பொழிலும் பொய்கையும் காட்டி விளக்கிக்கொண்டிருந்தாள்.

## உதயகுமரனும் காலவேகமும்

**காலவேகம்** என்பது சோழ அரசனது பட்டத்து யானையின் பெயர். அது திடீரெனத் திமிர் கொண்டு, அச்சம் பொருந்திய மேலிடத்திலிருந்து கப்பலைச் செலுத்தும் மாலுமி நடுங்கப் பாய்மரம் அடியிலே முறிய இறுகின பிணிப்பு அவிழ்ந்து பாய் கட்டின கயிறு அறுபட, நடுவிடம் பாழாகிப்

பாய் பீறுண்டு ஒலிப்ப, போந்திசை அறியாது யாங்கணும் ஓடும் சுழல்க ாற்றால் அலைக்கப்பட்ட மரக்கலம் போல-குத்துக் கோற்காரர் செய்வகை தோன்றாமல் நிற்ப, பாகர் இன்றிப் பாகனால் உண்டாகிய பிளவையினையுடைய பரிய முகத்தைக் கையால் துடைத்து, அரசர் வீதியும் தேரோடும் வீதியும் கடைத்தெருவும் கலங்கச்செய்து, 'சம்பாபதி-காவிரிப் பூம்பட்டினம்' என்னும் இரண்டு பெயர்களையுடைய நகரத்தை அச்சமுறச் செய்து, பாகரும் படையடிப்பவரும் வானத்தில் வட்டமிடும் பருந்துகூட்டங்களும் வறியரும் சுழன்று கூப்பிட, நீலமால்வரை நிலத்தில் நடப்பதைப்போல மதங்கொண்டு நடந்தது. இதனை அறிந்த உதயகுமரன் குதிரைமீது சென்று, அக்கடுங்கண் யானையின் கடாத்திறம் அடக்கிக் கட்ட வேண்டிய இடத்தில் அதனைக் கட்டச் செய்தான்; செய்த அவன், கார்காலத்து அலர்கின்ற கடம்பமலரால் தொடுக்கப் பட்ட மாலையை அணிந்த முருகனை ஒத்திருந்தான். சோழர்க்கு உரிய ஆத்தி மாலையை அவன் அணிந்திராவிடில், அவனை முருகன் என்றே மக்கள் எண்ணி இருப்பர்.

## உதய குமரனும் எட்டி குமரனும்

யானையை அடக்கிய உதய குமரன் நாடகக் கணிகையர் தெருவழியே வந்து கொண்டிருந்தான். அப்போது ஒரு கணிகை வீட்டில் இளங்குமரன் ஒருவன் காதற் பரத்தையுடன் யாழின் கோட்டைத் தழவியபடியே எழுதுகோலால் தீட்டப் பெற்ற பாவை போலச் செயலின்றிக் கிடந்தான். அவனைத் தெருப் பக்கத்துச் சாளர வழியே பார்த்த உதய குமரன், "நண்பனே, உனக்குற்றது யாது?" என்று வினவினான். அது கேட்டுத் திடுக்கிட்ட எட்டி* குமரன் தன் காதற்பரத்தையோடு உதய குமரனை வந்து வணங்கி, "செப்பினுள் வைக்கப்பட்ட மலர் புழுக்கத்தால் வாடுதல் போல - தவ வேடத்தால் மணிமேகலை யின் பொலிவு கெட்டுள்ளது. அவள் மலர் வனம் செல்லக் கண்டேன். அவளைக் கண்டதும், அவள் தந்தையான கோவலன் மதுரையில் கொலையுண்ட செய்தி என் நினைவிற்கு அத்துன்ப நிலையிலேயே என் மனம் ஈடுபட்டிருந்ததால் என்னை மறந்து கிடந்தேன்" என்றான். பல நாட்களாக மணிமேலையைப் பெற விரும்பிக் கொண்டிருந்த உதய குமரன், அதுவே தக்க சமயம் என்றெண்ணி, "நான் அவளைக் கண்டு என் தேர் மீது ஏற்றி

எட்டி – வணிகர் அரசனால் பெறும் பட்டப் பெயர்.

வருவேன்" என்று கூறிப் புறப்பட்டான்; மேகங்களைக் கிழித்துச் செல்லும் மதியம் போல மாடங்களை ஊடுருவிச் செல்லும் தன் மணித்தேரைக் கடவி உவவனம் நோக்கிச் சென்றான்.

### தேர் ஒலி கேட்ட மணிமேகலை

உதய குமரன் தேரோசை உவவனத்திருந்த மகளிர் செவிகளிற் பட்டது. உடனே மணிமேகலை சுதமதியை நோக்கி, "உதய குமரன் என் மீது உள்ளமுடையன் என்பதை அவனே சித்திராபதியிடம் கூறியதாக வயந்தமாலை என் தாயிடம் செப்பினாள். இவ்வொலி அவன் தேரொலி போலும்! அவன் என்னைக் காணவே வருகின்றான். நான் என் செய்வேன்!" என்று மனம் கலங்கிக் கூற, சுதமதி நடுக்கம் கொண்ட மயில் போலானாள். அவள் உடனே மணிமேகலையைப் பளிக்கறை மண்டபத்துள் புகுத்தி விட்டாள்; தான் மட்டும் மண்டபத்தின் வெளியே ஐந்து விறற்கிடை தூரத்தில் நின்றிருந்தாள்.

### சுதமதியும் உதய குமரனும்

அப்பொழுது உதய குமரன் தன்னைச்சூழ்ந்து வந்தவரைச் சோலை வாயிலில் நிறுத்தித் தான் மட்டும் தனியே சோலையுட் புகுந்தான்; அங்குள்ள பல வனங்களையும் பார்வையிட்டுக் கொண்டே சுதமதி நின்ற இடத்தை அடைந்தான். அவன் தனியே நின்றுகொண்டிருந்த சுதமதியை நோக்கி, "நீ தனியே நிற்பதை நோக்க விஷயம் விளங்குகிறது. மெல்லியல்புடைய மணிமேகலை ஆடவர் வேட்கை நோயை அறியும் தன்மையள் கொல்லோ! விளையா மழலை விளைந்து மெல்லியல் முளையெயிறு அரும்பி முத்து நிரைத்தனகொல்! அவளுடைய செங்கயல் நெடுங்கண் செவி மருங்கோடி வெங்களை நெடுவேள் வியப்புரைக்குங் கொல்! மாதர் உறைவிடம் விட்டு மணிமேகலை இங்கு வந்த காரணம் யாது? உரைப்பாயாக" என்றான்.

சுதமதி, துவாரம் இல்லாத கீழ் அறையில் அகப்பட்டோர் போல உள்ளம் மயங்கி, "இளமையை மறைத்து முதுமை வேடம் பூண்டு வழக்கை விசாரித்து நீதி வழங்கிய கரிகாற்சோழன் மரபில் வந்த நினக்கு--அறிவும் அமைதியும் அரசியல் முறையும் செறிவளை மகளிர் செப்பலும் உண்டோ? ஆயினும், நான் ஒன்று கூறுவேன், அதனைக் கேட்டருள்:

"வினையின் வந்தது; வினைக்குவிளை வாயது; பனைவன நீங்கில் புலால்புறத் திடுவது; மூப்புவிளி வுடையது; தீப்பிணி இருக்கை; பற்றின் பற்றிடம்; குற்றக் கொள்கலம்; புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை; அவலக் கவலை கையா றழுங்கல் தவலா உள்ளம் தன்பால் உடையது **மக்கள் யாக்கை**".

ஆதலால், ஐயனே, நீ இதனை நன்கு ஆராய்ந்து பார். இவ்வுடலின் இழிதகைமையை நீயே உணர்வாய்", என்று, மணிமேகலையின் உடலை அவன் இச்சியாதிருதற் பொருட்டுப் பொதுப்பட உடம்பின் இழி நிலையை இனிது விளக்கினாள்.

அவள் சொற்கள் அவன் உள்ளத்தைச் சேரா முன்னரே, பளிக்கறை மண்டபத்தில் உள்ள மணிமேகலையின் உருவம் அவன் கண்கட்குப் புலப்பட்டது.

# 5. மணிமேகலா தெய்வம் தோன்றிய காதை

*இளங்கோன் கண்ட இளம் பொற்பூங்கொடியனைய மணிமேகலை, தேவர் வியப்பப் பளிங்காகிய பொருமுகத்திரைச் சீலையை வீழ்த்து, போர் செய்தற்குச் சமைந்த கோலத்தோடு அசுரர் மோகித்து விழும்படி கொல்லிப் பாவை வடிவாய் ஆடிய திருமகளைப் போல--தன்னைக் காண்பவர்க்கு மன்மத நோயை உண்டாக்கினாள். எனவே, உதயகுமரன் வேட்கை விஞ்சியவனாய், பளிக்கறையுள் இருந்த மணிமேகலையைப் பெற விரும்பி, மண்டபச் சுவரைக் கையால் தடவிக்கதவை அறியாது கையற்றான். அவன் சுதமதியை நோக்கி, "நின் இளங்கொடி எவ்வியல் புடையாள்?" என்று வினவினான்.*

### சுதமதி கூற்று

*சுதமதி, "மணிமேகலை, கிரவுஞ்ச மலையை அழித்த முருகனை ஒத்த நினது இளமைப் பருவத்தின் அழகைக் கண்ணாற் பருகுவாள் அல்லள். ஆராயின், பைந்தொடி நங்கை ஊழ்தரு தவத்தள்; சாபமாகிய அம்பையுடையாள்; காமனைக் கடந்த வாய்மையள்" என்று நயமாக நவின்றாள். அது கேட்ட இளங்கோன், "செழும் புனல்மிக்க இடத்து அதனைத் தடுக்கும் அரணும் உண்டோ? காமம் வைரங் கொள்ளின், அதனை நிறுத்துந் தன்மை எதற்குண்டு? அவள் எத்தன்மையள் ஆயினும் எனக்கு உரியவள் ஆகக் கடவள்" எனக் கூறி வெளிச்செல்லப் புறப்பட்டான். அங்ஙனம் புறப்பட்டவன் மீண்டும் சுதமதியை நோக்கி," அழகிய செவ்விய சாயலையுடையோய், சினாலயத்தில் விஞ்சையன் ஒருவனால் விடப்பட்டவள் நீ என்று இவ்வூரார் உன்னைக் கூறுவாரே! நீ எப்படி இவளோடு இங்கு வந்தனை?" என்று கேட்டான்.*

### சுதமதியின் வரலாறு

*சுதமதி அரசிளங்கோவனை நோக்கி. "வார்கழல் வேந்தே, வாழ்க நின் கண்ணி! நன்னெறிற் படரும் உள்ளத்தாயாகுக.*

என்தாயை இழந்த என் தந்தையார் நோற்றுப் பட்டினி விட்டுண்ணும் உணவினர்; மழைவளம் தரும் வேள்விகளைச் செய்கின்றவர்; விஞ்சையனால் 'பிழை மணம்' எய்திய என்னைத் தேடிக் கொண்டு குமரி ஆடச் செல்வோருடன் கூடித் தென்றிசை நோக்கி வந்தார் ; வழியில் செவிலித் தாயென ஓம்பும் தீம்புனற் கன்னியில் நீராட இந்நகரம் வந்தார்; வந்தவர், என்னைத் திடீரெனக் கண்டு 'யாங்ஙனம் வந்தனை? என் மகளே!' எனத் தாங்கக் கண்ணீர் என் தலைமீது உதிர்த்தார். யான் பிழைமணம் எய்தினேன் ஆதலின், பார்ப்பனருடன் சேர்ந்து வாழும் தகுதியற்றவள் ஆயினேன். ஆயினும், தந்தை யார் என்மீது மிக்க அன்புடையவர் ஆதலின், என்னைக் கைவிடாமல் மனைதோறும் சென்று இரந்து உணவு கோடலை மேற்கோண்டார்.

"அவர் ஒருநாள் பிச்சை எடுத்து வரும் போது, பசு ஒன்று அவர் மீது பாய்ந்து வயிற்றிற் குத்திக் குடல் வெளியே வருமாறு செய்து விட்டது. உடனே எந்தையார் அலரிமாலையைக் கையிற் பிடித்தவர் போல இரத்தம் தோய்ந்த குடரைக் கையிற் பற்றிய வராய் யான் இருந்த சமணப்பள்ளியுட் புகுந்து, 'உங்கள் அடைக்கலம்' என்றார். அச்சமணர், 'நீ இவ்விடத்திற்கு உரியவன் அல்லை' என வெகுண்டு கூறி, என்னையும் எந்தையாருடன் துரத்திவிட்டனர்.

"நாங்கள் கண்களில் நிறைந்த நீரை உடையேமாய்த் தெருவில் நின்று,'யாருமற்ற எங்களைக் காப்பவர் இங்கில்லையோ!' என்று புலம்பினோம். அவ்வேளையில்-- மனைதொறும் சென்று ஐயமேற்கும் பாத்திரத்தை உடையவனும், மஞ்சள் நிறமுள்ள ஆடை அணிந்தவனும், கதிர் சுடும் காலத்தில் குளிர்ந்த மதி போல விளங்கும் முகத்தை உடையவனும் ஆகிய சங்கதருமன் என்னும் பௌத்த முனிவன், " என்னுற்றீர்? என்று அருளோடு கேட்டு, எம் செவி நிறைத்தும், எம் நெஞ்சம் குளிரச்செய்தும் தன் கைப்பாத்திரத்தை என் கையிற் கொடுத்தான்; என் தந்தையார் அடைந்த துயரம் போக்க அவரைத் தலைமீது சுமந்து சென்று, புத்த சங்கத்தார் இடத்தை அடைந்தான்; தந்தையார் துன்பத்தை நீக்கினான். அன்று முதல் நான் புத்த சங்கத்தில் வாழ்கின்றேன். அதனால் மாதவி, மணிமேகலை இவர்தம் நட்பு எனக்குக் கிடைத்தது.

"எம்முடைய கடவுளும், இயல்பாகவே தோன்றிய குணங்களை உடையவனும், குற்றமற்ற குணப் பொருளாய் உள்ளவனும், உலக சீலத்தைப் பல பிறப்புகளிலும் பிறந்து பிறந்து உணர்ந்தவனும், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனும், நிர்வாணம் அடைதற்குரிய பருவத்தை உயிர்ப் பன்மைகள் அடையுமாறு அருளறம்பூண்ட ஒப்பற்ற பெரிய மேற்கோளி னாலே தரும சக்கரத்தை உலகத்தில் பல வகையாக உருளச் செய்து வருபவனும், மாரனை வென்றவனும் ஆகிய **புத்தன்** பாதங்களைத் துதித்தலே யான் இப்பொழுது செய்து வருந்தொழில். வேறு யான் சொலற்கில்லை. வேந்தே, வாழ்க" என்று தன் வரலாற்றை விளங்க உரைத்தாள்.

அது கேட்ட உதய குமரன், "ஆயிழையே, நின் திறம் அறிந்தேன். இனி, எங்ஙனமேனும் சித்திரர்பதியினால் மணிமேகலையைப் பெறுவதற்கு முயல்வேன்" என்று கூறி அவ்வனத்தை விட்டு அகன்றான்.

### மணிமேகலையின் மன உணர்வு

உதயகுமரன் சென்ற பின்னர் மணிமேகலை பளிக்கறை யிலிருந்து வெளி வந்தாள்; வந்து சுதமதியை நோக்கி, "இவ்வுதய குமரன், 'இவள் கற்பில்லாதவள்; நல்ல தவ வுணர்வு இல்லாதவள்; வருணக் காப்பிலள்; பொருள் விளையாட்டி' என்று என்னை இகழ்ந்தனன் எனினும், அவன் என்னை விரும்புகிறான்; என் மனமும் அப்புதியவன் பின்னே போனதே ! இதுலோ அன்னாய் காமத்தியற்கை ! இதுவே ஆயின், இதன் திறம் கெடுக " என்று கூறிய வண்ணம் அங்கு நின்றாள்.

### மணிமேகலா தெய்வம் தோன்றல்

அச்சமயம் இந்திர விழாவினைக் காண வந்திருந்த மணிமேகலா தெய்வம், புகார் நகர மங்கை ஒருத்தி போல் உருக்கொண்டு, உவனத்தை அடைந்து, பளிக்கறையில் உள்ள புத்த பீடிகையை வலங்கொண்டு நின்றது; நின்று, "புலவன், தீர்த்தன், புண்ணியன், புராணன், உலகநோன்பில் உயர்ந்தோய் என்பேனோ! குற்றங் கெடுத்தனை, செற்றஞ்செறுத்தனை, முற்ற உணர்ந்த முதல்வா என்பேனே! காமனைக் கடந்தோய், பாது காவலாக உள்ளோய், தீநெறிக் கடும்பகை கடந்தோய் என்பேனே! நினது ஸகஸ்ரார சக்கர ரேகை (ஆயிரரேகை) யுடைய திருந்தடியை துதித்துக் கொண்டிருந்தாள்.

## 'புகார்' எனும் பூங்கொடி

அறிவின் எல்லையைக் கடந்த 'புகார்' என்னும் பூங்கொடி போன்ற நங்கை---பன்மலர் சிறந்த நன்னீர் அகழியைச் சிலம்பாகவும் புள்ளொலியைச் சிலம்போசையாகவும் உடையள்; மதிலையும் மதில் உறுப்புகளையும் மணிமேகலையாக உடையள்; கோட்டை வாயிலில் நிற்கும் கோயில், வச்சிராயுதம் நிற்கும் கோயில் ஆகிய இரண்டையும் எதிரெதிர் ஓங்கிய நகில்களாக உடையள்; ஆத்திமாலை அணிந்த சோழர்க்கு ஊழிகள் தோறும் அரண்மனையாகிய திருமுகத்தை உடையள்; கீழ்த்திசையில் தோன்றும் சந்திரனும் மேற்றிசையில் மறையும் சூரியனும் ஆகிய இரண்டு பொன் தோடுகளை உடையள். இங்ஙனம் சூரியன் மறையும் மாலைப்போதில் காவிரிப்பூம் பட்டினம் (புகார்) என்னும் பூங்கொடி காட்சி பெற்றுக் கவினுற விளங்கினாள்.

## அந்திமாலைச் சிறப்பு

அந்திப் பொழுதில், மலர்ந்த தாமரையில் விளையாடிக் கொண்டிருந்த பெண் அன்னத்தை அம்மலர் குவிந்து மூடிக் கொள்ள, உடனே சேவலன்னம் அம்மலரைக் கிழித்துத் தனது பேடையை அழைத்துக்கொண்டு தெங்கின் மடல்மீது ஏறிக்கொண்டது. பெண் அன்றில் பொழுது அடங்குவதைத் தனது மெல்லிய குரலால் சேவலுக்கு அறிவித்தது. அன்னப் பறவைகள் நிறைந்த வயல்களில் குவளைகளை மேய்ந்து வீடு திரும்பிய பசுக்கள், வழியில் தம் கன்றுகளை எண்ணிக் கத்தினமையால் மடியிலிருந்து ஒழுகும் பால், அவை நடந்து வந்தமையால் உண்டான துகளை அடக்கியது. அந்தணர் செந்தீ வளர்த்தனர்; வளையலை அணிந்த மகளிர் விளக்கேற்றினர்; யாழ்வல்லார் மருதயாழை வாசித்தனர்; கோவலர் முல்லைக் குழல் ஊதினர். போர்க்களத்தில் கணவனை இழந்து தம் சுற்றத்தார் அகத்தைக் கடக்கின்ற பெண்ணைப் போலக் கதிரவனை இழந்து 'அந்திக்காலம்' என்னும் பசலை படர்ந்த உடம்பை உடைய பெண் ஒருத்தி புகார் நகரத்தில் வந்து சேர்ந்தாள்

# 6. சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை

## மணிமேகலா தெய்வமும் சுதமதியும்

அந்திமாலை நீங்கிய பின்னர் மலர்கதிர் மண்டிலம் வந்து தோன்றியது. தூய்மையான சந்திரனிடம் உள்ள களங்கம் சான்றோரிடம் உண்டாகிய குற்றம் போல விளங்கித் தோன்றியது தண்கதிர் மதியம், வெள்ளி வெண்குடத்திலிருந்து பால் சொரிவது போலத் தன்னிடத்திலிருந்து வெள்ளிய நிலவைப் பூமியிற் சொரிந்தது; கள் அவிழ் பூம்பொழிலின் இடையிடையே சொரிந்தது. அவ்வமயம் மணிமேகலா தெய்வம் இந்திர வில்லைப் போல ஒளிவிட்டு அழகைத் தருகின்ற திருமேனியை உடையதாய் விளங்கியது. அத்தெய்வம் உலகில் வசிக்கும் பைந்தொடியாகிச் சுதமதியின் மதிமுகம் நோக்கி "என் இங்கு நிற்கின்றீர்கள்! உங்கட்கு என்னுற்றது?" என்று நயமாய்க் கேட்டது. சுதமதி நடந்ததை நவின்றாள். அது கேட்ட அத்தெய்வம், "உதயகுமரன் மணிமேகலையின்மீது கொண்ட காதல் தணியாதவன்; ஆயினும் இது தவத்தவர் வாழும் வனம் என்பதை எண்ணியே ஒன்றும் செய்யாது அகன்றான். ஆயினும், அவன் சோலைக்கு வெளிப் புறத்தே இருத்தலும் கூடும். ஆதலால் நீங்கள் தெருவழியே போதல் வேண்டா; இச்சோலையின் மேலைச் சுவரில் உள்ள சிறு வாயில் வழியே சென்று சக்ரவாளக் கோட்டத்தை அடையுங்கள். உங்கட்கு யாதொரு கெடுதியும் உண்டாகாது" என்றது.

உடனே சுதமதி அத்தெய்வத்தை நோக்கி, "நீயும் மாருத வேகன் என்னும் விஞ்சையனும் '**சக்கரவாளக் கோட்டம்**' என்று சொன்னீர்கள். ஏனையோர் அதனைச் **சுடுகாட்டுக் கோட்டம்** என்றே கூறுகின்றனர். இதற்குக் காரணம் யாது?" என்று ஆவலோடு கேட்டாள். உடனே அத்தெய்வம், "நீங்கள் இருவரும் நன்றாக் கவனித்துக் கேளுங்கள்; சக்ரவாளக்

கோட்டம் என்பதன் காரணத்தையும் அதன் சிறப்பையும் விளங்கச் கூறுவேன்'' என்று கூறத் தொடங்கியது;

## சுடுகாட்டுச் செய்தி

"இச் சோலையின் அயலில் உள்ள சுடுகாடு காவிரிப்பூம் பட்டினம் தோன்றிய காலத்தே உடன் தோன்றினதாகும். அது நாற்புறமும் வாயில்களையுடைய மதிலால் சூழப்பட்டது. அந்நான்கனுள் ஒன்று, தாம் ஏறி வந்த தேரை வானத்திலேயே சித்திரம் போல நிற்கவைத்துத் தேவர்கள் நுழைந்து செல்லும் வாயில். பிறிதென்று, நெல்லும் கரும்பும். நீரும் சோலையும் அழகாக எழுதப்பட்டிருக்கும் வாயில். வேறென்று, சுண்ணைச் சாந்தினால் உருவங்கள் பல செய்து வைக்கப்பட்டிருக்கின்ற வாயில். மற்றொன்று--மடித்த செவ்வாயினையும் விழித்த கண்களையும் பிறரைப் பிணித்தற்குரிய கயிற்றையும் பிடித்துள்ள சூலத்தையும் உடைய பெரும் பூதம் நிற்கின்ற வாயில் ஆகும்.

" சுடுகாட்டினுள் **துர்க்கை கோயில்** ஒன்று உண்டு. அதைத் சுற்றிலும்--அஞ்சா நெஞ்சமொடு தம் சிகையைத் தாமே மரத்தில் முடிந்துகொண்டு உயிரைப் பலியாகத் கொடுப்போர் தம் தலைகள் தொங்குகின்ற மரங்கள் இருக்கின்றன. பெரும் பலிகள் தருகின்ற பீடம் அமைந்த முன்றிலை உடையது துர்க்கையின் கோயில். அருந்தவர், அரசர், கணவன் இறப்ப உடனே இறந்த பெண்டிர் ஆகிய இவருள் இன்னவர் இன்ன இடத்தே புதைக்கப்பட்டார் என்பதை அறிவித்தற்காக அவரவர் வருணம், தகுதி முதலியவற்றுக்கு ஏற்பச் சிறியனவாகவும் பெரியவனவாகவும் செங்கற்களால் கட்டப்பட்ட பற்பல கோட்டங்கள் இருக்கின்றன. மயான தெய்வங்கட்குப் பலியிடுதற்காகத் தூண்கள் அமைந்துள்ளன. கற்களால் கட்டப்பட்ட திண்ணைகள் உள்ளன. தோரணங்கள் பல ஆங்காங்கே கட்டப் பட்டுள்ளன. நிழல் தரத்தக்க பந்தல்கள் போடப் பட்டுள்ளன.

"அச் சுடுகாடு பல வகைப்பட்ட ஓசைகளை உடையது; பிணங்களைச் சுடவும் வாளாப் போடவும் குழியிற் புதைக்கவும் குழியில் வைத்து வாயிலை அடைக்கவும் தாழியிற் கவிக்கவும் இரவு பகல் வருபவர் ஓசையும், அங்ஙனம் வந்து செல்பவர் ஓசையும் நிறைந்திருக்கும்; சாப்பறைகளின் ஓசையும், இறந்த துறவிகளைத் தொழுபவர் ஓசையும், பிறர் பொருட்டு புலம்பு வோர் ஓசையும், காதைச் செவிடுபடச் செய்யும் நரியின்

ஊளையும், செத்தோரை அழைக்கும் ஆந்தைகளின் அலறுதலும், கோட்டான் குரலும், ஆண்டலைப் பறவைகளின் ஆரவாரமும் கேட்போருக்கு அச்சத்தை விளைக்கும்.

"அங்குத் தான்றி, ஒடுவை, உழிஞ்சில், கான்றை, சூரை, கன்னி முதலிய மரவகைகள் அடர்ந்துள்ளன.

"அம் மயானத்தில் பலவகை மன்றங்கள் அமைந்துள்ளன; பேய்கள் நெருங்கியுள்ள வாகை மரம் நிற்கும் மன்றங்கள், நிணத்தை இறைச்சியோடு தின்று களித்துப் பறவைகள் தங்கியுள்ள விளாமரம் நிற்கும் மன்றங்கள், காபாலிக சமயத்தவர் வாழும் வன்னி மரம் நிற்கும் மன்றங்கள், விரதத்தால் இளைத்த யாக்கையுடைய சிலர் உடைந்த தலைகளை மாலையாகக் கட்டும் இலந்தை மரம் நிற்கும் மன்றங்கள், பிணங்களை உண்போர் களித்து வாழும் வெளியான இடங்களை யுடைய மன்றங்கள் முதலியனவாம்.

"அச் சுடுகாட்டில் கொள்ளிச் சட்டிகளும் மண்டைகளும் பாடைகளும் அறுபட்ட மாலைகளும் உடைந்த குடங்களும் நெல்லும் பொரியும் சிறு பலியாக இடப்பட்ட அரிசி வகைகளும் எங்கும் சிதறிக் கிடக்கும்.

"கொடுந்தொழிலாளனாகிய யமன்---' இவர் தவம் செய்கின்றவர், இவர் பெருஞ் செல்வர், இவர் இப்பொழுதுதான் குழந்தை பெற்ற தாயர், இவர் வாலிபப் பருவத்தர்' என்று பாராமல் எல்லோரையும் கொன்று குவிக்கிறான். அப் பிணங்கள் அனைத்தையும் இச் சுடுகாடு சீரணித்து விடுகிறது. இந்நிகழ்ச்சியை மக்கள் நேரே காண்கின்றனர். ஆயினும் பயன் என்? அவர்கள் நிலையாமையை நினைந்து நல்லறம் புரிந்து உய்வதற்கு வழி தேடாமல், செல்வச் செருக்கில் மூழ்கிக் களியாட்டு அயர்ந்திருப்பாராயின், அம்மக்களைவிட அறிவீனர் வேறு யாருளர்?

## சக்கரவாளக் கோட்டத்தின் வரலாறு

'நங்காய், ஓர் இரவு நிகழ்ந்ததைக் கேள்; **சார்ங்கலன்** என்னும் பார்ப்பனச் சிறுவன் இச் சுடுகாட்டுக் கோட்டத்தை நகரம் என எண்ணியவனாய் உள் நுழைந்தான். அப்போது அவன், என்பு, இறைச்சி, முதலியவற்றைத் தின்று 'மக்கள் யாக்கை என்பு, இறைச்சி, உதிரம் இவற்றால் ஆயது' என்று

உடம்பினிடத்தே பற்றுக்கொண்டுள்ள மன உணர்ச்சியற்ற மாக்கட்கு அறிவிப்பன போல நரிகள் இட்ட ஊளையும், அரிய நுண்ணிய உறுப்புகளைக் குடைந்து உண்டு கழுகுகள் இட்ட நெடிய ஓசையும், கடகம் செறிந்த கையைத் தீநாய் கவ்வித் தின்று திரியும் ஓசையும், சாந்து பூசப் பெற்றுப் பாதுகாக்கப் பெற்ற மார்பை எருவையானது கொத்தித் தின்னும் ஓசையும் கேட்டான். சாம்பல் குவையாகிய அரங்கத்திலே மார்ச்சனை அமைந்த திரண்ட தண்ணுமையாக ஒரு பெண் பிணத்தின் தலையைத் தன் கையில் ஏந்திப் பெண் பேய் ஒன்று ஆடிக் கொண்டே, ' இது மேகமோ - கூந்தலோ? இது கயலோ - கண்ணோ? இது குமிழோ - மூக்கோ? இது இதழோ - முருக்கம் பூவோ? இது பல்லோ - முத்தோ? என்று ஆராயாது, இரக்கமின்றிக் கண்ணைத் தோண்டி எடுத்து உண்டு, வைத்த அடிகளைப் பெயர்த்துத் தணியாத களிப்பினால் கூத்தாடிக் கொண்டிருந்தது. அதைக் கண்ட சார்ங்கலன் நடுநடுக்கினான். அவன் அப் பேயால் பிடிக்கப்பட்டவனாய், ஓடோடியும் இல்லஞ் சென்று, 'தாயே, ஈமச் சுடலையில் வெம்முது பேய்க்கு என் உயிர் கொடுத்தேன்' என்று கூறிக்கொண்டே தாய் முன் வீழ்ந்து இறந்தான்.

"உடனே அவன் தாயாகிய **கோதமை** என்பவள், 'அந்தோ! முதுமைப் பருவம் அடைந்த யானும் என் கணவனும் கண் இல்லாதவர் என்பதையும் கருதாமல் என் மகனை அணங்கோ - பேயோ கொன்றது' என்று புலம்பினாள். பின்னர் அவர் அம் மகனது யாக்கையைக் கையில் ஏந்தி மார்போடு அணைத்துக் கொண்டு, சுடுகாட்டைச் சூழ்ந்த மதில் வாயிலை அடைந்து நின்றாள்; நின்றவள் அந்நகரத்துத் தெய்வமாகிய **சம்பாபதியை** நினைந்து 'சம்பாபதி, நீ இந்நகரத்து நீர்த்துறைகள், மன்றங்கள், வலிய மரங்கள், மக்கள் தங்கும் இடங்கள், கோயில்கள் முதலிய பல இடங்களிலும் இருந்து ஒருவர்க்கும் தீமை நேராவண்ணம் பாதுகாப்பாயே! இன்று என் மகனைக் காவாமைக்குக் காரணம் யாது? உன்னிடம் இருந்த நடுவு நிலைமை இப்பொழுது இல்லையோ? நான் என் செய்வேன்! எனக் கதறினாள்.

"உடனே பொன்னிற் பொலிந்த நிறத்தாள் (சம்பாபதி) கோதமை முன் தோன்றி, 'அம்மே, இவ்விரவில் இச்சுடுகாட்டில் பேய்கள் போக்குவரவு செய்யும் இவ்வாயில் நின்று கொண்டு

மிக்க வருத்ததுடன் என்னை ஏன் அழைத்தனை?' எனக் கேட்டாள். கோதமை, 'ஆதரவற்ற என் அறியாப் பாலகன் இச் சுடுகாட்டினுள் அறியாது நுழைந்தான். இவனைப் பேயோ அணங்கோ அடித்து விட்டது. இதோ, பார்; இவன் தூங்கின்றவன் போல இறந்து கிடக்கின்றான்,' என்றாள். சம்பாபதி, 'அணங்கும் பேயும் ஆருயிர் உண்ணா. இவனது அறியாமையே காரணமாக ஊழ்வினை வந்து இவன் உயிருண்டு கழிந்தது. நீ இத்துன்பத்தை ஒழிப்பாயாக' என்றது. கோதமை, 'என்னுயிர் கொண்டு இவனுயிர் தரின், இவன் கண்ணில்லா என் கணவற்கு உதவியாக இருப்பான். ஆதலின், இவன் இன்னுயிர் தந்து என்னுயிர் வாங்குக' என்று வேண்டினாள்.

"சம்பாபதி இரக்கம் கொண்டவளாய்க் கோதமையைப் பார்த்து, 'ஒருவர் உயிர் உடலை விட்டுப் பிரியின், அஃது உடனே செய்வினைகட்கு ஏற்ப வேறு பிறவி எய்துவது உறுதி. 'இறந்தவரைப் பிழைப்பித்தல் என்பது இயலாத செயல். அஃது எவராலும் செய்தல் இயலாது. இறந்தவரை எழுப்புவோம் என்பது, 'கொலைத் தன்மை அறம்' எனக் கூறும் கொடுந்தொழில் மாக்களின் அவலப் படிற்றுரை ஆகும். அஃது என்னால் இயல்வதன்று. அஃதாயின் அரசர்தம் உயிர்க்குப் பதிலாக உயிர் கொடுப்பவர் இவ்வுலகில் இல்லையே? இச்சுடுகாட்டில் அரசர்க்கென்று ஆயிரக்கணக்கான கோட்டங்கள் அமைந் திருத்தலை நீ அறியாயோ? நீ கூறிய நரக வேதனையைத் தரும் கொடிய வார்த்தையை விட்டு விடு ' என்றனள்.

"கோதமை விட்டாள் இல்லை. அவள் மீட்டும் சம்பாபதியை நோக்கி, 'தேவர்கள் வேண்டிய வரங்களை தருவார்கள் என்று நான்மறை அந்தணர் நன்னூல் உரைக்கின்றதே! மிகப் பெரிய தெய்வமாகிய நீ, நான் கேட்கும் வரம் தரலாகாதா? நீ தராவிடில், யான் இங்குதானே என் உயிரை மாய்ப்பேன்' என்று வருந்திக் கூறினாள். உடனே சம்பாபதி, 'நீ கூறியபடி எத்தேவரேனும் நீ கேட்ட வரத்தைக் கொடுப்பாராயின், யானும் தருவேன்' என்று கூறி, அச்சக்கரவாளக் கோட்டத்துள் உள்ள எல்லாத் தேவரையும் உலகத்துள்ள பிற தேவரையும் கொணர்ந்து கோதமை முன்பு நிறுத்தினாள். அத்தேவர் அனைவரும் ஒருமுகமாகச் சம்பாபதி கூறிய படியே கூறினர். கோதமையும் நல்லறிவு பெற்று உண்மை உணர்ந்தாள்; தன் மகனைச்

சுடுகாட்டில் சேர்த்து வீடு திரும்பினாள். எனினும் மைந்தன் பிரிவாற்றது வருந்தித் தானும் உயிர் துறந்தாள்.

"சம்பாபதியின் ஆற்றல் தோன்ற - எல்லாத் தேவரும் கூடிய இடத்தில் அவர் கூடியதற்கு அடையாளமாக உலக நடுவில் உள்ள மேரு மலையையும், அதனைச் சூழ்ந்துள்ள ஏழு சிறிய மலைகளையும், நான்கு பெருந் தீவுகளையும், இரண்டாயிரம் சிறிய தீவுகளையும், மற்றும் சிறந்த இடங்களையும் ஆங்காங்கு வாழ்வோர் உருவங்களையும் விளக்கி மயனால் உண்டாக்கப் பட்டதால் இது '**சக்கரவாளக் கோட்டம்**' எனப் பெயர் பெற்றது. இது சுடுகாட்டைச் சுற்றியுள்ள மதிலின் அமைந் திருப்பதால், ' **சுடுகாட்டுக் கோட்டம்**' என்றும் கூறப் படும்."

## வானத்தில் பறத்தல்

இவ்வரலாற்றைக் கேட்ட மணிமேகலை, "மக்கள் வாழ்க்கை இதுகோலும்!" என்றாள். அவ்வெல்வை, சுதமதி அங்கேயே தூக்கத்தில் ஆழ்ந்தாள். அப்போது மணிமேகலா தெய்வம் தனது மந்திரத்தால் மணிமேகலையை மயங்கச் 'செய்து, அவளைத் தழுவி எடுத்துக்கொண்டு வானவழியே முப்பது காதம் தெற்கே சென்று, **மணிபல்லவம்** என்னும் தீவில் விட்டுச் சென்றது.

## 7. துயில் எழுப்பிய காதை

## மணிமேகலா தெய்வம் உதயகுமரனுக்கு அறிவுறுத்தல்

மணிமேகலா தெய்வம் மணிமேகலையை மணிபல்லவத் தீவில் விட்டு நீங்கி, மணிமேகலை நினைவால் தூக்கம் பிடியாது புரண்டுகொண்டு இருந்த உதயகுமரன்முன் தோன்றியது; தோன்றி, "மன்னவன் மகனே, அரசனது செங்கோல் மாறுபடு மாயின் கோள்களின் நிலை மாறுபடும்; கோள்களின் நிலை மாறுபடுமாயின் மழைவளம் குறையும்; மழைவளம் குறையு மாயின் உலகத்து உயிர்கள் வாழா: அவ்வுயிர் உலகத்து உயிர்கள் வாழா; அவ்வுயிர்கள் அரசனுடைய உயிர் என்று கூறத் தக்க தகுதியற்று விடும்.

*'கோன்நிலை திரிந்திடில் கோள்நிலை திரியும்;*
*கோள்நிலை திரிந்திடில் மாரிவறங் கூரும்;*
*மாரி வறங்கூரின் மன்னுயிர் இல்லை;*
*மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்*
*தன்னுயிர் என்னும் தகுதியின் றாகும்*

ஆதலால், தவநெறியை மேற்கொண்ட மணிமேகலை மீதுள்ள காதலை இனி விட்டுவிடுவாயாக'' என்று அறிவுறுத்துச் சென்றது.

### மணிமேகலா தெய்வமும் சுதமதியும்

பின்னர் அத்தெய்வம் உவவனத்தை அடைந்தது; அங்குத் தூங்கிக்கொண்டிருந்த சுதமதியை எழுப்பி, "நான் மணிமேகலா தெய்வம்; இவ்வூரில் நடைபெற்ற இந்திர கோடணை விழாவைக் காண வந்தேன். நீ அஞ்சவேண்டா. மணிமேகலைக்குப் பௌத்த நெறியில் செல்லத்தகும் நற்காலம் உண்டானது. ஆதலால் நான் அவளைத் தூக்கிச் சென்று மணிபல்லவத் தீவில் வைத்துள்ளேன். அவள் தன் முற்பிறப்புக் செய்திகளை அறிந்துகொண்டு

இன்றைக்கு **ஏழாம் நாள்** இந்நகரத்தை அடைவாள். அவள் வேற்று வடிவத்தில் இங்கு வருவானாயினும் உனக்கு வெளிப்பட்டுத் தோன்றுவாள். அவள் இங்கு வரும் நாளில் இங்குப் பல அற்புதங்கள் தோன்றும். நான் இங்கு வந்ததையும் மணிமேகலையைத் தூக்கிச் சென்றதையும் மாதவிக் கூறு. மாதவி என்னை நன்கறிவாள்; அவள் மணிமேகலையைப் பெற்ற காலத்தில் கோவலன், 'நமது குலத்தெய்வத்தின் பெயரை இக்குழந்தைக்கு இடுவோம்' என்று கூறி மணிமேகலைக்கு என் பெயர் இட்டான். அன்றிரவு நான். மாதவியின் கனவில் சென்று, 'காமன் கையுற்று ஏங்கும்படி ஆசையைமுழுதுங் கெடுக்கும் தவமாதை பெற்றாய்' என்று கூறினேன். நீ இதனையும் அவளுக்கு நினைப்பூட்டுவாயாக" என்று கூறிச் சென்றது.

## நள்ளிருட் காட்சி

விசாலித்த வீடாகிய நடனசாலையில் இயலாசிரியன் ஆடலாசிரியன் யாழாசிரியன் இசையாசிரியன் குழலோன் தண்ணுமையோன் ஆகிய இவரோடு நின்று அவிநயம் முதலிய கூறுபாடுகளை அறியும் மாந்தர்க்குக் கைத்தலங் காட்டி ஆடல் புரியும் அரங்கியல் மகளிர் தூக்கம் கொண்டனர்; குழல், யாழ், மத்தளம், குடமுழா, இடக்கை முதலிய வாத்தியங்கள் ஒலி இழந்தன; பண்ணின் வகைகளை இசைக்கும் இனிய நரம்புகள் பாட்டில் வல்ல மகளிர் கூட்டத்துடனே ஓசை இழந்து கிடந்தன. கணவன் பரத்தைமையச் சினந்து ஊடல் கொண்டு மகளிர் சிலர் துயின்றனர்; அங்கனம் துயிலாதவர் பலர். சிறுவர் கூட்டத்துடன் வருந்திப் படுக்கையில் அயர்ந்து தூங்கும் குதலை மொழியையும் குறுநடையையும் ஐம்படைத் தாலியையும் உடைய புதல்வர்க்குச் செவிலித்தாயர் வேப்பிலை வெண்சிறு கடுகு ஆகிய கடிப்பகையை எறிந்து தூபங்காட்டி அவர் தமைத் தூங்கச் செய்தனர்; இறப்பில் வாழும் புறாக்களும் நீர் வாழ் பறவைகளும் காவில் உறையும் புள்ளினங்களும் ஓசை அடங்கின . விழாச் சிறப்பு அடங்கி முழ ஓசையும் அடங்கிற்று. அரசன் கோயிலில் நாழிகை வட்டிலால் நாழிகை அறிவோர் ஓசையும், கட்டுத்தறியில் உணவின்றி வாடிப் பிளிறும் மதங்கொண்ட யானையின் கூவலும், கப்பல் ஓட்டி வந்த மாலுமிகள் நெல்லிலிருந்து உற்பத்தி செய்த 'தொப்பி' என்றும் கள் மாந்திக் களிக்கும் களிப்பும், குழந்தை பெற்ற பெண்டிர் வேப்பிலை, வெண் சிறு கடுகு, தூபம் இவற்றை ஏந்திய மகளிருடன் சென்று

குளத்தில் நீராடும் ஓசையும், தமக்குப் பகைவர் இல்லாதிருந்தும் புலிகளை ஒத்த மறவர் பூத சதுக்கத்தை அடைந்து, 'அரசன் வெற்றி பெறுவானாக' என்று கூறிப் பலியிடும் ஓசையும், குழந்தை ஈன்ற மகளிர், பச்சிளங் குழந்தைகள், முதற் சூல் கொண்ட மகளிர், துன்பம் மிக்கவர் முதலியோர்தம் துன்பத்தைப் போக்க வந்த முதலியோர் தம் துன்பத்தைப் போக்க வந்த மந்திரவாதிகள் பேய்கட்குப் பலியிடலால் உண்டான முழக்கமும் பிற ஒலிகளும் நகரில் மிக்கிருந்தன.

இவ்வொலிகளைக் கேட்டு நடுங்கிய சுதமதி, மணிமேகலா தெய்வம் கூறியபடி அச்சோலையைச் சூழ்ந்த மதிலின் மேற்புறத்துள்ள சிறு வாயில் வழியே சென்று சக்கரவாளக் கோட்டத்தை அடைந்து, அங்கிருந்த **உலக அறவியின்** ஒருபுறத்தில் இருந்தாள்.

### கந்திற் பாவை

உலக அறிவியில் சம்பாபதி கோயிலின் கிழக்கே உண்ண தூண் ஒன்றில் தெய்வ கணத்தோனான '**துவதிகன்**' என்பவனது வடிவம் போல மயனால் நிருமிக்கப்பட்ட பாவை ஒன்று இருந்தது. அது முக்காலச் செய்தியையும் கேட்போருக்குக் கூறும் இயல்புடையது. பேச்சுடைமையால் அது '**நாவுடைப் பாவை**' என்னும் சொல்லப்பட்டது. அப் பாவை சுதமதியை நோக்கி, "அசோதர நகரத்து வேந்தனான இரவிவன்மனது மகளே, கச்சநகரத்து அரசனான துச்சயனது மனைவியே, உனது மூத்தாள் ஆகிய தாரை மது உண்டு மயங்கி யானையால் இறக்க, நீயும் அத்துணர் பொறாது இறந்தாய். அத்தாரை தான் மாதவியாகப் பிறந்திருக்கிறாள். அப்பொழுது வீரை என்ற பெயரோடு இருந்த நீ, சண்பையைல் கௌசிகன் மகளாய்ப் பிறந்தாய்; 'சுதமதி' எனப் பெயர் பெற்றனை. முற்பிறப்பில் உன் தங்கையாக இருந்த இலக்குமியோ இப்பொழுது மாதவி மகளாகிய மணிமேகலை. அவள், தன் பழம் பிறப்பையும் உனது பழம் பிறப்பையும் உணர்ந்து இன்று **ஏழாம் நாள்** இந்நகரம் வருவாள். நீ அஞ்சற்க" என்றது.

### காலைக் காட்சி

இரவில் காவல் புரிந்தவர் தூங்கச் சென்றனர்; இரவில் உறங்கிய ஆடவரும் மகளிரும் விழித்தெழுந்தனர்; வலம்புரிச் சங்கங்கள் முழங்கின; புலவர்கள் சொற்போர் புரிந்தனர்;

யானைகள் பேரொலி செய்தனர்; கோழிகள் கூவின; குதிரைப் பந்தியில் இருந்த பரிகள் ஆடின; பறவைகள் ஒலித்தன; பெண்கள் கைகளில் இருந்த வளையல்கள் ஒலிசெய்தன; தெய்வங்கட்குரிய பலி பீடங்கள் பூப்பலி கொண்டன; அணி கலன்களைக் கொண்டுள்ள கடைகள் மலரால் செய்யப்படும் அர்ச்சனைகளைக் கொண்டன; வாத்தியங்கள் முழங்கின; வள்ளல்களின் வாயில்களில் பல பண்டமுழங்கின; வள்ளல் களின் வாயில்களில் பல பண்ட நிறைந்திருந்தன; கதிரவனும் கீழ்த்திசையில் தோன்றினான்.

**சுதமதியும் மாதவியும்**

அக்காலைப் போதில் சுதமதி உலக அறவியை விட்டு அம்படிபட்ட மயில் போல வருந்தி வீதி வழிச் சென்று மாதவியை அடைந்தாள்; அடைந்து, சென்ற இரவில் நடந்த அனைத்தையும் விளங்க விளம்பினாள். மாதவி இவை கேட்டு, நன்மணி இழந்த நாகம் போன்றவள் ஆனாள்; தன் மகள் பிரிவால் இன்னுயிர் இழந்த யாக்கை போல இருந்தாள்

# 8. மணிபல்லவத்துத் துயர் உற்ற காதை

### மணிமேகலை தனித்து வருந்தல் மணிபல்லவம்

மணிமேகலை மணிபல்லவத்தில் மணல் வெளியில் உதிர்ந்து கிடந்த மலர்ப் பள்ளியின்றும் துயில் எழுந்தாள். அவளைச் சுற்றியும் அலைவீசும் கடல் சூழ்ந்திருத்தலைக் கண்டாள்; கழனிகளில் சங்கினால் உழப்பட்ட பள்ளங்களில் முத்துக்கள் விளைதலைக் கண்டாள்; பவளத்தோடு சந்தனக் கட்டைகளைப் புறட்டுகின்ற அலைகளையும், அல்லியும் குவளையும் வண்டுகள் தேன் உண்ணுமாறு கலந்து மலர்ந்துள்ள ஆழமான குளத்தின் கரையையும் கண்டாள்; வளைந்த புன்னையும் செழித்த தாழையும் தரையில் வெயில் படாதவாறு பந்தர் போல் நெருங்கி இருப்பதையும் கண்டாள்; இடம் விட்டு வேறிடத்துப் பிறந்த உயிரே போன்று நின்றாள்; முன்னர்க் காணாதவற்றைக் கண்டாள்; உவவனத்தின் ஒரு பக்கத்தில் தான் இருப்பதாக எண்ணினாள்.

### மணிமேகலை வருத்தம்

அவள் சுதமதியை நினைந்தவளாய், "சுதமதி, நீ யாண்டுச் சென்று ஒளித்தாய்? ஏன் எனக்குத் துன்பம் செய்தாய்? நான் காண்பது கனலோ - நனலோ? என் மனம் நடுங்குகின்றது. அந்நடுக்கம் தீர ஆறுதல் மொழி கூறுவாய். இருள் நீங்கியது; மாதவி வருவாள். சுதமதியே, வருவாயாக. என்னைவிட்டுப் பிரிந்தனையோ! வித்தையால் தோன்றிய விளங்கிழை மடவாள் வஞ்சம் செய்தனளோ? யான் தனியாக இருக்க அஞ்சுகின்றேன்" என்று கூறிப் புலம்பினாள்; புலம்பிக்கொண்டே பலவகைப் பறவைகள் அன்னச்சேவல் அரசனாக ஒன்று கூடிப் பாசடை மன்னர் பாடி போல நீர்ப்பரப்பில் எதிர் எதிர் இருந்த துறையும், அத்துறைசூழ்ந்த நெடு மணற் குன்றமும் யாங்கணும் திரிந்தாள்; கூந்தலை குலைந்து பின் வீழ அரற்றினள்; கூவி அழுதனள்; ஏங்கித் துன்பத்தைப் புலப்படுத்துஞ் சொற்களால் தந்தையை நினைத்து, "எம்மை, இத் துன்பத்திற்கு உள்ளாக்கிய தீவினை

முதிரக் கண்ணகியோடு வேறு நாடு சென்று கூரிய வாளால் வெட்டுண்டு மடிந்த ஐயாவே!" என்று அழுதாள்.

**புத்த பீடிகை**

இங்ஙனம் அழுதுகொண்டிருந்த மணிமேகலை முன் திடீரெனத் தரும பீடிகை ஒன்று தோன்றியது. அது மூன்று முழ உயரமும், ஒன்பது முழ அகலமும் உடையது; வட்டமானது; அதன் மேற்பாகத்தில் புத்தர் பாதங்கள் அமைந்திருந்தன. அது புத்தர் ஆசனம் எனக்கருதி மரங்கள் நறுமலர் சொரியுமாம்; பறவைகள் அதனிடம் சென்று சிறகை உதிர்த்தல் செய்யா. அது, பார்ப்பவர் தம் பழம் பிறப்பை உணர்த்தக் கூடியது. அது தேவர் கோனால் அத்தீவில் இடப்பட்டது. கீழ்த்திசையில் உள்ள நாக நாட்டை ஆண்ட அரசர் இருவர் அப் பீடிகைக்காகத் தம்முள் போர் செய்தனர்; தமதென்று எடுக்க முடியாதவராய், அதன் மீதுள்ள பற்றும் நீங்காராய்ப் போரிட்டனர். அப்பொழுது புத்த தேவர் தோன்றி, 'இவ் வாசனம் எம்முடையது' என்று கூறி அதன் மீது அமர்ந்து, அவர்கட்குத் தரும உபதேசம் செய்தார்.

# 9. பீடிகை கண்டு பிறப்பு உணர்ந்த காதை

## புத்தர் பெருமை

அத் தருமபீடிகையைக் கண்டதுதான் தாமதம்: மணிமேகலையின் காந்தள் மலர் போன்ற செங்கை தலைமேற் குவிந்தன; விழிகள் ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்தன; மின்னற் கொடி ஒன்று முகிலோடு நிலம் சேர்ந்தாற் போல--விளங்கிய விரிந்த கூந்தலையுடைய நுண்ணிடையாளாய மணிமேகலை மும்முறை வலம் வந்து பீடிகையைத் தொழுதாள்; தன் முற்பிறப்பை வழுவின்றி உணர்ந்தாள்; உணர்ந்து, 'மாதவ! நுணி பொருள் உணர்ந்தோய்! நீ காயங்கரையில் உரைத்த தெல்லாம் வாயே ஆகுதல் மயக்கற உணர்ந்தேன். காந்தாரம் என்னும் நாட்டைச் சேர்ந்த பூர்வ தேசத்தில் 'இடவயம்' என்னும் நகரைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்த 'அத்திபதி' என்னும் அரசனது மைத்துனனாகிய பிரமதருமனே! நீ அவ் வேந்தனிடம் சென்று அறப் போதனை செய்கையில், 'இச் சம்புத் தீவில் இற்றைக்கு **ஏழாம் நாள்** நில அசைவு தோன்றும். அப்பொழுது இந்நகரமும் நாக நாட்டில் எழுநூறு யோசனைப் பரப்பும பாதலத்தில் வீழ்ந்து அழியும். ஆதலின், நீ இந்நகரத்தை விட்டு வேற்று நகரம் செல்க' என்று கூறினை. அம் மன்னனும் தன் குடிகளோடு புறப்பட்டு வேற்று நாட்டை நோக்கிப் போனான்; வழியில் 'காயங்கரை' என்னும் ஆற்றின் கரையில் பாடி அமைத்துத் தங்கினான். அவ்வமயம் நீ கூறியபடியே இடவய நகரம் நில அசைவினால் அழிந்து போயிற்று. அது முதல் அரசனும் பிறரும் நின்பால் மிக்க மதிப்புடையராய், உன்னைச் சூழ்ந்து வணங்கி இருப்ப, நீ அவர்கட்கு வீட்டு நெறியை விளக்கிகொண்டிருந்தனை.

## பழம் பிறப்பு

அவ்வமயம் அசோக நகரத்து அரசனான இரவிவன்மன் மனைவியான 'அமுதபதி' என்பவள் மகளாகப் பிறந்த யான்,

அத்திபதி அரசன் தேவியான நீலபதி இடத்திற் பிறந்த 'இராகுலன்' மனைவியாக இருந்தேன். என் பெயர் இலக்குமி. யானும் என் கணவனும் அறவுரை கேட்க வந்து உன்னை வணங்கினோம். அப்பொழுது நீ என்னை நோக்கி, 'இவ் விராகுலன் பதினாறாம் நாள் 'திட்டி விடம்' என்னும் பாம்பு தீண்டி இறப்பான். நீயும் இவனுடன் தீக்குளிப்பாள்; பின்னர் பூம்புகாரிற் போய்ப் பிறப்பாய். அங்கு உனக்கு ஒரு துன்பம் வரும். அப்பொழுது மணிமேகலா தெய்வம் தோன்றி நள்ளிரவில் உன்னைத் தூக்கிச் சென்று ஒரு தீவில் சேர்க்கும். அங்கு நீ நாகநாட்டரசர் தொழுத புத்த பீடிகையைத் தொழுவாய்; தொழுது, உன் பழம் பிறப்பை அறிவாய்' என்றனை நான், 'என் கணவன் எங்குப் பிறப்பான்?' என்றேன். நீ, 'உன்னைத் தூக்கிச் செல்லும் தெய்வமே உன் கணவனைப் பற்றிக் கூறும்' என்றனை. அத்தெய்வம் இன்னும் வரவல்லையே!" என்று ஏங்கி அழுதாள்.

# 10. மந்திரம் கொடுத்த காதை

## ம. தெய்வம் புத்த பீடிகையைத் துதித்தல்

அது சமயம் விரைமலர் ஏந்தி விசும்பூடு இழிந்து பொருவது பூங்கொடி ஒன்று பூமியிற் பொலிந்த தென்னும்படி மணிமேகலா தெய்வம், முந்தைப் பிறப்பை உணர்ந்து நின்ற மணிமேகலை கேட்க, "உயிர்கள் யாவும் அறிவழிந்து நற்செய்திகளைக் கேட்பதை விடுத்து, தீய செய்திகளைக் கேட்டு, அறவொழுக்கத்தினின்றும் மாறுபடுகின்ற காலத்தில் உலகில் அறவொழுக்கம் தலைசிறந்தோங்கக் காரிருளை நீக்கத் தோன்றிய இளஞ் சூரியனைப் போல நீ தோன்றினை. உன் அடிகளைப் பணிந்தேன். உனது வடிவமே ஆகி உனக்காக அமைத்த ஆசனத்தைத் துதிக்கின்றேன்; தலையால் வணங்குகின்றேன்; பூமிசை யேற்றினேன்; துன்பம் நீங்குக" என்று துதித்து வணங்கினது.

## இராகுலன் யாவன்?

உடனே மணிமேகலை அத் தெய்வத்தை வணங்கி, "உன் திருவருளால் என் பிறப்புணர்ந்தேன். என் பெருங் கணவன் யாங்குளன்?" என்று கேட்டாள். அத் தெய்வம், "இலக்குமி!கேள்: நீயும் இராகுலனும் ஒரு நாள் மலர்ச் சோலையில் இருந்த போது நீ இராகுலனுடன் ஊடல் கொண்டனை. அவன் உன்மீதிருந்த பெரு வேட்கையால் உன் ஊடலைத் தீர்க்க உன் அடிகளில் வீழ்ந்து வணங்கினான். அவ்வமயம் இரத்தின தீவிற்குச் சென்று அறவாழி வளர்த்து வந்துகொண்டிருந்த '**சாது சக்கரன்**' என்னும் பௌத்த சாரண முனிவன் உச்சிபோதில் உங்கள் முன் தோன்றினான். நீ அவனைக் கண்டதும் மனம் கலங்கி நடுக்கம் அடைந்து நாணத்துடன் வணங்கினை. இராகுலன், 'இவர் யார்?' என வெகுண்டான். நீ அவன் வாயைப் புதைத்து, 'விசும்பிலிருந்து இறங்கிய இம் முனிவருடைய தாள்களைப் பணியாமல் தீ மொழிப் புகறல் முறையன்று' என்றனை. உடனே இருவரும் முனிவரைப் பணிந்தார்கள்; பணிந்து, 'நாங்கள் உம்'அன்பினர் அல்லோமாயினும், இனிய உணவும் நீரும்

தருவோம்; உண்டருள்க' என்றீர்கள். அவனும் 'அன்னையே, கொண்டுவருக' என்று கூறி, நீ கொடுத்த அமுதை உண்டான். அங்ஙனம் அப் பெரியோனை உண்பித்த அவ்வறமே இப்பொழுது உன் பிறப்பை நீக்கற்குக் காரணமாகியது. அவ்விராகுலனே உவவனத்தில் உன்னைத் தேடிவந்த உதயகுமரன். அதனற்றான் உன் மனமும் அவன் பின் சென்றது. அப்பற்றை மாற்றி நன்னெறியிற் செலுத்தவே நான் உன்னை இங்குக் கொணர்ந்தேன்.

## தாரை – விரை யாவர்?

"இலக்குமி! மேலும் சில சொல்லக் கேள்: முற் பிறப்பில் உன் தமக்கையராக இருந்த தாரையையும், வீரையையும் அங்கநாட்டுக் கச்சய நகரத்து அரசனான **துச்சயன்** என்பவன் மணந்தான். அவன் ஒரு நாள் அவர்களுடன் சென்று மலைவளம் கண்டு கங்கைக்கரையில் தங்கி யிருந்தான். அப்பொழுது **அறவண அடிகள்** அங்குச் சென்றார். அவரைக் கண்ட அரசன் அடிவணங்கி, 'தாங்கள் யார்? இங்குப் போந்த காரணம் யாது?' என்று வினவினான். அடிகள், 'முற்காலத்தில் புத்ததேவர் உலகில் உள்ள எல்லா உயிர்களும் இன்பமுற வேண்டும் எனக் கருதி, ஒரு மலை மீது நின்று அறவுரை போதித்தார். அப்பொழுது அவரது பாதச் சுவடு அம்மலை மீது அமைந்தது. அதனால் அம்மலைக்குப் '**பாத பங்கய மலை**' என்று பெயர் உண்டானது. யான் சென்று அம்மலையை வணங்கி வருகின்றேன். நல்லறி வுடையவர்களே, நீங்களும் சென்று அதனை வணங்கு வீர்களாக' என்றார். அவர்களும் உடனே சென்று அம்மலையை வணங்கினார்கள். அதன் காரணத்தால் தாரையும் வீரையும் முறையே **மாதவியும் சுதமதியுமாகப் பிறந்து** உன்னோடு கூடினர்.

## மூன்று மந்திரங்கள்

"நீ அறிய வேண்டிய பழம் பிறப்புணர்வைப் பெற்றனை; மற்றச் சமயவாதிகளுடைய கொள்கைகளையும் ஒரு காலத்தில் அறியப் போகிறாய். அச் சமயவாதிகள் நின்னை இளையவள் எனக் கருதித் தத்தம் சமய உண்மைகளை உரையார். ஆதலின், நீ அப்பொழுது வேற்றுருக் கொள்க" என்றது. மேலும் அத்தெய்வம் **வேற்றுருவம் தரத்தக்க மந்திரம்** ஒன்றையும் **வான வழியே செல்லத்தக்க மந்திரம்** ஒன்றையும் அவளுக்கு உபதேசித்தது.

அது, “நீ புத்தர் பிரான் கூறியருளிய நல்ல அறவழியிற் செல்லல் உறுதி என்பதை உணர்க” என்று கூறிச் செல்ல எழுந்தது. எழுந்த அது, மீண்டும் கீழிறங்கி வற்து, “சிறந்த விரத ஒழுக்கம் உடையவளே, மக்கள் யாக்கை உணவின் பிண்டம்; இம் மந்திரம் பசியைப் போக்கக் கூடியது. இதனையும் உணர்ந்து கொள்” என்று கூறிப் **பசிப்பிணி போக்கும் மந்திரத்தையும்** உபதேசித்து விண்ணிடை மறைந்தது.

## 11. பாத்திரம் பெற்ற காதை

மணிமேகலை மணிபல்லவத் தீவில் உள்ள வெண்மணற் குன்றுகளையும் விரி பூஞ்சோலைகளையும் கண்டு உலவி வந்தாள். அப்பொழுது தெய்வ வடிவுடன் **தீவதிலகை** என்பவள் தோன்றினாள். அவள் இந்திரன் ஏவலால் புத்தனது பாத பீடிகைப் பாதுகாத்துக் கொண்டு அத்தீவிலேயே இருப்பவன் .அவள் மணிமேகலையை நோக்கி, "கப்பல் கவிழ்ந்ததனால் அல்லலுற்றவள் போல இங்கு வந்துள்ள நீ யாவள்?" என்று கேட்டாள். அதற்கு மணிமேகலை, "பொற் கொடி போல்வாய், நான் சென்ற பிறவியில் 'இராகுலன்' என்னும் அரசனது மனைவி; என் பெயர் இலக்குமி; இப்பொழுது நாடகக் கணிகையாகிய மாதவியின் மகள்; என் பெயர் மணிமேகலை. என் பெயர் கொண்ட தெய்வம் என்னை இங்குக் கொண்டு வந்தது. இப் புத்த பீடிகையால் எனது பழம் பிறப்பை உணர்ந்தேன்" என்று கூறி, "பூங்கொடி போன்ற நீ யார்?" என்று கேட்டாள்.

### அமுத சுரபி

தீவதிலகை, "நான் இத் தீவிற்கு அயலில் உள்ள இரத்தினத் தீவத்தில் மிகவும் உயர்ந்தது விளங்கும் **சமந்தகூட மலை** யுச்சியில் உள்ள புத்த தேவருடைய பாதங்களை வணங்கி இத்தீவிற்கு வந்தேன். அது முதல் இந்திரன் ஏவலால் இத் தருமபீடிகைக்குக் காவல் காப்பவளாக புத்த தேவரது நல்லறத்தைப் பின்பற்றி நடப்பவர் இத்தருமபீடிகையைக் காணின், தம் பழம் பிறப்பு உணர்ச்சியைப் பெறுவர். ஆயின் அத்தன்மை உடையார் உலகில் அரியர். அவர்கட்கே தருமபதம் உரித்தாகும். இஃது உண்மை. பழம் பிறப்பை அறிந்த நீ சிறப்புடையள் ஆனாய். .இப் பீடத்திற்கு முன்பு நெய்தலும் குவளையும் நெருங்கி மலர்ந்திருக்கின்ற '**கோமுகி**' என்னும் குளம் ஒன்று உண்டு. அக்குளத்திலிருந்து ஒவ்வோர் ஆண்டிலும் புத்த தேவர் அவதரித்த **வைசாக சுத்த பௌர்ணமி** அன்று **'அமுத சுரபி'** என்னும் பிச்சைப் பாத்திரம் வெளியில் வந்து காணப்படும். அந்நாள் இந்நாள் ஆகும். அஃது **ஆபுத்திரன்**

கையில் இருந்தது. அதனில் இடப் பட்ட சோறு எடுக்க எடுக்கக் குறையாது. அதன் மகிமையை நீ அறவண அடிகளிடம் கேட்டறிக,'' என்றாள்.

மணிமேகலை மகிழ்ந்து, புத்த பீடிகையைத் தொழுது, தீவதிலகையோடு அக் குளத்தருகே சென்றாள். அப்பொழுது அமுதசுரபி நடுக் குளத்தின்றும் தோன்றி மணிமேகலையின் கையிற் புகுந்தது. பாத்திரம் பெற்ற பைந்தொடி மாத்திரை யற்ற மகிழ்ச்சி எய்தி, புத்த தேவனுடைய பாதங்களைப் பலவாறு துதித்து பணிந்தாள்.

**பசியின் கொடுமை**

பின்னர்த் தீவதிலகை மணிமேகலையை நோக்கி, "பசிப்பிணி என்றும் பாவியானவன் குடிப்பிறப்பழிப்பான்; விழுப்பம் கொல்வான்; கல்விப் பெருமையை நீக்குவான்; 'நாணம்' என்னும் அணிகலனைப் போக்குவான்; உடல் வனப்பை அழிப்பான்; மனைவி மக்களுடன் பிறர் வாயிலிற் சென்று இரக்குமாறு செய்வான். இத்தகைய கொடியவனைக் கொல்பவரது புகழைக் கூற எனக்கு நாவன்மை இல்லை. ஒரு காலத்தில் உலகில் மழை இல்லாமற் போனது. அதனால் உணவுகிடைக்கப் பெறாது வருந்திய **கௌசிகமுனிவர்** நாயின் இறைச்சியைத் தின்னப் புகுந்தார். அவர் முதலில் அவ்விறைச்சியில் ஒரு பாகத்தை இந்திரன் முதலிய தேவர்க்கும் பலியிட்டார். உடனே இந்திரன் எங்கும் மழை பெய்யச் செய்தான். உலகில் விளைபொருள்கள் மலிந்தன. மாநிலத்துயிர்கள் மகிழ்ச்சி அடைந்தன.

*ஆற்றுநர்க் களிப்போர். அறவிலை பகர்வோர்;*
*ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்,*
*மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை;*
*மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்;*
***உண்டி கொத்தோர் உயிர்கொடுத் தோரே.***

ஆதலின், நீ உயிர்களிடம் இரக்கம் கொண்டவளாய் விளங்கி, அவற்றின் பசிப்பிணி போக்கி நன்மை அடைக" என்றாள்.

மணிமேகலை தீவதிலகையை நோக்கி, "முற்பிறப்பில் என் கணவனான இராகுலன் திட்டி விடம் என்னும் பாம்பால்

தீண்டப்பட்டு இறந்தான். அவ் வருத்தம் பொறாது யான் தீக் குளித்தபோது, முன்னர்ச் சாது சக்கர முனிவற்கு உணவு கொடுத்ததை எண்ணிக் கொண்டே உயிர் விட்டேன். அதனற்றான் இப் பிறவியில் இப் பாத்திரம் என் கைப்பட்டபட்டது என்று கருதுகிறேன். இவ்வுலகில் நல்ல அறப்பயனை நுகரும் செல்வர் மனைகளின் வாயில்கள் தோறும் வெயிலென்றும் மழையென்றும் நோக்காது கிழிந்த ஆடையுடன் சென்று வயிற்றுச் சோற்றுக்கு இரக்கும் ஏழைமக்கள் பலர் உளர். அவர்கட்கெல்லாம், ஈன்ற குழந்தையின் வாடிய முகம் நோக்கிப் பால் ஊட்டும் தாயைப் போல-- யானும் இப்பாத்திரங் கொண்டு உணவளித்து இன்பம் பெற விழைகின்றேன்'' என்றாள்.

**புகாரை அடைதல்**

தீவதிலகை அவளை ஆசீர்வதித்து, ''இனி நின் ஊர்க்கு நீ செல்க'' என்றாள். மணிமேகலை தீவதிலகையின் பொன்னடி வணங்கி, மாபெரும் பாத்திரம் மலர்க்கையில் ஏந்தியவளாய்ப் புத்த பீடிகையைத் தொழுது வலங்கொண்டு, புகார் நோக்கி பறந்தாள்; ''தெய்வம் உரைத்த ஏழு நாள் ஆகியும் என் மகள் வரவில்லையே!'' என்று கவன்றுகொண்டிருந்த மாதவிமுன் வந்து நின்றாள்; நின்றவள், மாதவி சுதமதி இவர்தம் முற்பிறப்பை உணர்த்த விழைந்து, ''இரவிவன்மன் ஒருபெரு மகளே, துச்சயன் தேவி, அமுதபதி வயிற்றில் தோன்றித் தாரை - வீரை என்னும் சகோதரிகளாக விளங்கிய மாதரே, நீவிர் தாய்மார் ஆனீர். நும்மடி தொழுதேன். நீவிர் அறவண அடிகள்பால் நல்லுரை பெற்றுப் பிறவிளை அறுப்பீர்கள். இப்பாத்திரம் ஆபுத்திரன் வைத்திருந்தது; பசிப்பிணியைப் போக்குவது. இதனை நீவிர் தொழும்'' என்றாள். அவ்விருவரும் அதனைத் தொழுதனர்; மணிபல்லவத் தீவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழ்ந்திருந்தனர்.

# 12. அறவணரைத் தொழுத காதை

## அறவண அடிகள்

மணிமேகலை தீவதிலகை கூறிய **அறவண அடிகளைத்** தரிசித்தற்கு அவாவி, மாதவியோடும் சுதமதியோடும் புறப்பட்டுப் பௌத்தசங்கத்தை அடைந்தாள்; நரைமுதிர் யாக்கையிடையவரும் நடுங்கா நாவினரும் உரைமூதாளரும் ஆகிய அறவண அடிகளைக் கண்டடிபணிந்தாள்; உதய குமரன் உவவனத்துக்கு வந்தது முதல் தீவதிலகையை விட்டுப் பிரிந்து வந்தது முடிய விளங்க உரைத்தாள். ‘ஆபுத்திரன் திறம் அறவண அடிகள்பால் கேள்’ எனத் தீவதிலகை கூறியதையும் கூறினாள். இவை அனைத்தையும் கேட்ட அடிகள் தணியா இன்பம் தலைத்தலை மேல்வர முகமலர்ச்சியுடன், “குழந்தாய், முன் ஒருநாள் நான் பாதபங்கய மலையை அடைந்து புத்த தேவருடைய அடியிணைகளை வணங்கி மீண்டேன்; வழியில் கச்சய நகரத்து வேந்தனாகிய துச்சயனை ஒரு சோலையிற் கண்டேன்; கண்டு, “நீயும் நின் மனைவியரும் சுகமோ?” என்றேன். அவன் துயருற்று அழுது, ‘தாரைகளி மயக்கத்தோடு புதிதாகப் பற்றி வந்த யானைமுன் சென்று உயிர் நீர்த்தாள்; அது கேட்ட வீரை வருந்தி மாடிமீது நின்றும் கீழ் வீழ்ந்திறந்தாள்’ என்றான். நான் அவனை அறிவுறுத்துத் திரும்பினேன். அத் தாரையும் கூத்தாடுவோர் வேற்றுருக் கொண்டு வந்தது போல இங்கு மாதவியாகவும் சுதமதியாகவும் வந்துள்ளனர்.

## புத்த தேவர் பெருமை

“பிறவியையும் புண்ணியத்தோடு கூடிய வழியையும் முறைப்படி உணர்ந்த நறுமலர்க்கோதாய், கேள்; இவ்வுலகில் புத்ததேவர் உரைத்த அறவுரைகள் பெருகாமையால் மக்கள் நன்னெறிச் சேறலை அறியாராய், தீய வழிகளிற் சென்று கொண்டிருந்தனர். பௌத்த தருமம் பனியால் மறைப்புண்ட பகலவனைப் போல உலகில் நிலைபெற்றிருந்தே அன்றிப் பரவவில்லை. சிறிய நாராசம் நுழைந்த மணித்துளை உள்ளே

பெருங்கடல் ஓடாதாயினும், சிறிதளவு நீரேனும் புகுதல் போல - மக்கள் மனத்தில் பௌத்த தருமம் முழுவதும் பதியாவிடினும் சிலவேனும் படட்டும் என்னும் கருத்தோடுதான் யான் அறவுரை கூறிவந்தேன். ஆயினும் பயன் இல்லை. அக்காலத்தில் யான் எவ்வளவு உணர்த்தியும் மக்கள் உணரவில்லை. இதனைச் சக்கரவாளத்துத் தேவர்கள் அறிந்து, துடிதலோகத்தில் உள்ள புத்ததேவர் பாதங்களிற் பணிந்து கூறினர். அவர், இருள் பரந்த உலகில் சூரியன் தோன்றினாற்போல ஆயிரத்து அறுநூற்றுப் பதினாறாம் ஆண்டில் தோன்றுவார். அதன்பின் பெரிய குளத்துள் சிறிய மதகின் வழியே தண்ணீர் பாய்ந்து நிரம்புதல் போல மக்கள் உள்ளத்தில் செவியின் வழியே பல நல்ல அறவுரைகள் சென்று பதியும். அன்றியும், கதிரவன், தோன்றும் காலத்தில் அவனுடைய கிரணங்களைக் காட்டும் சூரிய காந்தக்கல்லைப் போலப் புத்த ஞாயிறும் தீங்கின்றி விளங்கும்; விண் மீன்கள் விளக்க முற்றிருக்கும்; மழைவளம் குன்றாது; மாநிலம் செழிப்புறும் ; மெல்லிய யாக்கையுடைய உயிர்கள் துயருறா; காற்று வலமாகச் சுழன்று வீசும்; மலைகள் பல வளங்களை நல்கும்; அலைகடல் அளவற்ற செல்வங்களை அளிக்கும்; பசுக்கள் கன்றுகட்கு வயிறார ஊட்டிக் கலங்கள் நிலையவும் பால் சொரியும் ; பறவைகள் இன்பத்தில் மூழ்கித் தம் கூடுகளை விட்டு நீங்கா ; மக்கட்கும் மாக்கட்கும் உள்ள பகைமை அகலும்; துன்ப மூட்டும் நரகரும் பேய்களும் ஒழிவர்; மக்கள் கூன் வடிவத்தையும் குறுகிய உருவத்தையும் ஊமைத் தன்மையையும் செவிட்டு இயல்பையும் விலங்கு நிலையையும் மயக்க குணத்தையும் அடையார். இத்தகைய பெருங்காட்சி யுடன் தோன்றும் அறவாழி அந்தணன் அருளறத்தைக் கேட்டவர் துன்பத்திற்குக் காரணமாகிய பிறவியினின்று நீங்குவர். ஆதலின், அப்பெருமான் இணைபடிகளை இறைஞ்சுதலை யான் என்றும் மறப்பதில்லை.

**கடமை உணர்த்தல்**

"நீ இந்நகரில் சில அற்புதங்களைச் செய்வாய். அவை நிகழ்ந்த பின்னரே எனது அறவுரை உன்மனத்திற் பதியும். மாதவியும் சுதமதியும் பாதபங்கய மலையைத் தரிசித்த பாக்கியத்தால் பிற்காலத்தில் உன்னுடன் சேர்ந்து புத்த தேவருடைய திருவடிகளை வணங்கி, வினைகளிலிருந்து விலகி,

வீட்டை அடைவர். உயிரை உடலில் நிலை பெறச் செய்யும் அருமருந்தாகிய மிகச் சிறந்த அமுத சுரபினை நீ பெற்றுள்ளனை. மக்கள் தேவர் என்னும் இரு சார்க்குப் 'பசிப்பிணி தீர்த்தலே சிறந்த அறம்' என ஆன்றோர் அறைந்துள்ளனர். ஆதலின், நீ இனி எல்லா உயிர்களின் பசித்துன்பத்தையும் நீக்கி அருள்க" என்றார். மணிமேகலையும் "அங்ஙனமே செய்வேன்" என்று வணங்கினாள்.

# 13. ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை

## ஆபுத்திரன் பிறப்பு

வாரணாசியில் அந்தணன் 'அபஞ்சிகன்' என்பான் மனைவி '**சாலி**' என்பவள் கற்புத் தவறினாள்; அத்தவற்றைப் போக்கத் தான் சூல் உற்றிருந்ததையும் பொருட் படுத்தாமல் குமரியாட வந்தாள்; வந்தவள் பாண்டியநாட்டில் கொற்கைக் கருகில் ஆயர்பாடியில் ஓர் ஆண் மகவைப் பெற்றாள் ; இரக்கமற்றவளாய் அக்குழவிளை விட்டு அகன்றாள். அக்குழவி அழுது கொண்டிருந்தது. ஒரு பசு அதனை நெருங்கிப் பாலுட்டி ஏழு நாள் காத்தது. ஏழாம் நாள் அவ்வழியே 'வயனங்கோடு' என்னும் ஊரிலிருந்து தன் மனைவியோடு வந்துகொண்டிருந்த '**பூதி**' என்னும் பார்ப்பனன், குழந்தையைக் கண்டு மகிழ்ந்து, 'இம்மகன் ஆமகன் அல்லன்; என் மகனே' எனக் கூறி எடுத்து மனைவியிடம் ஈந்து ஊரை அடைந்தான்; '**ஆபுத்திரன்**' என்று அம்மகனுக்குப் பெயரிட்டு வளர்த்து வந்தான்; அப்பாலகன் நன்னூற்களைக் கற்று வல்லவன் ஆயினன்.

## ஆபுத்திரனும் மறையவரும்

ஒருநாள் ஆபுத்திரன் அவ்வூர் அந்தணன் வீட்டுக்குச் சென்றான். அவ்வீட்டில் இருந்த தூணில் பசு ஒன்று கட்டப் பட்டிருந்தது. அது வேள்வியில் பலியிடற் பொருட்டு நிறுத்தப் பட்டிருந்தது. அது வேடர் கையில் அகப்பட்ட மான் போல அஞ்சிக் கதறியது. அதன் துன்ப நிலையைக் கண்ட ஆபுத்திரன் நெஞ்சு நடுக்குற்றுக் கண்ணீர் உகுத்தான். 'இதனை இரவில் அவிழ்த்துச் சென்று காப்பேன்' என்று தனக்குள் முடிவு செய்து கொண்டான்; ஓரிடத்தில் மறைந்திருந்து, இரவில் அப்பசுவைக் கட்டவிழ்த்து வெளிக் கொணர்ந்தான்; அதனுடன் காட்டு வழியிற் சென்றுகொண்டிருந்தான். வேள்விப் பசுவைக் காணாத பார்ப்பனர் காட்டிடை ஓடி ஆபுத்திரனைப் பிடித்துக் கொண்டனர்; நீ இப்பசுவைக் கொண்டுவரக் காரணம் யாது?

கூறு. இன்றேல், உன் உயிரைப் போக்கி விடுவோம்' என்று கோலால் துன்புறுத்திக் கேட்டனர். ஆபுத்திரனை அடித்த அந்தண உவாத்தி மீது வேள்விப் பசு பாய்ந்து, தன் கொம்பால் அவன் குடரைச் சரியச் செய்து காட்டினுள் ஓடி மறைந்தது.

ஆபுத்திரன் அவர்களை நோக்கி, "என்னைத் துன்புறுத்த வேண்டா. நான் சொல்வனவற்றைக் கேட்க. அரசனால் விடப்பட்ட மேய்ச்சல் நிலத்தில் தானே முளைத்திருக்கும் புல்லை மேய்ந்து, மக்கள் தோன்றிய நாள் முதல் தனது இனிய பாலை இரக்கத்தோடு ஊட்டும் இப்பசுவினிடத்தில் உங்கட்கு உண்டான சீற்றம் யாது? வேதத்தை உணர்ந்த அந்தணர்களே, வெகுளாமற் பதில் கூறுக" என்றான்.

நான் மறையாளர், "மன்னுயிர் முதல்வனாய திருமால் மகன் (பிரமன்) எமக்கருளிய அருமறை நன்னூல் அறியாது இகழ்ந்தனை. நீ அறியாமை நிறைந்த உள்ளத்தை உடையவன். நீ பசுமகன் என்பதை உணர்த்திவிட்டனை," என்றிகழ்ந்தனர். உடனே ஆபுத்திரன், "பசுவின் மகனான அசலனையும், மான் மகனாக சிருங்கியையும், புலி மகனான விரிஞ்சியையும், நரியின் மகனான கேச கம்பளனையும் உம் குலத்து முனிவர் கூட்டங் களாகக் கொண்டு போற்றி வருகின்றீர்களே! அங்ஙனம் இருப்ப, ஆவின் மகன் இழிந்தவனாதல் எங்ஙனம்? 'ஆபுத்திரன் இழிந்தவன்' என்று உங்கள் வேதத்துள் கூறப்பட்டுள்ளதோ?" என்று கேட்டான். அவ்வமயம் ஆண்டிருந்தோருள் ஒரு பார்ப்பனன், "இவனது பிறப்பை நான் அறிவேன். வடமொழி யாட்டி ஒருத்தி, தன் உறவினரை விட்டுத் தனித்து வந்து குமரியாடித் தளர்ந்த நடையுடன் வந்து கொண்டிருந்தாள். அவள் பெயர் சாலி என்பது. அவளைக் கண்டநான், 'உன் ஊர் எது? ஏன் இங்கு வந்தனை?' என்று கேட்டேன். அவள் "நான் இருப்பது வாரணாசி கற்புக் கெட்டேன்; குமரியாடப் போந்தேன்; கொற்கைக்கருகில் ஆயர்பாடியில் ஆண்மகவு ஈன்றேன்; அதனை அங்குத் தானே விட்டு விட்டுச் சென்றேன். எனக்கு எப்படி நற்கதி கிடைக்கும்!" என்று கூறி அழுதாள். அவள் மகனே இவன். இதை இயம்புவதாற் பயன் இல்லை என்று கருதி இதுகாறும் பேசாதிருந்தேன். புலை மகனாகிய இவனைத் தொடாதீர்கள்" என்று கூறி முடித்தான்.

ஆபுத்திரன் வேண்டுமென்றே சிரித்து, "மாமறை மாக்கள் குலம் இன்னதென அறிவீர்கள்? வசிட்டன் அகத்தியன் ஆகிய உங்கள் முன்னோர் இருவரும் நான்முகன் முன் தோன்றிய வேதாசியான திலோத்தமையின் பிள்ளைகள் அல்லவா? உங்கள் செய்தி இங்ஙனம் இருப்பச் சாலி மட்டும் குற்றம் உடையளோ?" என்றனன். இவை அனைத்தையும் கேட்டு நின்ற ஆபுத்திரனது வளர்ப்புத் தந்தை அவனைத் தன் மனைக்கு வரவேண்டா எனக் கூறிவிட்டான்.

பின்னர் ஆபுத்திரன் ஐயக்கலன் ஏந்திப் பிச்சை எடுக்கச் சென்றான். பார்ப்பனர் 'இவன் பசுவைத் திருடியவன்' என்று இகழ்ந்து, அவன் ஏந்திநின்ற பாத்திரத்தில் கற்களை இட்டுத் துன்புறுத்தினர். அதனால் அவன் செல்வர் வாழும் தென்மதுரையை அடைந்தான்; கலைமகள் கோட்டத்து வாயிலில் உள்ள மன்றில் தங்கினான்; வீடு தோறும் சென்று ஐயமேற்றுக் குருடர், செவிடர், நொண்டிகள், அநாதையர், நோயாளர் இன்னவர்க்கு இன்புற அமுதளித்து, மிகுந்ததைத் தானும் உண்டு காலம் கழித்து வந்தான்.

# 14. பாத்திர மரபு கூறிய காதை

## அமுத சுரபி

இங்ஙனம் ஆபுத்திரன் தொண்டு செய்து வந்த போழ்து, மழைத்துளி சிந்திக்கொண்டிருந்த நள்ளிருளில் வருந்தி வழி நடந்து வந்தோர் சிலர் அம்பலப் பீடிகையை அடைந்தனர் ; ஆபுத்திரனை எழுப்பித் தம் பசிப்பிணியைக் கூறிச் சோறு கேட்டனர். ஆபுத்திரன் அந்நள்ளிருளில் அவர்கள் பசிப்பிணி போக்க வகை அறியாது விழித்தான். அவ்வெல்வை கலை நியமத்துள்ள 'சிந்தாதேவி' (கலைமகள்) தோன்றி, "ஆபுத்திரனே, வருந்தேல். இப்பிச்சை ஓட்டைப் பெறுக. இந்நாடு வறுமை எய்தினும் இவ்வோடு வறுமை எய்தாது. இதில் இருக்கும் உணவு, வாங்குவோர் கையை வருத்துமே அன்றித் தான் சிறிதும் குறைவுறாது" என்று கூறி, 'அமுத சுரபி' என்னும் அக்ஷயப் பாத்திரம் ஒன்றை அவன் கையிற் கொடுத்தாள்.

ஆபுத்திரன் அவளை, "சிந்தாதேவி! செழுங்கலை நியமித்து நந்தா விளக்கே! நாமிசைப் பாவாய்! வானோர் தலைவி! மண்ணோர் முதல்வி! ஏனோர் உற்ற இடர் களைவாய்" என்று போற்றி, அங்கிருந்த பசியாளரது பசியைப் போக்கினான். அன்று முதல் அவனைப் பலர் சூழ்ந்திருந்தனர். விலங்குகளும் பறவைகளும் அவனைச் சூழ்ந்து பின் தொடர்ந்தன. அவன் எல்லா உயிர்களையும் உண்டி கொடுத்துக் காப்பவனாக விளங்கினான். அவன் புகழ் உலசெலாம் பரவியது.

## ஆபுத்திரனும் ஆயிரங் கண்ணனும்

'பாண்டு கம்பளம்' என்பது வெள்ளைக் கம்பளமாகிய ஆசனம். இதனை உடையவன் இந்திரன். அஃது, உலகில் புகழ் மேம்பட்ட அறத்தோர் இருப்பதைத் தேவேந்திரற்கு அறிவிக்க அசைதல் உண்டு. அவ்வசைவைக் கொண்டு இந்திரன் உண்மை உணர்ந்து, அவ்வறத்தோரை அடைந்து வேண்டும் உதவி செய்தல் மரபு. அம் முறைப்படிப் பாண்டுகம்பள அசைவைக் கண்டு, இந்திரன் சிறந்த அறச் செயலாளன் ஆகிய ஆபுத்திரனை

அடைந்து "நான் இந்திரன். உனக்கு வேண்டுவன வழங்க வந்தேன். நீ அன்னதானம் செய்தற்கு உரிய பயனை என்னிடம் பெற்றுக்கொள்" என்றான்.

ஆபுத்திரன் நகைத்து, "இங்குச் செய்த நல்வினைப் பயனை நுகர்பவர்தாமே உனது நாட்டில் இருப்பவர்! அறஞ்செய்பவர், பாதுகாப்பவர், நற்றவம் செய்பவர், பற்றற முயல்வோர் - இவருள் ஒருவரும் இல்லாத நாடன்றோ உனது! பசியால் வருந்திவந்தவர் பசியைப் போக்கி, அவர்தம் மகிழ்ச்சி நிறைந்த முகத்தைக் காட்டும் இப்பிச்சைப் பாத்திரம் ஒன்றே எனக்குப் போது மானது. நீ எனக்கு உணவு தருதியோ? உண்டி தருதியோ? பெண் தருதியோ? பொருள் தருதியோ? எதனைத் தருதி?" என்று கூறிப் பரிகசித்தான்.

### பாத்திரம் இருந்தும் பயன் இல்லை

இந்திரன் நாணமுற்றுத் தன் உலகம் சென்றான். பாண்டிய நாடு வற்கடம் ஒழிந்து செழிப்புறுமாறு செய்தான். எங்கும் மழை; எங்கும் விளைச்சல்; எங்கும் உணவுப் பொருள்கள் மலிந்தன. உயிர்கள் வயிறார உண்டு களித்தன. ஆபுத்திரனைத் தேடுவார் இல்லை. ஆபுத்திரன் வாழ்ந்த மன்றத்தில் உண்டு களித்துத் தீ நெறியிற் புகுத்தவரும் கடுமொழியாளரும் வட்டாட் டமும் சூதாட்டமும் ஆடிக்கொண்டு வீணே காலங்கழித்தனர். அதுகண்டு உளம் நொந்த ஆபுத்திரன் அவ்விடத்தை விட்டு அகன்றான். அகன்றவன், ஊர்கள்தோறும் சென்று, "உணவு வேண்டுவோர் உளரோ?" என்று கேட்டுக் கொண்டே வந்தான். மக்கள், "இவன் யாவன்?" எனப் கூறி இகழ்ந்தனர். ஒருவரும் உணவு வேண்டுவோர் இல்லை. அவன் மனம் புண்ணாகித் தனியே போய்க்கொண்டிருந்தான். அப்போழ்து கப்பலிலிருந்து இறங்கி வந்தோர் சிலர், "சாவக நாட்டில் மழை இன்மையால் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. உயிர்கள் உணவின்றி மடிகின்றன" என்றனர்.

### ஆபுத்திரன் இறுதி

உடனே ஆபுத்திரன் கப்பலேறிச் சாவகநாடு நோக்கிச் சென்றன். வழியில் காற்று மிகுந்து கடல் தத்தளித்தது. கப்பல் ஒருநாள் மணி பல்லவத்தில் தங்கினது. ஆபுத்திரன் இறங்கி அத்தீவைப் பார்க்க சென்றான். அவன் வந்து கப்பலை அடைந்தானென்று எண்ணிக்கொண்டு கப்பல் ஓட்டிகள்

கப்பலை ஓட்டிக்கொண்டு சென்றனர். அதனால் ஆபுத்திரன் மணிபல்லவத்திலேயே தங்கிவிட நேர்ந்தது. அவன் மிக்க துன்பமுற்றான். அத்தீவில் ஒருவரும் இல்லை. "பல வுயிர்களைக் காக்கும் பாத்திரத்தைக் கொண்டு என்னை மட்டுமே காத்துக் கொள்வது ஈனமன்றோ! இதனைச் சுமந்து என்ன பயன்?" என்றெண்ணினான்; பின்னர் அதனை நோக்கி, "நீ ஆண்டிற்கு ஒருமுறை இக்குளத்திலிருந்து தோன்றுக. உயிர்களை ஓம்பும் செந்தண்மை பூண்டவர் வருவரேல் அவரை அடைக" என்று கூறி வணங்கி, அதனைக் 'கோமுகி' என்னும் பொய்கையில் எறிந்தான்; எறிந்த பின் உண்ணா நோன்பு கொண்டு அத்தீவிலேயே உயிர் விட்டான்.

அது சமயம் யான் அங்குச் சென்று, "யாதுற்றனை?" என்றேன். அவன் தான் உற்ற துன்பங்களை விரிவாகக் கூறினான். அவன்,

குணதிசைத் தோன்றிக் காரிருள் சீத்துக்
குடதிசைச் சென்ற ஞாயிறு போல

மணிபல்லவத்தில் மன்னுடம்பு விட்டு, தணியா மன்னுயிர் தாங்கும் கருத்துடன் சாவகநாட்டை ஆளும் வேந்தனது ஆவயிற்றிற் போய்ப் பிறந்தான்.

# 15. பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை

## ஆபுத்திரன் பிறப்பு

" ஆபுத்திரற்கு ஏழுநாளும் பாலூட்டிய பசு, அப் புண்ணியத்தால், பொன் கொம்புகளையும் பொற்குளம்புகளையும் உடையதாய்ச் சாவக நாட்டில் தவளமலையில் தவஞ் செய்து கொண்டிருந்த மண்முக முனிவரை அடைந்தது. அப்பசு அங்கும், ஈனுமுன் பால் சுரந்து பல உயிர்களைக் காத்து வந்தது. அவ்வற்புதத்தைக் கண்ட முனிவர், 'எல்லா உயிர்களையும் காக்கத்தகும் பெரியோன் இப்பசு வயிற்றில் ஒரு பொன் முட்டையினின்றும் தோன்றுவான்' என்றார்.'

அங்ஙனமே மன்னுயிரைக் காத்த பசுவையும் மறவாத வனாய் மணிபல்லவத்தில் உயிர் துறந்த ஆபுத்திரன், உலகத்தார் மகிழ்ச்சி அடைய அப்பசு வயிற்றில் தோன்றினன். அவன் பிறந்த நாள் புத்தர் பிறந்த வைசாக சுத்த பௌர்ணமி ஆனதால், உலகில் பல நற்குறிகள் காணப்பட்டன. அக்குறிகளைக் கவனித்த சக்கரவாளக் கோட்டத்தில் உறையும் தேவர்கள், புத்ததேவர் பிறக்கும் போழ்து உண்டாகும் நற்குறிகள் இப்பொழுது தோன்றற்குக் காரணம் யாதெனக்கந்திற் பாவையைக் கேட்டனர். அப்பாவை, 'மணிபல்லவத்தில் உயிர் நீத்த ஆபுத்திரன், உலகத்து உயிர்கள் இன்பம் அடையுமாறு சாவக நாட்டில் பிறந்துளான். அவனது வரலாற்றை அறவண அடிகளைக் கேட்டுத் தெளிக' என்று உரைத்தது.

"பசுவிற்குப் பாலகனாகப் பிறந்தவனை அந்நாட்டு அரசனான பூமிசந்திரன், தனக்கு மகப்பேறு இன்மையால், மண்முக முனிவரைப் பணிந்து, வாங்கிச் சென்று வளர்த்தான். அம் மகனே இன்று சாவகநாட்டு மன்னனாக இருக்கின்றான்.

"மணிமேகலையே, இப்பொழுது நாட்டில் மழை இல்லை. விளைபொருள் ஒழிந்து வற்கடம் பரவியுள்ளது. அதனால்

உயிர்கள் உணவின்றி வாடுகின்றன. ஆதலின், நீ உனது ஐயக்கலனை வீணாக வைத்திருத்தல் தகாது; உடனே உயிர்கள் படும் துன்பத்தை நீக்க முனைக" என்றார்.

**பிக்குணிக் கோலம்**

உடனே மணிமேகலை, அடிகளை அன்புடன் வணங்கித் தாயுடனும் சுதமதியுடனும் புறப்பட்டாள்; பிக்குணிக் கோலம் பூண்டு அமுத சுரபினைக் கையில் ஏந்தி நகர்ப்புறத்து வீதியை அடைந்தாள். அவளைக் கண்ட ஊரார், கோசாம்பி நகரத்தரசனான வத்தவனைப்பிரச்சோதனன் சிறையிட்ட போது அவனைச் சிறைமீட்டற்கு அமைச்சன் 'யூகி' என்பவன் மாறுவடிவங் கொண்டு உச்சயினி நகரப் பெருந் தெருவை அடைந்ததும் அவனைக் கண்டோர் பலரும் பரிவுற்றுச் சூழ்ந்தமை போலச் சூழ்ந்து, "உதய குமரன் உளம் கொண்டு ஒளித்த மதுமலர்க் குழலாள் ஐயக்கலன் ஏந்தி அடிபெயர்த்து நடந்திடல் தெய்வச் செயலே" என்று பேசிக் கொண்டனர்.

இந்நிலையில் மணிமேகலை, முதலில் தன் பாத்திரத்தில் பத்தினிப்பெண் ஒருத்தி சோறிடல் நலம் என்பதை விரும்பினாள். அப்பொழுது அவளைக் காய வண்டிகை என்பவள் நெருங்கி, "குளத்தில் அழகுற மலர்ந்துள்ள தாமரை மலர்களின் இடையில் செழித்துப் பருத்து உயர்ந்துள்ள ஒரு மலரைப் போல இல்லறத்தில் வாழ்கின்ற மழையைப் பெய்விக்கும் கற்புடைய மகளிருள் **ஆதிரை**யே சிறந்தவள். இதுதான் அவள் இல்லம். நீ அவளிடம் சென்று பிச்சைபெறலாம்" என்றனள்.

# 16. ஆதிரை பிச்சையிட்ட காதை

## ஆதிரையின் கற்பின் சிறப்பு

*காயசண்டிகை மணிமேகலையை நோக்கி, "ஆதிரையின் கணவன்* ***சாதுவன்*** *என்பவன்; ஒழுக்கம் கெட்டவன்; கணிகை ஒருத்தியிடம் வாழ்ந்து, அவள் கொடுத்த உணவையே உண்டு வந்தான்; தன் செல்வம் அனைத்தையும் கணிகையர்க்கும் சூதாட்டத்திற்கும் தொலைத்தான். கணிகையும் அவனைத் துறந்தாள். பிறகு அவன் பொருள் ஈட்டிவரக் கருதி வங்கத்தில் ஏறிச்சென்ற வணிகரோடு கூடிச் சென்றான். கப்பல் காற்றினால் அலைக்கப்பட்டுக் கடலிற் கவிழ்ந்தது. சாதுவன், ஒடிந்த பாய்மரத் துண்டத்தைப் பற்றி நீந்தி, ஆடையற்ற நாகர் வாழும் மலைப்பக்கத்தை அடைந்தான்.*

*"கப்பலிலிருந்து தப்பிக் பிழைத்துப் பூம்புகாரை அடைந்தோர் 'உன் கணவன் .இறந்தனன்' என்று ஆதிரையிடம் அறிவித்தனர். அவள் வருந்திப் புலம்பிச் சுடுகாடடைந்து, குழிவெட்டித் தீயை மூட்டி, "என் கணவன் போன வழியே யானும் போவேன்" என்று அதனில் வீழ்ந்தாள். ஆனால், அந்நெருப்பு அவளுடைய படுக்கையையும் புடவையையும் பூசிய சாந்தையும் சூடிய மாலையையும் சிறிதும் சிதைக்காமலும் அவளை எரிக்காமலும் குளிந்த நீர் போல் இருந்தது. அவள்,*

*'விரைமலர்த் தாமரை ஒருதணி இருந்த*
*திருவின் செய்யோள் போன்றினி திருந்தாள்.*

*அவள், 'ஐயோ! தீயும் கொல்லாத் தீவினை யாட்டியேன்! என் செய்வேன்!' என்று ஏங்கினாள். அப்பொழுது வானத்தில் அசரீரி தோன்றி, 'ஆதிரையே, உன் கணவன் நாகர் வாழும் மலைப்பத்தில் இருக்கிறான். விரைவில் 'சந்திரதத்தன்' என்னும் வணிகனது கப்பலில் ஏறி இவண் வருவான். நீ துயர் ஒழிக' என்னும் நற்செய்தியை அறிவித்தது. ஆதிரை ஆனந்தக் கடலில்*

ஆழ்ந்தவளாய்த் தன் மனையை அடைந்து, கணவன் வருகையை எதிர் நோக்கி, அறங்கள் பலவற்றைச் செய்துகொண்டிருந்தாள். நிற்க.

**சாதுவனும் நாகரும்**

"சாதுவன், **நாகர்** நாட்டில், களைப்புற்று ஒரு மர நிழலில் உறங்கிக்கொண்டிருந்தான். அவ்வேளையில் அந் நாட்டுவாழ் ஆடையற்ற நாகர் சிலர் அங்கு வந்தனர்; சாதுவனைக் கண்டு, 'இவன் கடலிலிருந்து துன்பப்பட்டு வந்துள்ளான். ஊன் நிறைந்த இவனது உடல் நமக்கு இனிய உணவாகும்' என்று கருதி, அவனை எழுப்பினர். சாதுவன் எழுந்து அவர்கள் மொழி யிலேயே பேச, அவர்கள் வியப்புற்று மரியாதையுடன் நின்று, 'நீர் எங்கள் தலைவன்பால் வரவேண்டும்' எனக் கூறி, அவனை அழைத்துச் சென்றனர்.

நாகர் குரு கட்குடங்களும் மிகுந்த முடைநாற்றமும் காய்ந்த வெண்மையான என்புகளும் நிறைந்த ஆசனத்தில், கரடி தன் பிணவோடு இருந்தது போல ஒரு பெண்ணுடன் அமர்ந்திருந் தான். சாதுவன் அவனைக் கண்டு நாகர் மொழியில் பேசி அவனைத் தன் வயமாக்கிக் கொண்டான். அக்குருமகன், 'நீ வந்த காரணம் யாது?' எனச், சாதுவன், கடற்பயணத்தில் தான் அடைந்த இன்னலை விளக்கினான். உடனே குருமகன் தன் ஏவலரை அழைத்து, 'உணவின்றிக் கடலில் உழன்ற இவற்கு ஓர் இளநங்கையையும் கள்ளையும் ஊனையும் வேண்டும் அளவு கொடுங்கள்' என்றான். அக்கொடுமொழி கேட்ட சாதுவன் அயர்ந்து, 'வெவ்வுரை கேட்டேன், வேண்டேன்' என்றான். குருமகன், 'பெண்டிரும் உண்டியும் இன்றெனில், மாக்கட்கு ஞாலத்து உறுபயன் உண்டோ? உண்டெனிற் காட்டு' என்றான்.

உடனே சாதுவன்,

'மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்:
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்ற (து)
உண்மையின்
நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்

*அல்லறஞ் செய்வோர் அருநர கடைதலும்*
*உண்டென வுணர்தலின் உரலோர் களைந்தனர்'*

என்று பதில் கூறினான்.

"உடனே குருமகன் நகைத்து, 'நீ, உடம்பை விட்டு நீங்கும் உயிர் வேறு இடம் புகும் என்னும் கருத்துப்படக் கூறுகின்றனை. அவ்வுயிர் எப்படி வேறு இடம் செல்லும்? அதனை விளங்க உரை' என்றான். சாதுவன், 'நமது உடலில் உயிர் இருக்கையில், ஏதேனும் ஒரு துன்பம்வரின், அதை உணர்ந்து உடல் வருந்துகின்றது. உயிர் நீங்கிய பின் உடலை நெருப்பில் இட்டுக் கொளுத்தினாலும் அதை உணர்வதில்லை அன்றோ? ஆதலால் உடம்மை விட்டு ஏதோ ஒன்று போய்விட்டது என்பதை நாம் உணர்கிறோம் அல்லவா? அந்த ஒன்றே **உயிர்** என்பது. அது வேறொரு புகுமிடம் உடைய தென்பதை அனைவரும் அறிவர். நாம் கனாக்காண்கையில், நமது உடல் இருந்த இடத்தில் இருப்ப, உயிர் வேறோர் உடலின் வழியே மற்றோர் இடத்தை அடைகின்றது என்பதை உணர்கிறோம் அல்லவா?' என்றான்.

"நாகன் நல்லுணர்வடைந்தான்; சாதுவன் அடிகளிற் பணிந்து, 'நான் கள்ளையும் ஊனையும் கைவிடின் உயிர் வாழேன். ஆதலின் எனக்குத் தக்க நல்லற வழியைக் காட்டுக' என்று வேண்டினான். சாதுவன் இசைந்து, 'கவிழ்ந்த கப்பலிலிருந்து எவரேனும் இவ்விடத்தை அடையின், அவர்களை வதையாது காத்தல் வேண்டும்; தானே இறக்கின்ற உயிரின் ஊனைத் தவிர வேறு எதனையும் கொன்று தின்னலாகாது' என்றான். குரு, 'இஃது என்னால் பின்பற்றத் தக்கதே. நாங்கள் பன்முறை கப்பல் கவிழ்ந்து அல்லலுற்ற மக்களின் பொருளைக் கவர்ந்துள்ளோம்; இங்கு வருபவரைக் கொன்று தின்றுள்ளோம். பலரது செல்வம் இதோ இருக்கின்றது. நீ எடுத்துச் செல்' என்றான்.

"சாதுவன் அச்செல்வத்தை எடுத்துக் கொண்டு சந்திரதத்தன் என்பானது கப்பலில் ஏறிக் கடல் கடந்து பூம்புகாரை அடைந்தான்; அடைந்தான்; தன்னை எதிர்நோக்கி இருந்த மனைவியின் அகலும் முகமும் மலர வீடடைந்தான்; அவளோடு இன்புற்று நல்லறம் புரிந்து கொண்டு பெரியோர் போற்ற வாழ்கின்றன்.

## ஆதிரை பிச்சை இட்டமை

"இத்தகைய பெருமை பொருந்திய பத்தினிப் பெண் மணியான ஆதிரையினிடம் பிச்சை பெறுக" என்று காய சண்டிகை கழறினாள். உடனே மணிமேகலை ஆதிரையின் இல்லத்தின் வாயிலில் புனையா ஓவியம் போல நின்றாள். ஆதிரை வெளிப்போந்து, மணிமேகலையைத் தொழுது வலங்கொண்டு, 'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக' எனக் கூறி, அமுத சுரபி நிறையுமாறு அன்னமிட்டாள்.

# 17. உலக அறவி புக்க காதை

## பசிநோய் களைந்தமை

பத்தினிப் பெண்ணாய ஆதிரை வாழ்த்தி இட்ட அமுதேற்ற பிச்சைப் பாத்திரத்தில் நிறைந்த பெருஞ் சோறு - அறவழியே ஈட்டப்படும் பொருள் பெருகுதல் போலச் பெருகி, வந்தவர்களைத் திருப்தி செய்து, குறைவுறாது நிறைவாகவே இருந்தது. அதனைக் கண்ட காயசண்டிகை மணிமேகலையைப் பணிந்து. "திருமால் இராமனாகப் பிறந்து இலங்கை செல்லக் கடலில் அணையிட்ட போழ்ந்து, குரங்குகள் கொணர்ந்த நெடிய மலைகள் யாவும் கடல் வயிற்றிற் புகுந்தாற்போல நான் உண்பதெல்லாம் வயிற்றுள் எங்கோ போய்ப் பசிதணியாது ஏக்கமுற்று வாடுகின்றேன். அன்னையே, என் தீராப் பசியையும் தீர்த்தருள்க" என்று வேண்டினாள். மணிமேகலை அன்புடன் அவளுக்கு ஒரு பிடி சோறளித்தாள். உடனே பல ஆண்டுகளாகத் தீராதிருந்த பசி நீங்கிக் காயசண்டிகை வயிறு நிறைந்து மகிழ்ந்தாள்; தான் நீங்காப் பசி அடைந்த வரலாற்றைக் கீழ் வருமாறு கூறினாள்:

## காயசண்டிகை வரலாறு

"நான் வடதிசையில் உள்ள விஞ்சையர் உலகில், 'காஞ்சனபுரம் என்னும் பதியில் இருப்பவள். நான் ஒரு நாள் என் கணவனான '**காஞ்சனன்**' என்பவனோடு கூடி வெவ்வினை உறுப்பப் பொதிய மலையைக் காணவந்தேன். அம்மலையில் காட்டாறு ஒன்று உண்டு. நான் அதன் கரையில் தங்கினேன். அவ் வெல்வை, முறுக்கி அணிந்த பூணூலையும் திரித்து நீண்ட சடைமுடியும் மரவுரியும் உடைய **விருச்சிகன்** என்னும் முனிவன், பனம்பழம் போன்ற நாவற்பழம் ஒன்றைத் தேக்கிலையில் வைத்து நீராடப்போனான். நான் எனது தீவினை வசத்தால் அறிவின்றி அக்கனியைக் காலாற் சிதைத்தேன். அச்சிதைவைக் கண்ட முனிவன் கடுங்கோபம் கொண்டு, 'தெய்வலோகத்தில் இருந்து வந்த கனி இது. இது பன்னீராண்டிற்கு ஒரு முறையே பழுப்பது.

இதனை உண்பவர் பன்னீராண்டுக்கு ஒரு முறையே உண்ணும் விரதம் உடையவன். நீ உன் உணவுக்கு ஊறு விளைத்தனை. நான் மேலும் பன்னிரண்டு ஆண்டுகள் பட்டினி கிடக்கவேண்டும். நான் அக்கால முடிவில் வேறு கனியைப் பெற்று உண்ணும்வரை நீயும் '**யானைத்தீ நோய்**' என்னும் பசி நோயால் துன்புறுக. நீ அந்தர வழிச் செல்ல உதவும் மந்திரத்தையும் மறப்பாய்' எனச் சபித்தான்.

" பின்னர் என் கணவன் அங்கு வந்தான், நடந்ததை அறிந்து வருந்தி, 'இனி நாம் நமது நகரத்திற்குச் செல்வோம், புறப்படு' என்றான். என்னால் மேலே பறக்கக் கூடிவில்லை; பசியோ வாட்டியது. என்கணவன் காய் கனி கிழங்கு வகைகளை நிறையக் கொணர்ந்தான். அவற்றை உண்டும் என் பசி தணிந்திலது. என் கணவன் கடுந்துயர் அடைந்து, 'நாவலந்தீவில், தமிழகத்தில், ஏழைகட்கு உதவி செய்கின்ற தவமும் செல்வமும் உடையோர் குறைவற வாழும் காவிரிப்பூம் பட்டினம் என்னும் நகரம் உண்டு நீ, அந்நகரை நடந்து அடைக' என்று கூறி அகன்றான்.

"நான் உடனே அவ்விடம் விட்டு நீங்கிப் பல நாட்கள் நடந்து சென்று இந்நகரத்தை அடைந்தேன். என் கணவன் ஆண்டுதோறும் இந்திர விழாவின் போது இங்கு வந்து என்னைக் காண்பான்; மனம் வருந்தி, எனது பசி நீங்கும் நாளை எண்ணிச் செல்வான். இத்துன்பத்துக்குக் காரணமான எனது கொடும் பசியைப் போக்கிய உன்னைப் பணிகின்றேன்.

"பிறவித் துன்பத்தை நீக்க முயலும் மாதவர் வாழ்கின்ற சக்கரவாளக் கோட்டத்தில் பலரும் தாராளமாகப் போதற்காகத் திறந்து கிடக்கும் வாயிலைக் கொண்ட '**உலக அறவி**' என்பது ஒன்று உண்டு. அங்குப் பசியால் வாடுபவரும் நோயால் நலிபவரும் பரதேசிகளும் அன்னம் இடுவோரை ஆவலோடு எதிர்நோக்கி இருக்கின்றனர். நீ அங்குச் சென்று அறம் செய்க" எனக் கூறி விடைபெற்றுச் சென்றாள்.

### உலக அறவியில் உண்டி அளித்தல்

பின்னர் மணிமேகலை தெரு வழியே சென்று சக்கரவாளக் கோட்டத்தை அடைந்து, மும்முறை வலம் வந்து, உலக அறவியிற் புகுந்தாள்; சம்பாபதி கோவிலையும் கந்திற்பாவையையும் வணங்கினாள்; பிறகு, வெயிலால் வாடி மூங்கில்கள் கரிந்து

போகின்ற காட்டில் மேகங்கள் மழை சொரிந்தாற் போலப் பசிக் கொடுமையால் பரிதபித்துக்கொண்டிருந்த மக்கள் முன் தோன்றினாள்; "இஃது ஆபுத்திரன் கைப்பட்ட அமுதசுரபி. உணவு வேண்டுவோர் வருக; உணவு பெறுக" என்று அழைத்தாள். பசிப் பிணியாளர் பலரும் அவளை அடைந்து, உணவு பெற்று உண்டு பசி நீங்கி மகிழ்ந்தனர்.

# 18. உதயகுமரன் அம்பலம் புகுந்த காதை

## சித்திராபதியின் சீற்றம்

இங்ஙனம் மணிமேகலை பிச்சை ஏற்றலை உணர்ந்த சித்ராபதி, அரும் புண்ணில் கொள்ளி வைத்தால் ஒத்த துன்பம் அடைந்து உள்ளம் கொதித்தாள்; பெருமூச்சு விட்டாள்; நாடக மகளிரை நோக்கி, "கோவலன் இறந்த பின் துறவு பூண்ட மாதவியின் செயல் நகைக்கத்தக்கது. நாம் - காதலர் இறந்தவுடன் குளத்திற் புகுந்து நீராடல் போல இறவாத உயிரைத் தீமூட்டி அதில் மாய்க்கும் முதுக்குடிப் பிறந்த பத்தினிப் பெண்டிர் அல்லேம்; பிறர் கைப்பொருளைப் பறித்து உண்பதையே வாழ்வாகக் கொண்டிருக்கிறோம்; யாழ்வல்லோன் இறந்தவுடன், அவ்யாழ் அவனுடன் இறவாமல் வேறொருவன் கையிற் சேர்தல் போன்ற தன்மை உடையோம்; மேலும், நல்ல மகரந்தத் தூளை நுகர்ந்து பசையற்றவுடன் தேன் அற்ற அம் மலரை விட்டு வேறு மலரைத் தேடிச் செல்லும் வண்டு போன்ற இயல்பை உடையேம். இத்தகைய நாம் தவவேடம் புனைந்தோம் என்பது பலர் நகைக்கத் தக்கதன்றோ? ஆதலால், மணிமேகலையின் தவக் கோலத்தை மாற்றி, அவள் ஏந்தியுள்ள அக்ஷய பாத்திரத்தை ஏழை ஒருவன் கையில் தந்து விட்டு, அவளை உதயகுமாரனைக் கொண்டு தேர்மீது ஏற்றிவரச் செய்வேன். நான் அங்ஙனம் செய்யேனாயின், ஏழு செங்கற்களைத் தலையில் தாங்கிக் கொண்டு நாடக அரங்கைச் சுற்றி வந்து, குற்றத்தோடு வாழும் நாடக மகளிர் போல மற்றக் கணிகையர் வீடுகட்குச் செல்லாதவளாகத் தனித்திருக்கக்கடவேன்" என்று வஞ்சினம் கூறிக் கடுஞ்சினத்துடன் பெண்கள் சிலர் சூழ்ந்ததவர, முகத்தில் வியர்வை சிந்தத் தெருவழியே சென்று உதயகுமரன் அரண் மனையை அடைந்தாள்.

## சித்திராபதியும் உதயகுமரனும்

அப்போது உதயகுமரன் வேலைப்பாடு மிகுந்த பளிங்கு மண்டபத்தில் இருந்த அரியணைமீது, இருபாலும் பெண்மணிகள் கூடி நின்று வெண்சாமரை வீச வீற்றிருந்தான். அவனைக் கண்டு சித்திராபதி வணங்கி நின்றாள். அவன், "மாதவியும் மணிமேகலையும் கொண்ட தவ வடிவத்திற்கு ஏதொரு குறையும் நேராதிருக்கின்றதா?" என வினவினான். அதற்கு அம்முதுமகள், "வேந்தே, மணிமேகலை இப்பொழுது பிக்குணிக் கோலம் பூண்டு உலக அறவியிற் புகுந்து ஏழைகட்கு உணவளித்து வருகிறாள். அவளை உன்னுடன் சேர்த்துவைக்கும் கருத்தோடுதான் ஈண்டு வந்துளேன்" என்றாள். இளங்கோவன், "சித்திராபதி, நான் அவளைப்பெற அவாவி உவவனம் சென்றேன். அவள் பளிக்கரையுள் ஒளிந்துகொண்டாள். நான் அவளுக்கும் ஓவியத்துக்கும் உள்ள வேறுபாடு உணரக்கூடாமல் அவ்விடம் விட்டு அகன்றேன். ஆயினும் நான் அவளை மறந்தேன் இல்லை. அவளைப் பற்றியும் அவளுடைய அங்க அடையாளங்களைப் பற்றியுமே எண்ணி எண்ணித் தூக்கமின்ற ஏக்கங்கொண்டு கிடந்தேன்; அப்பொழுது என் முன் பொன்னிற யாக்கை கொண்ட தெய்வம் ஒன்று தோன்றி, அரசநீதியை அறைந்து, மணிமேகலை நினைவை நீக்குமாறு அறிவுறுத்துச் சென்றது. அதனை எண்ணி வருந்திக்கொண்டிருக்கிறேன். என் உள்ளம் அவளிடந்தான் உள்ளது. என் செய்வேன்!" என்றான்.

சித்திராபதி "அரசே, காமத்தால் பற்றப்பட்டவர்க்கு உண்டாகும் துன்பங்கள் பல தேவரும் அதனால் துன்பம் உற்றுள்ளனர். **இந்திரன்** அகல்யையால் துன்புற்றதையும், **அக்தி** சப்தரிஷிகளின் மனைவியர்மீது காமுற்றதையும் நீ கேட்டறி யாயோ? மணிமேகலை கன்னிக் காவலும் கடியிற் காவலும் தன் கணவன் இறந்தபின் காவலும் உடைய பத்தினிப் பெண்டிர் மரபில் வந்தவள் அல்லள்; ஆடவர் காண அரங்கில் ஏறி, ஆடலும் பாடலும் அழகுறக் காட்டிச் சுருப்புநாண் கரும்புவில் அரும்புக்கணை தூவக் கண்ணாகிய வலைப்படுத்துக் கண்டோர் நெஞ்சம் கவர்ந்து பொருள் பல பெற்று வண்டைப் போலத் துறந்துவிடும் கொண்டி மகளிர் மரபைச் சேர்ந்தவள். ஆதலின் நீ சிறிதும் மனந்தளரேல். அவளுக்குத் தவவேடம் சிறிதும் தகாது. ஆதலால் அவளைத் தன் குல ஒழுக்கத்துக்கு ஏற்ப நடக்கச்

செய்தல் நீதி மன்னரது நேரிய செயலே. ஆதலின், நீ அவளை எவ்வாற்றனும் உன் வயப்படுத்த முயல்க" என்று கூறி அகன்றாள்.

## உலக அறவியில் உதயகுமரன்

உதயகுமரன் மனமாற்றமடைந்தாள்; உடனே தேர்மீதமர்ந் தான்; அம்பலம் அடைந்தான்; துர்க்கையின் பணியாட்களான பேய்களின் பசி போக்குவாள் போலத் தீப்பசி மாக்கட்கு அன்புடன் சோறு உதவி நிற்கும் பிச்சைப் பாத்திரம் ஏந்திய பாவையைப் பார்த்தான்; அவன் அவளை ஆர்வத்தோடு நோக்கி, "உடம்போடு என் உள்ளகம் புகுந்து, என் நெஞ்சம் கவர்ந்த வஞ்சக் கள்வி தவவேடந் தாங்கிப் பிச்சைக் கலன் ஏந்தி நிற்கும் காரணம் யாது?" என்றெண்ணிப் பின் அவளை அணுகி, "நல்லாய், நீ தவம் செய்யத் தொடங்கிய காரணம் யாது?" என்று கேட்டான். அவள் உடனே, 'இவன் நமது முற்பிறப்பில் கணவனாக இருந்த இராகுலன். இவனடிதொழல் தக்கது. நமது நெஞ்சம் இவன்பாற் சென்றாலும், இவன் நமது கையைப் பற்றினும், பழைய பிறப்பில் காதலனாதலால் இவன் செயலை அலக்ஷியம் செய்யலாகாது' என்றெண்ணி, அவன் பாதங்களிற் பணிந்தாள்; பணிந்து, "நீ கேட்டதற்குப் பதில் கூறுவேன், கேள்: மக்கள் யாக்கை தோன்றலும் தளர்தலும் நோயுற்று வருந்தலும் இறத்தலும் ஆகிய துன்பத்தை உடையது என்பதை அறிந்து, யாக்கை நிலைத்துள்ள இவ்விளம் பருவத்திற்றானே நல்லறம் செய்யத் துணிந்தேன். ஆடவர்க்குப் பெண்டிர் கூறும் அறிவுரை யாதுளது? எனினும், உண்மையை உரைத்தேன், நீ இனி விரும்பியாங்குச் செய்க" என்று கூறி, அவனை விட்டு நீங்கிச் சம்பாபதியின் கோவிலுட் புகுந்தாள்.

## வேற்று வடிவம்

கோவிலுட் புகுந்த மணிமேகலை, 'உண்மை உருவிடன் இருப்பின் உதயகுமரனால் நமது தவவொழுக்கம் கெடினும் கெடும்' என்றெண்ணி, வேற்று உருவம் கொள்ளும் மற்திரத்தை ஓதிக் காயசண்டிகையின் உருவம் கொண்டு அமுத சுரபி ஏந்தி மீண்டும் வெளியில் வந்தாள்.

## இளங்கோன் சூள் செய்தல்

உதயகுமரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவன் சம்பாபதியின் கோவிலுள் நுழைந்தான்; அத்தெய்வத்தைப் பணிந்து, "தனது பிச்சைக்காலத்தைக் காயசண்டிகையின் கையிற்

கொடுத்து ஒளித்துக்கொண்ட மணிமேகலை எங்குற்றனள்? இங்குச் சித்திரப் பாவைகள் நிறைந்திருத்தலால், அவளை என்னால் கண்டுபிடிக்கக் கூடவில்லையே! நீ அவனைக் காட்டாவிடில், எத்துணை நாட்களாயினும் யான் இங்கேயே முறையிட்டுக் கிடப்பேன். முதியவளே! பவளச் செவ்வாயி லிருந்து தோற்றும் தவளவாள் நகையும் அஞ்சனம் சேராத செங்கயல் நெடுங்கண்ணும் சிலைப் புருவமும் குவிமுட் கருவி - கோணம் - கூர் நுனைக் கவைமுட் கருவிகள் ஆகிக் காவல் கொள்ள, கல்வியாகிய பாகர்களால் காத்தலாகிய வலையைப் போக்கி, யாழோசைபோல இனிமையாக மொழிகளை எடுத்துக்காட்டிப் புதிதாகக் கொள்ளப்படும் யானை வேட்டையில் அகப்பட்டதென்று கருதி, உன் கோவிலுட் புகுந்த மதிவாள் முகத்து மணிமேகலையை விட்டு நான் தனித்துப் போகேன்" எனச் சூள் உரைத்து நின்றான்.

# 19. சிறைக் கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை

### வியப்புக்கு உரியவை

இளங்கோன் கூற்றைக் கேட்டுச் சித்திரப் பாவை ஒன்றிற் குடி இருந்த தெய்வம் ஒன்று, "எமது தலைவியாய சம்பாபதி முன் ஆராயாமல் சூள் உரைத்தனை" என்றது. உடனே உதயகுமரன் பொதியறைப்பட்டோர் போன்று உளம் வருந்தி, "ஒரு தெய்வம் செங்கோல் முறைமையை அறிவுறுத்து, மணிமேகலையை மறக்குமாறு கூறியது வியப்பு! மணிமேகலை பலரது பசியை நீக்கக் கையில் ஏந்தியுள்ள கலமும் வியப்புக்கு உரியதே! சம்பாபதி முன் யான் தவறு செய்ததாகச் சித்திரப் பாவை கூறியதும் பெருவியப்பே! இவை அனைத்தையும் பின்னர் ஆய்ந்தறிவோம்" என்று எண்ணிக்கொண்டே அவ்விடத்தைவிட்டு அகன்றான்.

### இரவில் முதல் யாமம்

அப்போது இடமகன்ற உலகை இருள் உண்டதெனும்படி இருள் எங்கும் சூழ்ந்தது. பகலில் அரசோட்டிய சூரியனை ஓட்டித், தன் மேல் பாகர் இல்லாத கரிய யானையைப் போலச் சந்திரன் அற்ற இரவு வந்தது. அப்போழ்து நகரத்து நம்பியர் நங்கையரோடு மகர வீணையின் கிளை நரம்புகளை மீட்டு இன்பம் துய்த்துக் கொண்டு இருந்தனர்.

### சிறைக் கோட்டம்

அந்நிலைமையில் மணிமேகலை. "நாம் சுய உருவுடன் திரிந்துகொண்டிருப்பின், உதய குமரன் அடிக்கடி வந்து துன்பந் தருவான்; ஆதலின், காயசண்டிகை என்று ஊரார் நினைக்கும் படி உருவம் கொள்வோம்;

*'ஆற்றா மாக்கட்கு ஆற்றுந் துணையாகி*
*ஏற்றலும் இடுதலும் இரப்போர் கடன்; அவர்*

*மேற்சென் றளித்தல் விழுத்தகைத் தென்றே*
*நூற்பொருள் உணர்ந்தோர் நுனிந்தனர்'*

ஆதலின்,

துன்பப்படுவோர்க்கு உதவி செய்வோம்,'' என்றெண்ணி, காய சண்டிகை வடிவத்துடன் அமுத சுரபியை ஏந்திக்கொண்டு அரசனது சிறைக் கோட்டத்தை அடைந்தாள்; அங்கு விருப்பொடு புகுந்து வெய்துயிர்த்துப் புலம்பிப் பசியால் வாடிக்கொண்டிருந்த மக்களை உணவருத்திச் சுகமுறச் செய்தாள். அது கண்ட சிறைக் கோட்டத்துக் காவலர் திகைப்புற்று அரசனிடம் மணிமேகலையைப் பற்றியும் அமுத சுரபியைப் பற்றியும் வியந்து கூறச் சென்றனர்.

## சோலைக் காட்சி

அவர்கள் சென்ற போது அரசன் அரசியோடு ஒரு பொழிலில் இருந்தான். அரசிமாவலி மரபைச் சேர்ந்தவள். மாலைக்காலம் அழகாக இருந்தது. வண்டுகள் யாழ் ஒலியை எழுப்பத் தும்பி குழல் இசை காட்ட, வரிக்குயில் பாட, மாமயில் ஆடியது. பெண் அன்னத்தை நீங்கின ஆண் அன்னத்துடன் மடமயிற் பேடையும் தோகையும் கூடிப் பெரிய சிறகை விரித்து ஆடிக்கொண்டிருந்தன. அவ் வாட்டம், மாமணி வண்ணனும் பலராமனும் கூடி நப்பின்னையோடு ஆடிய குறவைக் கூத்துப்போல இருந்தது. கோங்கலர் சேர்ந்த மாங்கனியை மயில் கோதிக்கொண்டிருந்தது, செம்பொன் தட்டில் தீம்பால் ஏந்திப் பைங்கிளிக்கு ஊட்டும் பாவை என்று கூறுமாறு இருந்தது. மகளிர்க்குப் பயன்பட்டு வந்த ஊசலில் பெண் குரங்கு இருப்ப, அதனை ஆண் குரங்கு ஊசலாட்டியது. மூங்கிலோடு வெண் கடம்பப மரம் நின்ற காட்சி--பைந்துழாயோலுடன் பலராமன் நின்றதைப் போல இருந்தது. ஆடல் கூத்தோடு அபிநயம் அறிவோர், நாடக இயல் அறிவோர், பண்களையுடைய வீணை நரம்புகளில் பண்களை முறையே நிறுத்துவோர். மத்தளம் வாசிப்பவர், குழலோசையோடு கண்டத்து ஓசையை நிறுத்துவோர், பலரோடும் கூடிப் பாடல் மகிழ்வோர், முத்தம் கோப்பவர், சாந்தம் திமிர்வோர், குங்கும வண்ணத்தை நகில்களில் இழைப்பவர், செங்கழுநீர் மலர்களைத் தொடுப்போர், கூந்தற்கு உரிய வாசனைப் பொருள்களைக் குடையவோர், கண்ணாடியிற் பொருந்தி நிற்போர் முதலியவருடன் சோழவேந்தன் சென்று இந்திரன் போல இன்பம் நுகர்ந்தான்; பல வகை மரங்கள் உள்ள

சோலைகளிலும் சென்று, ஆங்காங்குக் கண்ட காட்சிகளில் உளம் செலுத்தி மகிழ்ந்தான்; வேறுபட்ட பல இடங்களிற் சென்று விளையாடினான்;

*'மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்*
*தண்டமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்*
*கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினை'*

களையுடைய மண்டபத்தில் இந்திரன் போல இனிதிருந்தான்.

## சோழர் வீரம்

அவ்வெல்வை காவலர் அரசனைப் பணிந்து "வஞ்சிலிருந்து வஞ்சிமாலையைச் சூடி யானையும் தேரும் மாவும் வாள்வயரும் நெருங்கிய முதன்மையாகிய தூசிப்படையோடு போரிட வந்த சேர பாண்டியரைக் '**காரியாறு**' என்னும் இடத்தில் வென்று வானை சூட்டிய **மாவண்கிள்ளி** என்னும் தம்பியோடு நீ ஊழிக்காலம் வாழ்வாயாக! நின் பகைவர் கெடுக" என்று வாழ்த்தி, மணிமேகலையைப் பற்றியும் அவள் வைத்திருந்த அமுதசுரபியைப் பற்றியும் கூறினர். அது கேட்ட அரசன் அவளை அழைத்து வருமாறு பணித்தான்.

## சிறைக் கோட்டம் அறக்கோட்டம் ஆயது

சிறிது போழ்தில், காயசண்டிகையாக விளங்கிய மணிமேகலை மன்னவன்முன் நின்றாள். அரசன், "தவத்தோய், நீ யார்? இக்கடிஞை ஏது?" என்று கேட்டான். ஆயிழையாள் அவனை நோக்கி, "விரைத்தார் வேந்தே, நீ நீடுவாழ்க; யான் வித்தியாதர மகள். என் பெயர் காயசண்டிகை. இந்நகரில் பலநாட்களாகத் திரிந்துகொண்டிருந்தேன். என் கையிலுள்ள பிச்சைச் கலனை உலக அறவியில் உள்ள ஒரு தெய்வம் கொடுத்தது. இப்பாத்திரம் தெய்வத்தன்மை உள்ளது; யானைத்தீ நோயால் உண்டான பெரும் பசியைப் போக்கினது. மக்கட்கு உயிர் மருந்தாகிய உணவை வற்றாமல் சுரக்கும் இயல்புடையது" என்றாள்.

அது கேட்ட சோழ வேந்தன், "நான் உனக்கு யாது செய்ய வேண்டும்?" என்று கேட்டான். மணிமேகலை, "சிறைக்கோட்டத்தை **அறக்கோட்டம்** ஆக்குதல் வேண்டும்" என்றாள். மன்னவன் மகிழ்ந்து, சிறைப்பட்டோரை விடுதலை செய்து, அதனை முனிவர் வாழத்தக்க அறச்சாலையாக மாற்றிவிட்டான்.

# 20. உதயகுமரன் வெண்டுண்ட காதை

## புத்தமதச் செல்வாக்கு

அரசன் ஆணைப்படி சிறைக்கோட்டம் கொடிய பிறவியிலிருந்து வருந்தினோர், நல்வினைப் பயத்தால் நற்பிறப் பெய்தினர் போல இடிக்கப்பட்டது; புத்தர் கோயில் - பௌத்தப் பள்ளி, மடைப்பள்ளி, உண்ணும் இடம் ஆக்கப்பட்டது. 'மணிமேகலை செய்த வேலை இது,' என்று அனைவரும் அவளைப் புகழ்ந்தனர்.

## உலக அறவியில் உதயகுமரன்

இதனைக் கேள்வியுற்ற உதயகுமரன், "மதியுடையோர் எள்ளினும், மன்னவன் காயினும், அம்மணிமேகலையை உலக அறவியிலிருந்து வெளிவரும்போது எனது பொற்றோரில் ஏற்றிக் கொண்டுவந்து, அவள் கற்றுள்ளவித்தையையும் முதுமொழி களையும் கேட்பேன்" எனத் துணிந்தான்; உடனே உலக அறவியை அடைந்தான்.

## காஞ்சனன்

காயசண்டிகை ஊர் சென்றதை அறியாதவனாய் அவள் கணவனான காஞ்சனன் என்னும் வித்தியாதரன் அவளைத்தேடி உலக அறவியில் வந்தான்; காயசண்டிகை உருவத்தில் இருந்த மணிமேகலையைத் தன் மனைவி என்று எண்ணினான்; அவளை அணைந்து, "உன் கையில் உள்ள பாத்திரம் ஒன்று ஆயினும், உண்போர் பலராவர். உனது யானைத்தீ நோய் நீங்க இதனை வானவர் வழங்கினாரோ?" எனக் கூறித் தனது பழைய காதற்றன்மை புலப்படப் பல பேசினான்.

அவ்வமயம் மணிமேகலை அவன் கூற்றைப் பொருட் படுத்தாமல், அங்கு உதயகுமரனை உற்று, நரைத்து - முதிர்ந்து - நோயுற்று விகார ரூபத்தில் இருந்த கிழவி ஒருத்தியைச் சுட்டிக் காட்டி, "கருமணல் போன்ற கூந்தல் வெண்மணல் ஆகிய விந்தையைக் காண்; பிறை போன்ற நெற்றி நரைத்துத்

திரங்கியுள்ளதைக் காண்; வில் போன்ற புருவம் இறால்மீன் வற்றல் போல் இருத்தலைப் பாராய்; குவளை போன்ற கண்கள் வழுநீர் சுமந்திருத்தரைப் பார்; குமிழ் போன்ற மூக்கு உமிழ்சீ ஒழுக்குதலைக் காண்; நிரைமுத்தனைய பற்களைப் பார்; அவை சுரை விதைகளைப் போல வேறுபட்டு விட்டன. இலவம் போன்ற இதழைக் காண்; புலவுப் புண்போல் புலால் நாற்றம் வீசலை அறி. வள்ளைத்தாள் போன்ற வடிகாதுளைப் பார்; உள்ளே ஊன் வாடிய உணங்கல் போன்று உள்ளன. நகில்கள் வெறும் பைகள் போலப் பொலிவிழந்தன; தென்னை மடல் போல் திரங்கி வீழ்ந்துள்ள தோள்களைப் பாராய்; நரம்புகளோடு தோல் திரங்கியுள்ள விரல்களைக் காண். வாழைத் தண்டு போன்ற தொடைகள் வற்றியிருத்தலைப் பார். கணைக்கால் நரம்பையும் எலும்பையும் வெளிக் காட்டலை அறிக. தளிரடி வண்ணத்தைப் பார்; உதிர்ந்த குரும்பை போல வற்றிய அதன் தன்மையைக் காண்க," என்று அழகின் நிலையாமையையும் இளமை நிலையாயையும் அவனுக்கு விளங்க உரைத்தாள். அது கண்ட காஞ்வனன், "என்னே இவள் அடாத செயல்! இவள் இந்த உதய குமரனைக் காதலனாகக் கருதி யுள்ளாள் போலும்! அதனற்றான் நம்மிடம் வந்திலள்; நாமே வலிந்து வந்து பேசினும் பதில் உரைத்திலள்; இவனிடம் வலிதிற் சென்று அறிவுரை கூறுமாப் போலக் காதல் மொழிகளைக் கழறுகிறாள்." என்று தவறாக எண்ணி, அடங்காச் சினத்துடன் அவள் இருந்த இடம் சென்று, புற்றில் அடங்கிக் கிடக்கும் அரவம்போல ஒளித்திருந்தான்.

இங்ஙனம் காஞ்சனன் மணிமேகலையினது உறைவிடத்திற் சென்று ஒளிந்ததைக் கண்ட இளங்கோன், "மணிமேகலையே காயசண்டிகை போல நடிக்கின்றாள். அவ்வேற்றாள் இவளிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தான். இவள் அவனை விட்டு பிரியாள். ஆதலால் இன்று நடு இரவில் இங்கு வந்து மறிவிலிருந்து இவள் செயலை அறிவேன்" எனத் தனக்குள் எண்ணியவனாய்த் தணியாக் காதலுடன் தன் கோவிரைக் குறுகினான்.

## இளங்கோன் வெட்டுண்டு இறத்தல்

நள்ளிருளில் உதயகுமரன் தனியனாய் வெளிப்பட்டு மணிமேகலை இருந்த உலக அறவியை அடைந்து, கொடிய விடமுள்ள நாகம் வாழும் புற்றிலே நுழைபவனைப் போல அதற்குள் நுழைந்தான். அப்போழுது அங்கு மறைந்திருந்த காஞ்சனன், சினமுற்ற அரவம் படத்தை விரித்து எழுந்தாற்

போல விரைந்தெழுந்து உதயகுமரனை வாளாள் வெட்டி வீழ்த்தினான்; வீழ்த்தி, ''காய சண்டிகையைத் தூக்கிக்கொண்டு அந்தரவழிச் செல்வேன்' என்று மணிமேகலையை அண்மினான்.

**பாவை பகர்தல்**

அவ்வெல்வை, அங்கு நின்ற தூண் ஒன்றில் மயனால் செய்துவைக்கப்பட்ட பாவை ஒன்று, "காஞ்சனனே, அவளிடம் அணுகாதே; அணுகாதே! மணிமேகலை காயசண்டிகை வடிவோடு இருக்கிறாள், உன் மனிவி ஊர் சென்று நாட்க ளாயின. விந்தமலையில் வாழும் 'விந்தாகடிகை ' என்பவள் தன்மீது போவாரைத் தன் சாயையால் இழுத்து வயிற்றில் அடக்கிக் கொள்வாள். இதனை அறியாது காயசண்டிகை விந்தமலைமீது பறந்தாள்; விந்தா கடிகையின் வயிற்றுள் அடைந்துவிட்டாள். நீ இதனை அறியாமல் தீச்செயலைச் செய்துவிட்டனை. உதயகுமரன் தனது தீவினையால் இறந்தான் ஆயினும், நீ அறிவின்றி அவனைக் கொன்றனை. ஆதலின், இப்பாபம் உன்னை உறுத்தும்," என்றது. அது கேட்ட காஞ்சனன் உடல் நடுங்கி உள்ளம் கலங்கித் தனது நகரத்தை அடைந்தான்.

# 21 கந்திற்பாவை வருவது உரைத்த காதை

## மணிமேகலை புலம்பல்

உறங்கிக் கிடந்த மணிமேகலை திடுக்கிட்டு எழுந்து, காஞ்சனன் செய்தியும் இளங்கோன் வெட்டுண்டதும் தூணில் இருந்த பாவை பகன்றதையும் அறிந்தாள்; உடனே தன் சுய வடிவத்தோடு சென்று, இறந்து கிடந்த இளங்கோனைக் கண்டு, "நீ முற் பிறப்பில் திட்டி விடம் என்னும் பாம்பினால் இறந்த போது, நானும் தீயில் விழுந்து உன்னுடன் இறந்தேன். அந்நாள் நீ உவவனத்திற்கு வந்த போது எனது உள்ளம் உன்னைத் தொடர்ந்தது. அது கண்ட மணிமேகலா தெய்வம் என்னை எடுத்துச் சென்று மணிபல்லவத் தீவில் வைத்தது. அங்குப் புத்த பீடிகையால் எனது பழம் பிறப்பை அறிந்தேன். மணிமேகலா தெய்வம் அங்குத்தோன்றி உனது பழம் பிறப்புச் செய்திகளை எல்லாம் கூறிற்று. பிறப்பவர் இறப்பார் என்பதையும், இறப்பவர் பிறப்பார் என்பதையும், அறத்தால் அடையக்கூடிய நன்மை களையும், மறத்தால் மருவக்கூடிய துன்பங்களையும் உனக்கு உறைக்க உரைத்து உனது பிறவித் துயரைப் போக்கவே நான் காய சண்டிகை வேடங்கொண்டேன். அந்தோ! நீ உனது கொடு வினையால் விஞ்சையன் வாளால் வெட்டுண்டனையே!" என்று புலம்பிக் கொண்டே அவன் உடலை அணுகினாள்.

## கந்திற் பாவை கழறல்

அவ்வெல்லை கந்திற்பாவைத் தெய்வம் அவளை நோக்கி, "செல்லேல்; மணிமேகலை! செல்லேல்; உதயகுமரனை அணுகாதே. நீயும் இவனும் பல பிறவிகளில் மனைவியும் கணவனுமாக இருந்தீர்கள் பிறவியை ஒழிக்க முயல்கின்ற நீ இதைப்பற்றி வருந்தாதே" என்றது. அப்போது மணிமேகலை அதனை வணங்கி, "இவ்வம்பலம் வருவார்க்கெல்லாம் உள்ளதை உரைத்துவரும் தெய்வம் நீதனே? நின்னடி பணிந்தேன். சென்ற பிறப்பில் இவ்வுதயகுமரன் பாம்பால் தீண்டப்பட்டமைக்கும்

இன்று இங்கு இப்படி இறந்தமைக்கும் காரணம் என்னை? அருள் கூர்ந்து அறிவிப்பாயாக" என வேண்டினாள்.

அக்கந்திற்பாவை, "அம்மையே, சென்ற பிறவியில் நீயும் உன் கணவனும் 'காயங்கரை' என்னும் ஆற்றங்கரையில் புத்த தேவரது வருகையைக் கூறி அறியாமையுள்ள மக்களின் மனமாசுகளைப் போக்கும் 'பிரமகருமன்' என்னும் முனிவற்கு உபசாரஞ் செய்யக் கருதி, அம்முனிவற்கு விடியற்காலத்தில் உணவளிப்பதற்கு வைகறையில் வருமாறு சமையற்காரற்குப் பணித்தீர்கள். அவன் பொழுது விடிந்து நேரங் கழித்து வந்தான்; வந்தவன், கால் வழுக்கிச் சமைக்கும் பாத்திரங்கள்மீது விழுந்து விட்டான். உடனே நின் கணவன், 'இவன் முனிவற்குச் செய்ய வேண்டும் தொண்டினை உரிய காலத்திற் செய்ய முடியாதவாறு காலந் தாழ்ந்து வந்தான்', என்று சினங்கொண்டு அவனை இரு கூறாகத் தன் வாளால் வெட்டினான். அத்தீவைனையாற்றான் அவன் முற்பிறப்பில் விஞ்சையன் வாளுக்கு இரையானான் அவரவர் தீவினைக்கு உரிய பயனை அவரவரே அனுபவிக்க வேண்டும் என்பது உண்மை," என்று உதயகுமரன் வெட்டுண்டு மடிந்ததற்குக் காரணம் கூறியது.

### கந்திற் பாவை வருவது கழறல்

மேலும் கந்திற்பாவை, "மணிமேகலையே, இனி மாதவர் பலர் அரசனிடம் சென்று இளங்கோன் இறந்ததை அறிவிப்பார், அரசன் உன்னைச் சிறைப்படுத்துவான்; அரசி உன்னைச் சிறைவீடு செய்து தனது காவலில் வைத்துத் துன்புறுத்துவாள். இஃதறிந்து மாதவி அறவண அடிகளிடம் முறியிடுவாள். அடிகள் அரசியைக் காண்பார்; பல நல்லுரைகள் வழங்குவார்; இராசமாதேவி உன்னைசை சிறை நீக்குவாள். நீ பிறகு ஆபுத்திரன் ஆளும் சாவக நாடு அடைவாய்; அவ்வரசனுடன் மணிபல்லவத்தை அடைவாய். அங்கு ஆபுத்திரன் தன் பழம் பிறப்பை உணர்வான்; பின் தன் ஊரை அடைவான். நீ அத்தீவை விட்டு, முனிவர் வடிவம் கொண்டு வஞ்சிமா நகர் அடைவாய்; அங்குள்ள சமயவாதிகள் பலருடைய கொள்கைகளைக் கேட்டறிவாய். அவருட் சிலர், 'இறைவனாகிய எமது தலைவன் எல்லா உயிர்களையும் முறைப்படி படைத்த தலைவன் என்பர்; சிலர், 'தனக்கென உருவம் அற்றவனாக இருந்து, பிற பொருள்களைப் படைப்பவனே இறைவன்' என்பர்; சிலர், 'இறைவன் நாம் செய்யும் நற்கருமங்களால் நமது பிறவிப்

பிணியைப் போக்கி நம்மை இன்ப உலகில் இருத்துவான்' என்பர்; சிலர், 'ஐம்பெரும் பூதங்களின் சேர்க்கையே உலகம்' என்பர். வேறு சிலர் வேறு பல பொய்யுரைகளைப் புகல்வர். ஒருவன், 'இறைவனும் இல்லை, இறந்தவரும் பிழையார்' என்பன். நீ அது கேட்டு நகைப்பை, பின்னர் அவனுக்கும் உனக்கும் பேச்சுவார்த்தை நடைபெறும்."

**பாவை, தன் வரலாறு உரைத்தல்**

கந்திற் பாவை, "எனது செய்தியையும் கேள்: நான் 'துவதிகன்' என்னும் பெயரை உடையவன். நான் பெருமை பெற்ற தெய்வகணங்களைச் சேர்ந்தவன்; மயன் என்னைப் போலச் செய்துள்ள இப்பாவையில் உறைகியேன்; இதனை விட்டு நீங்கேன்" என்றது.

**கந்திற் பாவை நடப்பன நவிலல்**

மணிமேகலை மீண்டும் அப்பாவையைப் மணிந்து. "யான் இறக்கும் வரை நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளை நவின்றருளல் வேண்டும்" என்று வேண்டினாள். பாவை, "மணிமேகலையே, காஞ்சிமா நகரம் மழையின்றித் தவிக்கும். நீ அதனை அறிந்து அவண் சென்று உயிர்களைக் காப்பாய். உன்னுடன் மாதவியும் சுதமதியும் காஞ்சிக்கு வருவர். அந்நகரத்தில் அறவண அடிகளும் உனது வருகையை எதிர் நோக்கி இருப்பர். அவரது அருளுரையால் காஞ்சி நகரத்தார் உன் தன்மையை உறுவர். நீ அமுதசுரபியைக் கொண்டு, உணவு வேண்டி வாடுவோரை உண்பிப்பாய். நீ சென்ற பின் அவ்வூரில் பல அற்புதங்கள் நடைபெறும். நீ வஞ்சிமா நகரில் சமயவாதிகளிடம் அறிந்த செய்திகளை விடாமல் அடிகளிடம் கூறுவை. அவர் தவம், தருமம், பிறவி நீக்கும் வழி முதலியவற்றைக் கூறி, 'பாவமாகிய இருள் நீங்கி உலகத்து உயிர்கள் இன்பமுறப் புத்த ஞாயிறு தோன்றுங்காறும் இறந்தும் பிறந்தும் நான் இந்த நகரிலேயே வாழ்வேன். ஆதலின், நீயும் நின் தாயும் நல்லற வழியினின்றும் வழுவாது இருப்பீராக' என்பர். நீ அப்பெரியோர் சொற்படி தவநிலையில் இருந்து காஞ்சியிலேயே இறப்பை; இறந்து, உத்தர மகத நாட்டிற் சென்று பல பிறவிகளை எடுப்பை. அப்பிறவிகள் அனைத்தும் ஆண் பிறவிகளாகவே இருக்கும். நீ அவற்றில் எல்லாம் அருள் ஒழுக்கமே பூண்டு வாழ்ந்து, புத்தரது தலை மாணவனாக இருந்து பிறவியை ஒழிப்பை.

“நீ முன்னர்ச் சாது சக்கரன் என்னும் முனிவனை உண்பித்ததனால், உன் மூதாதையருள் ஒருவனைக் கடலிலிருந்து காத்த மணிமேகலா தெய்வம் உன்னை மணிபல்லவத்திற்குக் கொண்டுசென்று, உனது முற்பிறப்புச் செய்திகளை அறியச் செய்தது,” என்று யாவற்றையும் கூறி முடித்தது.

இவை அனைத்தையும் கேட்ட மணிமேகலை வலையிலிருந்து தப்பிய மயில் போன்று மகிழ்ச்சியுற்றாள்; மன மயக்கம் ஒழித்தாள். அவ்வமயம் மலர் கதிரோன் உலகு துயில் எழுப்பக் கீழ்த்திசையில் தோன்றினன்.

# 22. சிறை செய் காதை

### மாதவர் மன்னனை வாழ்த்தல்

கந்திற் பாவையையும் முதியாள் கோட்டத்தையும் வணங்கப் போந்த பொது மக்களால் உதயகுமரன் வெட்டுண்ட செய்தியை உணர்ந்த சக்கரவாளக் கோட்டத்துவாழ் **மாதவர்** அங்கு வந்து பார்த்தனர்: மணிமேகலையைப் பார்த்து, "இவன் வெண்டுண்ட செய்தியை நீ அறிவையோ?" என்றனர். அவள் ஒன்றும் ஒழியாது உரைத்தாள். உடனே மாதவர் அவளையும் இளங்கோன் உடலையும் ஓர் இடத்து ஒளித்து, மன்னனைக் குறுகினர். அவருள் ஒருவர், "உயர்ந்தோங்கு உச்சி உவாமதி போல நிவந்தோங்கு வெண்குடை மண்ணகம் நிழற்செய, வேலும் கோலும் அருட்கண் விழிக்கத் தீதின்றி அருள்க நீ ஏந்திய சக்கரம்! நினக்கென ஏற்பட்ட ஆயுள் முழுவதும் மனக்கினிதாக வாழ்க!

### ககந்தன் வரலாறு

"வேந்தே, இந்நகரில் **இன்று மட்டும் அன்று**, பண்டைக் காலத்திலும் காம நோய் கொண்டு பத்தினிப் பெண்டிரிடம் தம் மனத்தை வைத்தும் தீங்கு செய்ய நினைந்தும் தம் உயிரைப் போக்கியோர் பலராவர். முன்பு இந்நகரத்தைக் '**காந்தன்**' ஆண்டுகொண்டிருந்த போது வேந்தர் குலத்தைக் கருவறுத்துத் திரிந்த '**பரசுராமன்**' இந் நகரை வந்தான், அப்பொழுது சம்பாபதித் தெய்வம் அரசன் முன் தோன்றி, 'நீ பரசுராமனுடன் போரிடல் தகாது; ஆதலின் எங்கேனும் சென்று மறைந்து கொள்' என்றது. உடனே வேறு இடம் செல்லத் துணிந்த வேந்தன், நாவலந்தீவில் பலரையும் அஞ்சச் செய்பவனும் காதற் கணிகையின் மகனுமான '**ககந்தன்**' என்பானைத் தன்னிடம் அழைத்து, 'நீ வேந்தர் மரபில் வந்தவன் அல்லை. ஆதலால் பரசுராமன் உன்பால் வாரான்.. நான் அகத்தியர் கட்டளை பெற்று இவண் வருங்காறும் நீ இந் நகரை ஆண்டுகொண்டிரு. நீ ஆள்வதால் இந்நகருக்குத் '**ககந்தி**' எள்னும் பெயர்

உண்டாவதாக' என்று கூறி, அரசை அவனிடம் அறித்துச் சென்றான்.

### மருதி வரலாறு

"ககந்தன் அரசாட்சி நடந்து வந்தது. ஒருநாள் தெளிந்த நீரையுடைய காவிரியில் நீராடிவிட்டு '**மருதி**' என்னும் பார்ப்பனி தனியே வந்து கொண்டிருந்தாள். **ககந்தனது இரண்டாம் மகன்** அவளை உறுதியற்றவள் எனப் கருதி. 'நீ வா' என்றான். அது கேட்ட மருதி கலங்கி,

*'மண்திணி ஞாலத்து மழைவளந் தரூஉம்*
*பெண்டிர் ஆயின் பெறர்நெஞ்சு புகாஅர்.*

யான் இவன் நெஞ்சம் புக்கது என்னோ! இனி அந்தணனது செந்தீப் பேணும் தகுதி எனக்கில்லையோ!' எனக் கலங்கி, பூதசதுக்கம் புகுந்தாள்; புகுந்து, 'தெய்வமே, கொண்டவனைத் துரோகம் செய்திலேன். கண்டவன் நெஞ்சிற் புகுந்தேன்! மழையைப் பெய்விக்கும் கற்புக் கெட்டேன். தீமை செய்பவரைப் பாசத்தால் பிணித்து அடித்து உண்ணக் கூடிய தெய்வம் பூத சதுக்கத்தில் இருப்பதாகக் கூறப்படல் பொய்யோ?' என்று சொல்லிப் புலம்பி அலறினாள்.

*"அவ்வேளையில் பூதம் தோன்றி, 'மடக்கொடி!*
*'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழு தெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்*
***பொய்யில் புலவன்** பொருளுரை தேறாய்.'*

பொய்க்கதையையும் விடுகதைகளையும் பிறர் பால் கேட்டுப் பலவகை வாத்தியங்கள் முழங்கும் ஆடம்பரம் மிக்க விழாக்களையும் விரும்பிப் பார்த்துத் தெய்வங்கட்கு வழிபாடு செய்தலையும் மேற்கொண்டனை. ஆதலின், நீ மழையைப் பெய்விக்கும் கற்புடையள் அல்லை; தீ நோக்குடையோர் உள்ளத்தைச் சுடத்தக்க இயல்பையும் பெற்றவள் இல்லை. மேற்கூறப்பட்டவைகளை விட்டொழிப்பின் நின் கற்புச் சிறக்கும். ஓங்கிரு வானத்து மழையும் நின் சொற்படி நடக்கும். தான் விரும்பிய வழி ஒழுகும் பெண்ணைக் கட்டுவது போல எனது பாசம் உன்மைப் பிணியாது. அரசன், இக்குற்றம் செய்தவனை ஏழுநாளுள் தண்டிப்பான்; தவறின், யான் தண்டிப்பேன். ககந்தன்

ஏழுநாட்களுள் இச் செய்தியை அறிந்து அக்கெட்டவனைத் தன்வாளால் வீழ்த்துவான்' என்றது. அங்ஙனமே ககந்தன் தன் இரண்டாம் மகனை வாளால் துண்டித்துவிட்டான்.

**விசாகை வரலாறு**

"இன்னொன்று கேள்; இவ்வூரில் இருந்த **தருமதத்தன்** என்னும் வணிகனும் அவன் மாமன் மகளான **விசாகை** என்னும் பெண்மணியும் இளம்பருவத்தில் ஒருவர்மீது ஒருவர் மிகுந்த அன்புடன் இருந்தனர், ஊரார் 'இவ்விருவரும் களவுமணம் செய்துகொண்டனர்' என்பதைக் கட்டிவிட்டனர். அதனை அறிந்த விசாகை வெந்துயர் அடைந்து. கந்திற் பாவையைக் கண்டு அடிபணிந்து, 'குற்றமற்ற என்மீது ஊரார் சுமத்தும் பழிச்சொல்லை ஒளிப்பாய்' என்றனள். அத்தெய்வம் ஊராரை நோக்கி, 'விசாகை குற்றமற்றவள். அவள்மீது வீண்பழி சுமத்தல் வேண்டா' எனக் கூறியது. பின்னர் விசாகை மனையை அடைந்து, 'என்மீது சுமத்திய பழி நீங்கியது, எனினும் நான் இப்பிறப்பில் மணஞ் செய்யேன்; மறு பிறப்பில் என் மைத்துனனையே மணப்பேன்' என்று விரதங் கொண்டாள்; கொண்டு, கன்னி மாடம் புகுந்து அங்குத் தவம் செய்துகொண்டிருந்தாள்

"தருமதத்தன் உலக அறவியை அடைந்தான்; பழி நீக்கிய பாவையைப் பணிந்தான்; தென் மதுரையைச் சேர்ந்து வாணிபஞ் செய்து வந்தான். அவனும், 'நான் விசாகையையே மறு பிறவியில் மணப்பேன். இப்பிறவியில் எவரையும் மணவேன்' என்று விரதம் பூண்டான். அவன் அந்நகரிற் பெருஞ் செல்வம் சேர்த்தான். வயதும் அறுபது ஆயிற்று. அப்பொழுது அவனை வந்து கண்ட பார்ப்பனன் ஒருவன். 'நீ மணம் இன்றிப் பொருள் சேர்த்துப் பயன் என்? மனைவி யற்றவர் எவ்வளவு அறம் ஆற்றியும் தேவர் உலகிற் புகார் என்பதை நீ கேட்டிலையோ? நீ தாமதம் இன்றி உனது நகரத்தை அடைந்து மணஞ்செய்து வாழ்க' என்று கூறி அகன்றான்.

"உடனே தருமதத்தன் தன் செல்வத்தோடு இந்நகரை அடைந்தான். அவன் வரவைக் கேள்வியுற்ற விசாகை கன்னி மாடத்திலிலுந்து வெளிப்பட்டு, 'நாம் இருவரும் வயதேறியவர் ஆனோம்; அடையாளம் அறிந்துகொள்ள முடியாத நிலையிலும் உள்ளோம். உனக்கு அறுபது வயதாகி விட்டது. எனக்கும் நரை தோன்றி விட்டது. நம் இளமையும் இளமை அன்பும் எங்கே

ஒளித்தன? இப் பிறவியில் நான் உனக்கு மனைவியாகேன். நாம் அடுத்த பிறவியில் ஒன்று படுவோம்.

*'இளமையும் நில்லா; யாக்கையும் நில்லா ;*
*வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா;*
*புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்;*
*மிக்க அறமே விழுத்துணை ஆவது.'*

ஆவதால், நீ நினது பெருஞ் செல்வத்தை அறநெறியிற் செலவிடுக' என்றாள். தருமதத்தன் அங்ஙனமே பல நல்லவறங்களைச் செய்தான்.

"விசாகை தன் இளம் பருவத்தில் ஒருநாள் உலக அறவியை அடைந்து, தன்மீது ஊரார் கூறிய பழியைத் தீர்த்துக்கொண்டு மீள்கையில் **ககந்தனது முதல் மகன்** அவளைக் கண்டான்; தனது தலையில் இருந்த மலர் மாலையை எடுத்து விசாகையின் கழுத்திற் போட எண்ணி, மலர் மாலையில் கை வைத்தான். வைத்த கை எடுக்கக் கூடவில்லை. அது கண்ட ஊரார் விசாகையின் பெருமையை உணர்ந்து போற்றினர். தன் மகன் தவற்றைக் கேள்வியுற்ற ககந்த மன்னன் அவனையும் தன் உடைவாளால் வெட்டிக் கொன்றான். அரசே, நீ ஊழிதோறும் உலகம் காத்து வாழ்க" என்று அமைதியாகக் கூறி முடித்தனர்.

## உதயகுமரன் மடிந்தது உரைத்தல்

மன்னவன் மாதவரை நோக்கி, '**இன்று மட்டும் அன்று** ' என்று எடுத்து ஏதேதோ புகன்றீர். **இன்றும்** அங்ஙனம் ஏதேனும் நடந்ததோ?" என்று கேட்டான். அவருள் ஒரு மாதவர், "வேந்தே, நின் அரசாட்சியில் தீதில் வாதாகுக! அறிஞரால் நீக்கப்பட்டவை உலகில் **ஐந்து** உண்டு. அவையே **பொய், கொலை, கள் காமம், களவு** என்பன. இவ்வைந்தனுள் '**காமம்**' என்பதைக் கடிந்தோர் ஏனைய நான்கையும் கடிந்தோர் ஆவர். அதனைக் கடியாதவர் ஏனையவற்றையும் கடியாதவர் ஆவர். சித்திராபதி மகள் மாதவி என்பாள், கோவலன் மதுரையில் வெட்டுண்ட செய்தி கேட்டு மாதவர் தவப் பள்ளியை அடைந்தாள். அவள் மகளான மணிமேகலையும் பிக்குணிக் கோலத்தோடு மனைதோறும் சென்று ஐயமேற்று ஏழைகளை உண்பித்து வருகிறாள். அவளைக் கைப்பற்ற உதயகுமரன் நிழல் போல் அலைந்து திரிந்தான். அவனுக்கு அஞ்சிய மடக்கொடி நல்லாள்

காயசண்டிகை என்பவள் வேடத்தில் காணப்பட்டாள். காய சண்டிகை என்பவள் உலக அறவியில் நெடுங்காலம் இருந்த வித்யாதர மகள். அவள் சமீபத்திற்றான் தன் ஊர்க்குச் சென்றாள். அவள் ஊர் போனதை அறியாத அவள் கணவன், உலக அறவியில் அவளைக் காண வந்தான்; காயசண்டிகை உருவத்தில் இருந்த மணிமேகலையே தன் மனைவி என்றெண்ணினாள்; அவளை உதயகுமரன் தொடர்ந்ததைக் கண்டு சினந்தான். இரவில் உதயகுமரன் தனித்து உலக அறிவியிற் புகுந்த போது, விஞ்சையன் மறைந்திருந்து வாளால் அவனை வெட்டி வீழ்த்தினான். இளங்கோன் செய்த தீவினையே அவனை இவ்வாறு செய்தது" என்று உரைத்தார்.

அது கேட்ட வேந்தன், **சோழிக ஏனாதி** என்னும் தலைவனை அழைத்து, "யான் உதயகுமரற்குச் செய்ய வேண்டிய தண்டனையை வித்யதரனே செய்துவிட்டான்.

'மாதவர் நோன்புடன் மாடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனில் இன்றால்.'

ஆதலின், - பசுக் கன்றுக்காகத் தன் மகனைக் கொன்ற சோழர் குடியில் தீவினையாளன் ஒருவன் தோன்றினான் என்பதை மற்ற மன்னர்கள் அறிதற்கு முன்பே அவனைச் சுடு காட்டில் சேர்த்துவிடுக; அக் கணிகை மகளாகிய மணிமேகலை யையும் காவல் செய்க" என்று கட்டளையிட்டான். சோழிக ஏனாதி அரசனுடைய கட்டளையே உடனே நிறைவேற்றினான்.

# 23. சிறை விடு காதை

### வாசந்தவை

உதயகுமரன் இறந்ததைக் கேட்டு இராசமா தேவி புத்திர சோகத்தால் வாடினாள். அவ்வமயம் அரசற்காயினும் அரசகுமாரனுக்காயினும் அரசமாதேவிக்காயினும் மனத்துயர் நேர்ந்த போது அவர்கட்குச் சமாதானக் கட்டுரைகள் கூறித் தேற்றும் '**வாசந்தவை**' என்னும் நரை மூதாட்டி அரண்மனை புகுந்து, இராசமாதேவியின்முன் வந்தாள்; அவளைத் தொழுது வாழ்த்தினாள். "அரசியே, அரசவுரிமை கொண்டு தம் குடிகளைப் பிறர் நலியாமற் காத்தலும் பகைவர் நாட்டைத் தமதாக்கலும் உடையராய் இறுதிக்காலத்தில் தாமே இறந்தவுடன் தருப்பைப் புல்லிற் படுக்கவைத்துப் 'போரில் இறந்த மன்னர் அடையும் வீர சுவர்க்கம் அடைக' என்று வாளாற் பிளத்தலும் உடைய அரச குடியிற் பிறந்த நீ, 'மகன் இறந்தான் ' என்று புலம்புதல் நாணம் தரத்தக்கது. அன்றியும், நின் மகன் தன் நாட்டைக் காக்க உயிர்விட்டவன் அல்லன்; பிறர் நாட்டைக் கைக்கொள்ள முயன்று உயிர் விட்டவனும் அல்லன்; தீ நெறியிற் சென்றதனால் உயிர் விட்டான். ஆதலால் நீ துன்பம் அடையாதே" என்று கூறிச் சென்றாள்.

### அரசனும் அரசியும்

பின்னர் அரசி தன் துயரத்தை வெளிக்காட்டாது, 'மணிமேகலையை எப்படியேனும் வஞ்சித்துத் துன்பப் படுத்துவேன்' எனத் தீர்மானித்தாள். அவள் ஒரு நாள் அரசனைப் பார்த்து, "அரசே, பிக்குணி வேடம் கொண்ட மணிமேகலையை நாடிச்சென்று அறிவு திரிந்தவனாகிய உதயகுமரன் வாளுக்கு இரையானது முறையே. ஆனால் காமனும் கண்டு பெருமூச்சு எறியும் இளமைத் தன்மையின் இயல்பை அடக்கிப் பேரறிவு கொண்டு தவநெறிப்பட்ட மணிமேகலைக்குச் சிறை தகுதியாகாது," என்றாள். அது கேட்ட வேந்தன், "வேந்தர்க்குக் கல்வி, அறிவு, ஒழுக்கம் இவை

உடையவரே மக்களாவர். இவை இல்லாதவர் மக்களாயினும் அவரை மறத்தலே நன்று என்பதை நீ அறிந்திருப்பதற்காக அகம் மகிழ்கின்றேன். உனது விருப்பப்படியே அக்கணிகை மகளைச் சிறைவீடு செய்க'' என்றான். அப் பொழுது இராசமாதேவி மணிகேலையை அழைத்துவரச் செய்து. “மணிமேகலை என்னுடன் இருப்பினும் இருக்கக்கடவள்; தன் பிச்சைக் கலனை ஏந்திச் செல்லினும் செல்க; தடுப்பார் எவரும் இல்லை,'' என்று கூறி, அவள் மீது அன்பு கொண்டாள் போல நடந்து, அவளை அழைத்துக்கொண்டு அந்தப்புரம் சென்றாள்.

## வஞ்சம் தீர்க்க முயற்சி

சென்றவள், தன் வஞ்சம் தீர்க்க விழைந்து, மணிமேகலைக்குப் பல துன்பங்கள் இழைத்தாள்: (1) ‘இவளைப் பைத்தியக்காரியாக்கினால் பலரும் இவளைக் கல்லெறிந்து துன்புறுத்துவர்' என்றெண்ணி, மயக்கம் தரத்தக்க மருந்துகளைக் கொடுத்தாள். மணிமேகலையோ மறுபிறப்பு உணர்ந்தவள்; ஆதலால், அம்மருந்துகளால் சிறிதும் மயக்கமுறாதிருந்தாள். அரசி, (2) கல்வி அறிவற்ற இளைஞனுக்குக் கைந்நிறையப் பொற்காசுகளைக் கொடுத்து, ‘நீ மணிமேகலையின் உடலில் ஓர் அடையாளத்தைச் செய்து, அவள் உனக்கு மனைவியானாள் எனப் பலரிடமும் கூறுவாயாக' என்று ஏவினாள். அவன் மணிமேகலை இருந்த இடம் சென்றான். அவனைக் கண்ட மணிமேகலை உண்மை உணர்ந்து, தன் மந்திரபலத்தால் ஆண் வடிவம் கொண்டிருந்தாள், இளைஞன், ஆடவனைக் கண்டு திடுக்கிட்டு, ‘அந்தப்புரத்தில் ஆடவர் வரமாட்டார். இங்கோ இவ்வாடவன் இருக்கிறான். அரசியின் மனநிலை இன்னதென்பது விளங்கவில்லையே!' என்று எண்ணி அச்சங் கொண்டு ஓடிவிட்டான். (3) அரசி, ‘மணிமேகலை நோய்வாய்ப் பட்டாள்' எனக் கூறி, அவளைப் புழுக்கறையுள் அடைத்து விட்டாள். மணிமேகலை, உணவின்றி உயிர் பிழைத்திருக்கும் மந்திரம் அறிந்தவள் ஆதலால் உடல் வாடாமல் சுகமாக இருந்தாள். மூன்று உபாயங்களும் தவறியதைக் கண்ட இராசமாதேவி அஞ்சி நடுக்கங் கொண்டு, அவள் பாதங்களை பணிந்து, “என் ஆருயிர் மகன் இறந்த வருத்தத்தால் உனக்குப் பல துன்பங்கள் செய்ய முயன்றேன். என் பிழையைப் பொறுத்தருள்க'' என்று வேண்டினாள்.

**அறிவுரை அறைதல்**

மணிமேகலை அரசியை நோக்கி, "பூங்கொடி நல்லாய், நீ தகாதன செய்தனை. முற்பிறப்பில் நீலபதியின் வயிற்றில் தோன்றிய இராகுலன் திட்டி விடத்தால் உயிர் நீத்தபொழுது, யான் அத் துன்பம் பொறாமல் தீக்குளித்திறந்தேன். அப்பொழுது நீ இவ் விளவரசனுக்காக எங்கிருந்து அழுதாய்? உடல் போனதற்கு அழுதாயோ? அல்லது உயிர் போனதற்கு அழுதாயோ? உயிரின் பொருட்டு அழுதனையாயின், அது, தான் செய்த நல்வினை, தீவினைகட்குத் தக்கவாறு ஓர் இடத்தைப் பெறுமே அன்றி நம்மால் அதனைக் காணல் இயலாது. ஆதலால், நீ உயிரிடம் அன்பு கொள்வாயாயின் எல்லா உயிர்க்களிடமும் அன்பு கொள்க. மேலும் உன் மகன் இறந்ததற்குக் காரணம் கேட்பாயாக: அவன் முற்பிறப்பில் சமையல் பாத்திரங்கள் சிதையும் படி வழுக்கி வீழ்ந்த மடையனை வாளால் வெட்டியதால் உண்டான தீவினையே அப்பிறவியில் பாம்பு தீண்டியும், இப்பிறவியில் விஞ்சையன் வாளுக்கு இரையாகியும் உயிர் இழந்தான்," என்று கூறித் தான் உவவனம் சென்றது முதல் கந்திற்பாவை கழறியது வரையிலும் நடந்தவற்றை நவின்றாள்.

மணிமேகலை, மேலும் மன்னவன் தேவியை நோக்கி, "நீ என்னைப் பைத்தியக்காரியாக்கப் பல மருந்துகளைக் கொடுத்தாய். நான் பழம் பிறப்பை உணர்ந்தவள் ஆதலால் மயங்காமல் இருந்தேன். நீ காரிருளில் கல்வியறிவற்ற கயவனை என்பால் ஏவினை. நான் அஃதறிந்து ஆண் உருக்கொண்டு இருந்தேன். நீ என்னைப் புழுக்கறையுள் போட்டனை. நான் உணவின்றி வாழும் மந்திரம் அறிவேன்; அதனால் உயிர் பிழைத்திருந்தேன். நீ என் கணவனை ஈன்றவள். ஆதலால், நான் உனது தீவினையும் நீக்கவேண்டுமென எண்ணினேன். அதனாற்றான் நான் அந்திரம் செல்லும் மந்திரமும் வேற்றுருக் கொள்ளும் மந்திரமும் அறிந்திருந்தும் அப்படிச் செய்யாமல் இருந்தேன். நீ உனது மன மயக்கம் ஒழிந்து யான் உரைப்பன வற்றைக் கேட்பாயாக:

"கொடுங்கோன்மை பொருந்திய நாட்டில் கணவனால் துறக்கப்பட்ட ஒருத்தி ஆண் குழந்தையுடன் வெளியேறினாள்; பொருள் கொடுத்தவரை எல்லாம் கணவராகக் கொண்டு

வாழ்ந்தாள்; அவள் மைந்தனைப் பார்ப்பான் ஒருவன் வளர்த்து வந்தான். அம்மைந்தன் உற்ற வயதடைந்ததும், வேசையாக வாழ்ந்த தன் தாயைப் புணர்ந்தான்; அவன் தன் தாய் என்பதை உணர்ந்த பின் மானமேலீட்டால் மாண்டான்,' என்ற இவ்வரலாற்றால் **காமத்தின் கொடுமை** நன்கறியக் கிடக்கிறது.

" 'வேடன் ஒருவன், நீர் வேட்கையால் வழி நடந்து வாடித் திரிந்த சூல் கொண்ட ஒருமானின் வயிறு கிழியும்படி அம்பை விட்டதனால், அப்பெண்மான் வயிற்றிலிருந்து குட்டி கீழே விழுந்தது. அது கண்டு அலறிய பெண் மானை ஓடிச் சென்று கண்டு கண்ணீர் விட்டு அவ் வேடன் உயிர் துறந்தான்' என்பதால் **கொலையின் கொடுமை** உணரக் கிடக்கிறது. **கள்** உண்டவர் மனம் மயங்கி ஆண் யானை முன் சென்று அதன் கோட்டில் வீழ்ந்து இறத்தலை நீ கண்டதில்லையோ? **பொய்** வழியில் ஒழுகுபவர் துன்பம் அடையாதிரார். **களவு** செய்யும் பழக்கம் உடையவர் அடையுற் துன்பம் இது என எடுத்துக் கூறல் இயலாது. ஆகவே, உலகில் வாழ் மாந்தர்க்குத் துன்பந் தருவன **காமம், கொலை, கள் பொய் களவு** ஆகியவையே. இவற்றை அடியோடு அகற்றல் வேண்டும். **இவற்றை நீக்காவிடின், கல்வியால் ஒரு சிறிதும் பயனில்லை**. வறுமைத் துன்பம் உடையவர்களின் துயரத்தை நீக்குபவரே இவ்வுலகில் சினத்தை வெறுத்து, நன்மை முழுவதையும் அறிந்து வாழ்பவர் ஆவர். வருந்தி வருவோரின் பெரும் பசி களைபவரே தாம் செல்லும் நல்லுலகத்தை அறிந்தவர் ஆவர். எல்லா மக்களிடத்தும் அன்புகொண்டு ஒழுகுபவரே தமது துன்பத்தைப் போக்கிக் கொள்ள வழி தெரிந்தோர் ஆவர்," என்று **அறிவுரை** அறைந்து, அரசியின் அகத்தில் அமைதியை நாட்டினாள். இராசமாதேவி மனந்தெளிந்து மணிமேகலை மலரடிகளில் வீழ்ந்து வணங்கினாள் மணிமேகலை, "நீ, என் கணவனைப் பெற்றவள்; அரசன் மாதேவி; நீ என்னை வணங்குதல் தவறு" என்று கூறித் தான் வணங்கினாள்.

# 24. ஆபுத்திரன் நாட்டை அடைந்த காதை

## சித்திராபதி அரசியிடம் கூறுதல்

மாதவி தாயான சித்திராபதி, உதயகுமரன் கொலை யுண்டதும் மணிமேகலை சிறைப்பட்டதும் கேட்டு மனங்கலங் கினாள்; மணிமேகலையைச் சிறையிலிருந்து விடுவிக்க விரும்பி இராசமாதேவியை அடைந்தாள்; அவளைக் கண்டு அடி பணிந்தாள். அவள் அரசியை நோக்கி, "மன்னவன் மாபெருந்தேவியே !

*'கண்ட கண்ணினும் கேட்ட செவியினும்*
*உண்ட வாயினும் உயிர்த்த மூக்கினும்*
*உற்றுணர் உடம்பினும் வெற்றிச்சிலைக் காமன்*
*மயிலையும் செயலையும் மாவும் குவளையும்*
*பயிலிதழ்க் கமலமும் பருவத் தலர்ந்த*
*மலர்வாய் அம்பின் வாசம் கமழப்*
***பலர்புறங் கண்டோன் பணிந்துதொழில் கேட்ப'***

வாழ்ந்த மாதவி, கோவலன் இறந்த கொடுந்துயர் கேட்டு தனது பரத்தமைத் தொழிலை விட்டு அறவோர் பள்ளியைச் சேர்ந்தாள்; அவள் மகளாகிய மணிமேகலை ஐயக்கலன் ஏந்தி மனைதோறுஞ் சென்று பிச்சை ஏற்கிறாள். இவ்விருவர் செயல்களும் ஊரார் கண்டு நகைக்கவே இடமாயின. மணி மேகலையால் உதயகுமரன் இறந்ததுமட்டுமன்று, இவ்வூர்க்கே ஆபத்தொன்று வரப்போகிறது. அதனைக் கேட்பாயாக:

## அன்றொருநாள் நடந்த செய்தி

"முன்னாளில் நெடுமுடிக்கிள்ளியாகிய நம் சோழ வேந்தன் இந்நகரத்துக் கடற்கரையில் உள்ள புன்னைமரச் சோலையில் உலவிக்கொண்டிருந்தான். அப்பொழுது அங்குப் பேரழகு உடைய மங்கை ஒருத்தி தோன்றினாள். அரசன்

அவளோடு ஒரு திங்கள் அச் சோலையிலேயே வாழ்ந்தான் அப்பெண் கருவுற்றாள். ஒருநாள் அவள் சோழனுக்கு அறிவியாமல் தன் ஊரை அடைந்தாள். அரசன் அவளைப் பல இடங்களிலும் தேடி அலைந்துகொண்டிருந்தான். அவ்வெல்லை அவன் முன் அற்புத ஆற்றல் பெற்ற **சாரணன்** ஒருவன் தோன்றினான். அரசன் அவனைக் கண்டு வணங்கி, 'என் உயிர் அனையாள் எங்கொளித்தாள் என்பதை அறியாது நான் வாடுகின்றேன். அவளைத் தாங்கள் கண்டதுண்டோ?' என்று கேட்டான். சாரணன், 'அரசனே, நான் அவளை இப்பொழுது காணவில்லை. நான் அவளை முன்பே அறிவேன். அவள் நாகநாட்டு அரசன் **வளைவணன்** என்பானுக்கும் அரசி '**வாசமயிலை**' என்பாளுக்கும் பிறந்தவள். அவள் பெயர் 'பீலிவளை' என்பது. அவள் பிறந்தபோது சோதிடன், 'இவள் சூரியகுல வேந்தனைக் கூடிக் கருவுற்று வருவாள்' என்று கூறினான். ஆதலால் அவள் உன்னுடன் உறைந்து மறைந்தாள். இனி அவள் உன்னிடம் வரமாட்டாள். அவள் பெற்ற **மகனே** உன்னிடம் வருவான். ஆதலின், நீ அவளைப் பற்றிய கவலையை ஒழிப்பாயாக. வேந்தே, இந்த நகரத்தை மணிமேகலா தெய்வத்தின் சொல்லாலும் இந்திரன் சாபத்தாலும், இந்திரவிழா நடத்தப்படவில்லையாயின், கடல் கொண்டுவிடும். ஆதலால் அதனைத் தவறாது ஆண்டுதோறும் செய்து வருக' என்று கூறிப் போனான்.

"அன்று முதல் இந்நகரமக்கள் எப்பொழுது இந்நகருக்குக் கேடு வருமோ என்று அஞ்சிக் கொண்டிருக்கின்றனர். நானும், 'தனது பெயரைக் கொண்ட பெண் அடைகின்ற துன்பத்தை நீக்க மணிமேகலா தெய்வம் வருமே!' என்று அஞ்சுகிறேன். மணிமேகலையைத் துன்புறுத்தல் தீது. அவளை என் மனைக்கு அனுப்பி விடுக" என்றாள்.

இராசமாதேவி, "அறிஞரால் வெறுக்கப்பட்ட கள், பொய், காமம், கொலை, களவு ஆகிய இவற்றையே வாழ்க்கைத் துணியாகக் கொண்ட உனது வாழ்வு தூயதன்று என்று அஞ்சி விட்டு வந்த மணிமேகலை, உன்னுடன் சென்று உனது மனையில் வாழத் தக்கவள் அல்லள். இவள் என் மனையிலேயே இருக்க" என்று கூறிக்கொண்டிருந்தாள்.

## அடிகள் அறவுரை

மணிமேகலை சிறைப்பட்டதை அறிந்த மாதவி, அதனைத் தன் தோழியான சுதமதிக்குக் கூறி வருந்தி., அறவண அடிகளிடம் சென்று பணிந்து, நடந்தவற்றை நவின்றாள். உடனே அவர் மாதவியையும் சுதமதியையும் அழைத்துக் கொண்டு அரசியை அடைந்தார். இராசமாதேவி முதலிய அந்தப்புர மாதரும் சித்திராபதியும் மணிமேகலையும் அடிகளைப் பணிந்தனர். அரசி பணிந்து, "அடிகளே, என் காண்தகு நல்வினை நும்மை இங்கழைத்தது போலும்! உங்கள் யாக்கை வாழ்க பல்லாண்டு" என்றாள். அடிகள், "தேவீ, கேட்பாயாக : யான் தவ யாக்கையைப் பெற்றேன் ஆயினும் **வீழ்கதிர்** போன்றேன். பிறந்தார், மூத்தார், பிணிநோய் உற்றார் ஆகிய இவர்கள் 'இறந்தார்கள்' என்பது இயல்பே அன்றோ? பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப் பயன் ஆகிய **பன்னிரண்டும்** அறிந்தவர் பெரும் பேறு அறிந்தவர் ஆவர்; அறியாதவர் ஆழ்நரகறிவர்.

"**பேதைமை**யாவது-சொல்லப்பட்ட இவற்றை உணராது மயங்கி, இயற்படுபொருளால் கண்டது மறந்து, ' முயற்கோடு உண்டு' எனக் கேட்டது தெளிதல். **செய்கை**யாவது - உயிராகிய உலகம் அளவில்லாதன என்பதை அறிந்து செய்தல். **தீவினை** யாவது - கொலை, களவு, காமம் ஆகிய உடம்பில் தோன்றுவன மூன்றும் ; பொய், கோள், கடுஞ்சொல், பயனில்லாத சொல் என்னும் நான்கும் ; காமம் - வெகுளி - மயக்கம் என்னும் மூன்றும் ஆகிய **பத்தும்** அறிஞர் வெறுப்பர். இவற்றை விரும்புவோர் விலங்கும் பேயும் நரகருமாகிக் கலங்கியவுள்ளக் கவலையில் தோன்றுவர். **நல்வினை**யாவது - இப்பத்தினின்றும் நீங்கிப் பஞ்ச சீலம் முதலியன தாங்கி, தானம் தலைநின்று தேவரும் மக்களும் பிரமருமாகி நல்வின்ப் பயன் நுகர்தல்.

"பெண்மணிகளே, இப்புரைதீர் நல்லறம் கேட்டீர்கள். நீங்கள் இதன்படி நடந்து நன்மை அடையுங்கள். மறுபிறப் புணர்ந்த மணிமேகலையே, நீ மற்றச் சமயக் கொள்கைகளை எல்லாம் அறிந்து வந்தபின் பௌத்த சமயக் கொள்கைகளைப் பற்றி அறிவிப்பேன்.. நான் செல்வேன்" எனஙனறெழுந்தார். அப்பொழுது இளங்கொடியாள் எழுந்து அடிகளைப் பணிந்து, மற்றவரை நோக்கி "இம்மாதவர் நன்மொழி மறவாது பின்பற்றி உய்வீர்களாக. நான் இந்நகரத்தில் வாழ்வேனாயின்,

'அரசிளங்கோனைக் கொன்றவள்' என்று என்னை இகழ்வர். ஆதலால் நான் ஆபுத்திரன் நாட்டிற்குச் சென்று பிறகு மணிபல்லவத்தை அடைந்து, புத்த பீடிகையைத் தொழுது, மீண்டு வஞ்சி நகரத்தை அடைவேன்; அங்குப் **பத்தினிக் கடவுளாகிய கண்ணகியை** வணங்கிப் பல இடங்கட்கும் சென்று நல்லறம் புரிந்துகொண்டிருப்பேன். நீங்கள் எனக்குத் துன்பம் நேருமென்றெண்ணிக் கவலையுற வேண்டா. எனக்கு ஒரு தீங்கும் உண்டாகாது" என்று கூறிப் பொன் வெந்து உருகினாற் போலச் செக்கர் வானம் தோன்றிய அந்திப்போதில் புறப்பட்டாள்; உலக அறவி, முதியாள் (சம்பாபதி) குடிஞை, கந்திற்பாவை இம்மூன்றையும் வலங்கொண்டு அந்தரத்திற் பறந்தாள். அறவண அடிகளும் தமது தவப் பள்ளியை அடைந்தார்.

மணிமேகலை இந்திரன் மருமான் ஆகிய **புண்ணிய ராசன்** (ஆபுத்திரன்) இருந்த நகரத்துப் புறத்ததோர் பூம்பொழிலில் தங்கினாள்; அங்கு இருந்த **தருமசாவகன்** அடிகளை வணங்கி அவன் மூலமாக அரசன் பெயர், நகரத்தின் பெயர், நாட்டுச் சிறப்பு இவற்றை அறிந்தாள்.

# 25. ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை

## ஆபுத்திரன் மணிமேகலையைக் காணல்

மணிமேகலை தருமசாவகனிடம் பேசிக் கொண்டிருந்த போது புண்ணியராசன் அங்கு வந்தான்; வந்து அடிகளைப் பணிந்து,

*'அறனும் மறனும் அநித்தமும் நித்தந்*
*திறனும் துக்கமும் செல்லுயிர்ப் புக்கிலும்*
*சார்பில் தோற்றமும் சார்பறுத் துய்தியும்*
*ஆரியன் அமைதியும் அமைவுறக் கேட்டு',*

பெண்ணினை இல்லாப் பெருவனப்புற்றாள் கண்கள் அசைதலும் காமன் வியக்கும் தவநிலையும் கண்டு, 'இங்கு இணையில்லாள் இவள் யார்?' என்று கேட்டான்.

அப்பொழுது அரசனைக் தொழுது சட்டையிட்ட பிரதானி ஒருவன் கீழ்வருமாறு கூறினான்: "நாவலந் தீவில் நங்கைளை ஒப்பார் யாவரும் இல்லை. கிள்ளிவளவனோடு கெழுதகை வேண்டிக் கலத்தொடும் யான் போன போது இவள் திறம் எல்லாம், பூம்புகார்ப்பட்டினத்தில் அறிந்தேன். அறவண அடிகள் இவள் செய்திகளைக் கூறினார். நான் இங்கு வந்ததும் உம்மிடம் கூறியுள்ளேன். அவளே இந்நங்கை" என்றான்.

## மணிமேகலை கூற்று

மணிமேகலை அரசனை நோக்கி," உன் கையில் இருந்த பாத்திரமே என் கையில் இருப்பது. நீ பெருஞ் செல்வத்தால் மயங்கி இதனை அறியாமல் இருக்கின்றனை. நீ உனது முற்பிறப்பை அறியாவிடினும் ஆவயிற்றிற் பிறந்த இப்பிறப்பைப் பற்றியும் அறியாதது என்னை? நீ மணிபல்லவத் தீவை அடைந்து வலங்கொண்டு புத்த பீடிகையைத் தொழின், பழம் பிறப்பின் தன்மையை அறிவாய். ஆதலால் நீ அங்கு வருக" என்று

கூறினாள்; கூறி, கதிரவன் மேல் திசையில் மறையுமுன் வான் வழியே மணிபல்லவம் அடைந்தாள்.

### புத்த பீடிகைமுன் மணிமேகலை

மணிமேகலை, மணிபல்லவத்தில் மலர்கள் நிறைந்து நறுமணம் வீசும் கடற்கரை எங்கும் சுற்றி, அத்தீவை வலங் கொண்டு புத்த பீடிகையை வணங்கினாள். அது, மீண்டும் பழம் பிறப்பை உணர்த்திற்று. அப்பொழுது மணிமேகலை அப்பீடிகையைத் தொழுதுநின்று, தான் முற்பிறப்பில் அறிந்த செய்தியைக் கீழ்வருவாறு கூறினாள்: "பிரமதரும முனிவரே, காயங்கரை என்னும் ஆற்றங் கரையில், நான் அத்திபதி என்னும் அரசருடன் உம்மைப் பணிந்தபோது நீர் அவந்தி நகருக்குச் செல்வோர்க்கெல்லாம், 'நீவிர் துன்புறுதற்குக் காரணமாகிய தீவினைகளைச் செய்வீராயின் விலங்காகவும் நாகமாகவும் பேயாகவும் பிறத்தல் வேண்டும். ஆதலால் அவற்றை ஒழிமின். நீவிர் நல்வினைகளைச் செய்வீராயின் தேவராகவும் மக்களாகவும் பிரமராகவும் பிறப்பீர்கள். ஆதலால் நீவிர் அவற்றையே மறவாது செய்க. புலவனும் முதிர்ந்த அறிவுடையவனுமான ஒருவன் உலகம் உய்யுமாறு பிறப்பான். அப்போது அவன் கூறும் அறவுரைகளைக் கேட்பவரே துன்பப் பிறவியை நீக்குவர். நீவிர் தடுப்பதற்கரிய யமன் வருதற்கு முன் அறநெறியைக் கைக்கொள்க' என்று நாக்கடிப்பாக வாய்ப்பறை சாற்றினீர். அவ்வுரை கேட்டு நாங்கள் உம் அடிகளைப் பணிந்தோம். நீர் எங்கட்கும் நல்லுரை கூறினீர். புத்த தோன்றுவதற்கு முன்பே இப்பீடிகையை இந்திரன் வைத்த காரணமும் இது பழம் பிறப்பை உணர்த்தும் காரணமும் என்ன எனக் கேட்டேன். நீர், 'அப்பீடிகை புத்ததேவனை அல்லாது வேறெருவரைத் தன்மேல் தாங்காது. அப்பீடிகை தாங்கினாற்றான் இந்திரன் புத்த தேவனைப் பணிவான். ஆதலால். இந்திரன் புத்த பீடிகையைப் புத்த தேவனுக்காக அமைத்தான்; அதனைக் காண்பவர் பழம் பிறப்பை உணருமாறு செய்தான். அதன்படி அஃது உனது பழம் பிறப்பை விளக்கமாகக் காட்டும்' என்று அப்பொழுது அறைந்தீர். அஃது இப்பொழுது கூறியது போலத் தோன்றுகிறது" என்று கூறி, மீண்டும் அப்புத்த பீடிகையை ஏந்தி வலங் கொண்டு வணங்கி நின்றாள். இது நிற்க.

### ஆபுத்திரனும் அமைச்சனும்

மணிமேகலை வான்வழியே மறைந்த பின் ஆபுத்திரன் தன்னை வளர்த்த தாயான அமரசுந்தரியின் மூலம்--மண்முக

முனிவன் தனக்கு வளர்ப்புத் தந்தையாக இருந்ததையும், தான் பொன் முட்டையிலிருந்து பிறந்ததையும், மகப்பேறு இல்லாக் காரணத்தால் பூமி சந்திரன் தன்னை வாங்கி வந்து வளர்த்ததையும் அறிந்தான். உடனே அவன், சென்ற பிறப்பில் தன் தாயான சாலி செயலும் இப்பிறப்பின் தன்மையும் அறிந்து வருந்தினான் ; வருந்தி. "நான் இனி இவ்வரச போகத்தில் இருந்து அமைச்சரையும் புரோகிதரையும் துணையாகக் கொண்டும், பெண்மக்கள் செய்யும் பாடலோடு கூடிய ஆடல்களைக் கண்டும், இனிய இசைகளைச் செவிமடுத்தும், ஊடல் கொள்ளும் மனைவிமாரிடம் ஊடல் தீர்த்தும் வாழேன். துறவறமே எனக்கு ஏற்றது. தரும சாவகன் 'அறவுரை' யாகிய விதை இன்றுதான் மணிமேகலை கூற்றால் முளைத்துப் பயன் தந்தது" என்றான்.

அப்பொழுது அருகில் இருந்த 'சனமித்திரன்' என்னும் அமைச்சன் அரசனைப் பணிந்து, "வேந்தே, சிறிது கேட்டருள்க: பூமிசந்திரன் உன்னை வளர்க்கத் தொடங்குமுன் இந்நாடு பன்னிராண்டு பஞ்சத்தால் வருந்தியழ. அப்பஞ்சத்தில் ஈன்ற தாயார் தம் குழந்தைகளையும் தின்னக்கூடிய கொடிய பசி நோயில் இருந்தனர். அந்நிலையில் நீ, வெயில் தோன்றும் கடுங் கோடையில் மழை தோன்றினாற்போலத் தோன்றினை. நீ தோன்றிய பின் வானம் பொய்க்கவில்லை; மண் வளம் குறையவில்லை ; உயிர்கள் பசிநோய் அறியவில்லை. ஆதலால் நீ இப்போழ போய்விடின் இந்நாடு தாயில்லாக் குழவி போலக் கூச்சலிடுமே ! உன் நாட்டு உயிர்கள் இறக்கவிட்டு நீ மட்டும் உயர்நிலை அடைய விழைவது தன்னுயிரைப் பாராது பிறவுயிரைப் பாதுகாக்கும் புத்த தேவனது அறம் ஆகாதே!" என்று அறைந்தான்.

அது கேட்ட அரசன், "நான் மணிபல்லவத்தை வலங் கொண்டு வரவேண்டும் என்று துணிந்துவிட்டேன்; அவ்வாவலை நிறைவேற்றியே தீர்வேன். நான் போய்வர ஒரு மாதம் ஆகும். நீ அதுகாறும் அரசியலைக் கவனித்து நடத்துக" என்று கூறி, அரசவுரிமையைச் சனமித்திரன்பால் விடுத்துக் கப்பல் வழியே மணிபல்லவம் அடைந்தான்.

### மணிபல்லவத்தில் ஆபுத்திரன்

புண்ணிய ராஜனது வருகையை எதிர் நோக்கி இருந்த மணிமேகலை, அவனைக் கண்டதும் மட்டற்ற மகிழ்ச்சி

அடைந்தாள்; தீவை வலஞ்செய்வித்தாள்; புத்த பீடிகையைக் காட்டினாள். மன்னன் புத்த பீடிகையைக் கண்டு வணங்கினான்; வணங்கியவுடன். கையில் எடுத்துக் காண்கின்றவர்தம் முகத்தைத் தெளிவாகக் காட்டும் கண்ணாடி போலப் புத்தபீடிகை அவனது பழம் பிறப்பை உணர்த்தியது. அரசன், “என் முற்பிறப்பை முற்ற உணர்ந்தேன்,” என்று கூறி, “தென் தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய், இரந்துண்ணும் வாழ்க்கையை உடைய என்னிடத்திற்கு வந்து உணவு கேட்டவர்க்கு உணவளிக்க முடியாமல் ஓர் இரவு நான் வருந்தினேன். அப்போழ, ‘ஆபுத்திரனே, வருந்தாதே. நாடு வறுமை எய்தினும் இவ்வோடு வறுமை எய்தாது’ என்று மொழிந்து என்கையில் அமுத சுரபியைத் தந்து, எனது துன்பத்தைப் போக்கிய வானோர் பாவாய்! எத்தனைப் பிறவிகள் எடுப்பினும் உன் பாதங்களை மறந்து வாழேன்” என்று கூறிப் பழம் பிறப்பு நிகழ்ச்சிகளைப் பற்றி பேசினான். பின்னர் அரசன் மணிமேகலையுடன் கூடித் தென்மேற்காகச் சென்று ‘கோமுகி’ என்னும் பொய்கைக் கரையை அடைந்தான்; அங்கு இருந்த புன்னைமர நிழலில் தங்கினான்.

### ஆபுத்திரனும் தீவதிலகையும்

அப்வேளையில் அத்தீவின் காவல் தெய்வமான தீவதிலகை அங்க வந்தாள்.; ஆபுத்திரனை நோக்கி, “நீ முற்பிறப்பில் இத்தீவில் பட்டினி கிடந்து உயிர் விட்டவுடன் உன்னை மறந்து கப்பலேறிச் சென்ற செட்டிமார் ஒன்பதுபேரும் இங்கு வந்தனர்; நீ இறந்து கிடந்ததைக் கண்டு வருந்தித் தாமும் நீ இறந்த இடத்திலேயே உண்ணா நோன்பு இருந்து உயிர் விட்டனர். இவை அவர்களுடைய எலும்பு கூடுகள். இவை, அவர்களால் காக்கப்பட்டவருடையன. அவர்களும் இங்குதான் இறந்தார்கள். உனது எலும்புக் கூடு அலை கொண்டுவந்த மணலால் மூடுண்டு இப்புன்னைமர நிழலில் உள்ளது; காண்பாயாக” என்றாள்.

### புகார் கடல் கொண்ட செய்தி

பிறகு தீவதிலகை மணிமேகலையைப் பார்த்து, “புகார் நகரத்தைக் கடல் கொண்டது. அதன் காரணம் இதுவாகும்: நாகநாட்டு மன்னன் மகளான பீலிவளை என்பாள் தன் மகனை எடுத்து வந்து இந்தீவையும் பீடிகையையும் வலம் வந்து வணங்கினாள். அப்பொழுது புகார் செல்லும் கம்பளச்

செட்டியின் கப்பல் இங்கு வந்து தங்கியது. பீலிவளை அவனிடம், 'இம் மகன் சோழ வேந்தன் மகன். இவனை அவனிடம் சேர்த்து விடுக' என்று கூறி மகனை அவனிடம் ஒப்புவித்தாள். அவனும் மிகுந்த மகிழ்ச்சியோடு அம்மகனைப் பெற்றுப் புறப்பட்டான். வழியில் கப்பல் நடுக்கடலில் உடைந்துவிட்டது. அதிலிருந்து தப்பிப் பிழைத்த சிலர் சோழ வேந்தனிடம் சென்று மைந்தன் கடலில் தவறிய செய்தியைச் செப்பினர். அது கேட்ட கிள்ளிவளவன் தன்னை மறந்தவனாய்க் கடற்கரையில் மகனைத் தேடி அடைந்தான். இக்குழப்பத்தில் நகரத்தார் இந்திரவிழாச் செய்தலை மறந்தனர். அதனால் மணிமகலா தெய்வம், 'இந்நகரைக் கடல் கொள்க' என்று சபித்தது. அதனால் நகரைக் கடல் மூடியது. அரசன் வேறு இடம் சென்றான். அறவண அடிகள் மாதவியோடும் சுதமதியோடும் வஞ்சிமா நகரம் சென்றனர்." என்றாள்.

### அறவுரை கேட்டல்

பின்னர்ப் புண்ணியராசன், தீவதிலகை காட்டிய இடத்தில் மணலைத் தோண்டிப் பார்த்தான்; தனது எலும்புக்கூடு ஊன்பற்றின்றிக் கிடப்பதைக் கண்டு நடுங்கினான். அப்போது மணிமேகலை அரசனை நோக்கி, "அரசனே, ஏன் வருந்து கின்றனை? நான் உனது நாட்டிற்கு வந்து உன்னை இங்கு வரச் செய்து உனது பழம் பிறப்பை உணரச் செய்தமை--உனது புகழை உலகெலாம் பரவச் செய்யவே ஆகும். நீ இனி அறத்தையே மேற்கொண்டு வாழ்க.

*'அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்*
*மறவாது இதுகேள்: மன்னுயிர்க் கெல்லாம்*
*உண்டியும் உடையும் உறையுளும் அல்லது*
*கண்ட தில்.'"*

என்று கூறினாள். அரசன், "நான், நீ கூறிய படியே என் நாட்டிலும் பிறர் நாட்டிலும் நல்லறத்தையே செய்வேன். எனது பழம் பிறப்பை உணரச் செய்து என்னை உய்வித்த உன்னை விட்டுப் பிரிய நான் இசையேன்" என்றான் அதற்கு மணி மேகலை, "அரசனே, நீ வருந்த வேண்டா, உனது பிரிவால் வருந்திய நாடு உன்னைக் கூவி அழைக்கிறது. ஆதலால் நீ உனது நாடு செல்க" என்று கூறி அவனை அனுப்பிவிட்டு, வான் வழியே வஞ்சிமாநகர் நோக்கிச் சென்றாள்.

## 26. வஞ்சி மாநகரம் புகுந்த காதை

### தாயின் தரிசனம்

மணிமேகலை வான்வழியே வஞ்சி மாநகரத்தை நெருங்கினாள்; ஊருக்கு புறத்தே உள்ள தன் தாய் கண்ணகியின் கோயிலை அடைந்து, அவளையும் கொடைவள்ளலான தன் தன் தந்தை கோவலனையும் கண்டு தரிசிக்க ஆவல் கொண்டாள்; இருவர் சிலையளையும் கண்டு வணங்கி நின்றாள்; "தாயே, நீ, கோவலன் இறந்தவுடன் அறக் கற்பாகிய உடன் இறத்தல் அல்லது தீக்குளித்தல், நற்றவம் செய்தல் இவற்றுள் ஒன்றும் செய்யாமல் மறக்கற்பை மேற்கொண்டு வீரச் செயலைச் செய்யக் காரணம் என்னையோ? அக்காரணம் அறிய அவாவுகின்றேன்" என்றாள்.

### பத்தினி பகர்தல்

பத்தினிக் கடவுளான கண்ணகி தோன்றி, "மகளே, என் காதலன் உற்ற கடுந்துயர் பொறுக்க முடியாமல் மதுரையைத் தீக்கிரையாக்கத் துணிந்தேன். அப்பொழுது அந்நகரத்து அதிதேவதையாம் மதுராபதி என் முன் தோன்றி, 'கோவலனும் நீயும் இப் பிறப்பில் இத்துன்பம் அடைந்தற்குக் காரணம் முற் பிறப்பின் செயலே ஆகும். அதனைக் கேள்: முன்னர்க் கலிங்க நாட்டுச் சிங்கபுரத்து அரசனான 'வாசு' என்பவற்கும் கபிலபுரத்துக் காவலனான 'குமரன்' என்பவற்கும் போர் நடந்துகொண்டிருந்தது. அப்போழ்து 'சங்கமன்' என்னும் வணிகன் தன் மனைவியுடன் சிங்கபிரத்துக் கடைத்தெருவுக்குச் சென்று பண்டம் விற்றுக் கொண்டு இருந்தான். அப்பொழுது வசுவினிடம் வேலை பார்த்து வந்த 'பரதன்' என்பவன் அவ்வணிகன்பால் பொறாமையுற்றான்; அவனைப் பகையரசனது ஒற்றன் எனக் கூறிக் கொலை செய்வித்தான். கொலை செய்யப்பட்ட சங்கமன் மனைவி 'நீலி' என்பாள், கொழுகொம்பில்லாக் கொடி போல் வாடி, ஒரு பெரிய மலை மீதேறி நின்று, 'எனக்கு இப்பிறவியில் துன்பம் செய்தார் மறு

பிறவியில் இத்துன்பத்தையே அடைவாராக' எனச் சபித்து விட்டுக் கீழே வீழ்ந்து இறந்தாள். அப்பரதனே இப் பிறவில் கோவலனாகப் பிறந்தான்; கொலையுண்டான். 'நீங்கள் முற்பிறப்பில் செய்த தீவினையே உங்களை இப்பிறப்பில் வாட்டியது' என்று கூறிச்சென்றது.

“அத்தெய்வம் இங்ஙனம் கூறிச் சென்றும் யான் சீற்றம் தணியேனாய் மதுரையைச் சிதைத்தேன்; முன் செய்த நல்வினைப் பயனால் நானும் என் கணவனும் வானவர் ஆயினோம். இந்நல்வினை முடிந்த பிறகு நாங்கள் மீண்டும் கோபத்தால் உண்டாகிய தீவினைப் பயனை அடைந்தேதீர்தல் வேண்டும்; இங்ஙனம் பிறந்தும் இறந்தும் நல்வினையின் முடிபில் நல்வினைப் பயனையும் நுகர்ந்துகொண்டிருப்போம்.; பின்னர் மகத நாட்டில் கபிலை நகரத்தில் புத்த தேவன் தோன்றிப் போதி மரத்தடியில் இருந்து உண்மை உணர்ந்து உலகினர்க்கு நால்வகை வாய்மையும் பன்னிரு சார்பின் பகுதித் தோற்றமும் பிறவும் அறிவுறுத்தும் போது அவற்றைக் கேட்டுத் துறவு பூண்டு பிறப்பொழிப்போம். இப்பயன் எங்கட்டு எவ்வாறு உண்டானது? எனின், இப்பிறபில் புகாரில் உள்ள இந்திர விகாரம் ஏழினையும் வணங்கியதே ஆகும். யாம் பிறப்பொழிக்கப் பல காலம் ஆகும். நாங்கள் அதுகாறும் பலவகைப் பிறவிகள் எடுப்போம். நீ இந்நகரில் உள்ள சமயவாதியர் பலரிடமும் சென்று, அவர் கூறும் கொள்கைகளைக் கேட்டு, அவை உள்ளத்தைக் கவராமையின் இறுதியில் பௌத்த சமயத்தை மேற்கொள்வை” என்று கூறி மறைந்தாள்.

### மணிமேகலை வஞ்சியுள் நுழைதல்

மணிமேகலை ஆண் உருக்கொண்டு நடந்தாள்; செங்குட்டுவச் சேரன் வஞ்சி சூடிப் படைகளுடன் வடநாடு சென்று கங்கைக் கரையில் தங்கிப் படகுகள் வழியே கங்கையைத் தாண்டிச் சென்று, கனக விசயரை வென்று, அவர் தலை மீது பத்தினிக் கல்லை ஏற்றித் தன் நகர் மீண்டான். மணிமேகலை அப்பெரு வேந்தன் கொலு வீற்றுள்ள வஞ்சிமா நகரத்துள் நுழைந்தாள்; தேவகுலங்களும் திண்ணைகளும் மாதவர் சாலைகளும் பூஞ்சோலைகளும் பொய்கைகளும் நிறைந்ததும்- தவஞ் செய்யும் முனிவரும் கற்றடங்கியவரும் நன்னெறி அறிந்ததொன்னூற் புலவரும் எங்கும் நிறைந்திருக்கின்ற புறநகரத்தை அடைந்தாள்.

# 27. சமயக் கணக்கர்தம் திறம் கேட்ட காதை

## வைதிக வாதி விளக்கம்

மணிமேகலை வைதிக மார்க்கத்தைப் பற்றிக் கேட்ட போது அச்சமயக் கணக்கன், "வேத வியாசன் அளவை இலக்கணத்தைப் பத்தாகவும், 'கிருதகோடி' என்பவன் எட்டாகவும், 'சைமினி' ஆறாகவும் வகுத்துள்ளனர். காண்டல் கருதல், உவமம், ஆகமம், அருத்தாபத்தி, இயல்பு, ஐதிகம், அபாவம், மீட்சி, சம்பவம் ஆகிய இப்பத்தினால் பொருளின் உண்மை உணர்தல் வேண்டும். உலோகாயத சமயத் தலைவனாகிய பிருஹஸ்பதி, பௌத்த சமயத் தலைவனாகிய சினன், சாங்கிய சமயத் தலைவனாகிய கபிலன், நையாயிக சமயத்தலைவனான அக்கபாதன், வைசேடிக மகத்தலைவனான கணாதன், மீமாம்சைச் சமயத்தலைவனான சைமினி, ஆகிய இவர்கள் அளவைகள் ஆறே எனக் கொண்டனர். இவ்வளவைகளை கொண்டு உண்மைப் பொருளை உணர்தலே எமது கொள்கை" என்றான்.

## சைவ வாதி விளக்கம்

சைவ வாதி மணிமேகலையை நோக்கி, "சூரியசந்திரர், ஐம்பூதங்கள், இயமானன் ஆகிய எட்டு வடிவாகவும், உயிரும் உடலுமாகவும், கலைகளின் உருவமாகவும், முத்தொழில் உடையதாகவும், இல்லை-உண்டு என்னாது எல்லாம் தானே ஆகி நிற்பதும் ஆகிய ஒப்பற்ற பொருளே எம் சமயப் பொருள்" என்றான்.

## பிரம வாதி

"இவ்வுலகம் தேவனால் இடப்பட்ட ஒரு பெரிய முட்டை" என்று பிரமவாதி கூறினான்.

### வைணவ வாதி

"என் கடவுள் திருமால். அவன் பழமையானவன்; இவ்வுலகைத் தன்னிடத்தில் விரித்தும் தொகுத்தும் காப்பவன் " என்று வைணவ வாதி விளக்கினான்.

### வேத வாதி

வேத வாதி, "என் மதம் வேதமே ஆகும் அதற்குக் 'கற்பம்' கை; சந்தமே கால்; தர்க்கமே கண்; நிருத்தமே காது; சிக்ஷையே மூக்கு; வியாகரணமே முகம். இவை ஆறும் அங்கங்கள் ஆகும். இவற்றோடு கூடிய வேதம் ஆதியந்தம் இல்லாதது," என்றான்.

### ஆசீவக வாதி

"மற்கலி தேவனே எமது கடவுள். அவன் எல்லா உயிர்களிலும் இருப்பவன்; உயிரில் பொருள்களிலும் உள்ளவன். எமது நூல் 'நவகதிர்' என்பது. அதனிற் கூறப்பட்டுள்ள உயிரும் நால்வகை அணுக்களும் ஆகிய ஐந்துமே நூற் பொருள்.

### நிகண்ட வாதி

நிகண்ட வாதி, "அருகனே எமது கடவுள். அவனால் செய்யப்பட்ட அங்காகமம், பூர்வாகமம், பகுசுருதி யாகமம், என்னும் மூன்றிலும் கூறப்படுபவையே எம் கொள்கைகள்" என்றான்.

பின்னர் மணிமேகலை, **சாங்கிய வாதி, வைசேடிக வாதி** இருவர்தம் கொள்கைகளையும் கேட்டறிந்தாள். **பூதவாதி**, "அத்திப்பூ, கருப்புக்கட்டி முதலிய பொருள்களைச் சேர்த்தால்கள் சத்து அவற்றில் உண்டாகும். அது போல ஐம்புதச் சேர்க்கையால் அறிவு பிறக்கின்றது. அப்பூதங்கள் தனித்தனியே பிரிகின்ற போது அறிவும் அழிந்துபோகிறது. இதுவே எமது கொள்கை. எம் பிற கொள்கைகளும் உலோகாயதர் கொள்கைகளும் ஒள்றேயாம்" என்றான்.

மணிமேகலை இவ்வாறு பத்துவகைச் சமயக்கணக்கர்தம் திறம் கேட்டு மனச் சாந்தி அடையாதவளாய், அறவண அடிகள் மாதவியுடனும் சுதமதியுடனும் இருந்த இடந்தேடிப் புற நகரத்தைக் கடந்தாள்.

# 28. கச்சி மாநகரம் புக்க காதை

## அகழி வருணனை

புறநகரத்தைக் கடந்த மணிமேகலை அகழியை அண்மினாள். மனைக்குள் நீராடும் மகளிர் கூந்தலில் உள்ள வாசனையிடன் கூடித் தூம்பின் வழி வந்த நீர், நீர் இறைக்கும் எந்திரம் அமைந்த குளத்தில் கலவைச் சாந்தணிந்த ஆடவர் பெண்டிர் விளையாடிய நீர், அரசன் பிறந்த நாள் விழாவில் பீச்சுங் குழைகள் வழியே சிந்தும் மண நீர், சீல உபாசகர் மாதவர் பாதம் விளக்கும் செங்கை நீர், அறஞ் செய்பவர் அகில் முதலியவற்றைப் புகைக்கும் பந்தர்களில் உள்ள குடங்களிலிருந்து ஒழுகும் நீர், மணச் சாந்து அரைப்போர் மனைகளிலிருந்து ஓடிவரும் நீர் என்னும் பல திறப்பட்ட நீரும் வந்து அகழியிற் பாய்கின்றன. அதனால் அகழியில் உள்ள முதலை வகைகள், மீன் முதலியவை புலால் நாற்றம் இல்லாமல் வண்டுகள் மொய்க்கும்படி இருந்தன. அகழியைச் சுற்றிலும் வேலைப் பாடமைந்த மதில் உண்டு. மணிமேகலை இவற்றைக் கடந்து அரசனது கொடியாடும் இடம் சென்றாள்.

## அகநகர் வருணனை

சென்றவள், கோட்டைவாயிலைக் காப்பவர் நெருங்கி வாழ் தெருவையும், மீன் வாணிகர், உப்புவாணிகர், கள் விற்பவர், பிட்டு வாணிகர், அப்ப வாணிகர், ஆட்டு வாணிகர், கயிறு திரித்து விற்பவர், மணப் பொருள்கள் விற்பவர், முதலியோர் வாழ்கின்ற தெருக்களையும் கடந்தாள்; வேட்கோவர், செம்பு வேலை செய்பவர், தட்டார், தச்சர், பொன்வேலை செய்பவர், கன்னார், ஓவியர், சிற்ப ஆசாரியர், தோல் வேலை செய்பவர், தையற்காரர், மாலை கட்டுபவர், ஜோதிடர், பாணர் முதலியோர் வாழும் தெருக்களையும் கடந்து நடந்தாள்; சங்கு அறுப்பவர், முத்துக் கோப்பவர், கூத்தாடும் மகளிர் இவர் வாழ் வீதிகளைக் கடந்தாள்; எண்வகைக் கூலவாணிகர், இருந்து ஏத்துபவரான 'மரகதர்,' நின்று ஏத்தும் 'சூதர்,' அதற்கேற்ப

ஆடும் 'வேதாளிகர்' என்போர் வாழ் வீதிகளைக் கடந்தாள்; விலைமகளிர், நெசவு வேலை செய்பவர், பொன் உரை காண்பவர், இரத்தின வணிகர், மறையோர், அரசர், அமைச்சர், சேனைத் தலைவர் முதலியோர் வாழ் வீதிகளையும் கண்டாள்; மன்றமும் பொதியிலும் சந்தியும் சதுக்கமும் புதிதாய்க் கொண்டு வரப்பட்ட யானைகளையும் குதிரைகளையும் பழக்குவோர் தெருக்களும் செய்குன்றுகளும் மணம் வீசும் சோலைகளும், தேவர் தம்திருப்பிடத்தை மறந்து தங்க விருப்பங்கொள்ளத்தக்க நன்னீர் இடங்களும் அறச்சாலைகளும் கூடங்களும் பொன் அம்பலங்களும் தவச்சாலைகளும் பிறவும் எல்லாம் கண்டாள்.

**பாட்டனும் பாவையும்**

மணிமேகலை, புத்த தேவனது அறவுரை கூறப்பட்ட புத்தர் பள்ளியை அடைந்தாள்; அங்கிருந்த தன் தந்தையைப் பெற்ற பாட்டனைக் கண்டு அடிபணிந்தாள்; அவற்குத் தன் கைக்கலனின் பெருமையையும், ஆபுத்திரன் அறச் சிறப்பையும், அதனலல் அவன் அரசனாகப் பிறந்து செங்கோல் செலுத்தலும், தான் அவனை மணி பல்லவததிற்கு அழைத்து வந்த பழம் பிறப்பை உணரச் செய்தமையும், அங்குத் தீவதிலகை புகாரைப் பற்றியும் பிறவற்றைப் பற்றியும் கூறினவையும், புண்ணிய ராசனைச் சாவக நாட்டுக்கு அனுப்பி விட்டு தான் அங்கு வந்த செய்தியையும், தன் தாயான கண்ணகியைக் கோவிலில் தரிசித்ததையும், அவள் தன்னிடம் கூறியவையும், வேற்றுருக் கொண்டு சமயக் கணக்கர்தம் திறம் கேட்டதும், அவை பிடியாமையால் அறவண அடிகளிடம் பௌத்த தருமம் கேட்க வந்ததையும் விடாமல் விளங்க உரைத்தாள்.

பாட்டனான மாசாத்துவான், "மணிமேகலையே, எனது நல்வினையே நான் உன்னைக் காணச் செய்தது. உன் தாயும் தந்தையுமான கோவலனும் கண்ணகியும் அடைந்த துன்பங் களையும் மதுரை எரிக்கு இரையாயதும் கேள்விப்பட்டு நிலையற்ற என் செல்வத்தைத் துறந்து, புத்த சமயத்தைத் தழுவி தவம் செய்யத் தொடங்கினேன். நான் இந்நகரம் வந்த காரணத்தைக் கேட்பாயாக: முன்னாளில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் இச்சேர நாட்டை ஆண்டு வந்தான். அவன் ஒருநாள் தன் மனைவியருடன் இச் சோலையில் தங்கியிருந்தான். அப்போது, இலங்கையில் உள்ள 'சமனொளி' மலைமீதுள்ள

புத்தர் பாதங்களை வணங்கி விண்வழிப் போந்த பெளத்த சாரணர் சிலர் இச்சோலையில் தங்கிக் கல் ஆசனங்களில் இருந்தனர். அரசன் அவர்களை வணங்கி உணவு படைத்துப் போற்றினான். அவர்கள் பிறவியால் வரத்தகும் துன்பங்களையும் பிறவாமையால் வரும் இன்பத்தையும் பிறப்பொழிக்கப் புத்தர் புகன்ற நால்வகை வாய்மையையும் அரசனுக்கு விளங்க அறிவித்தார்கள். அப்போது அரசனுடன் நண்பன் ஒருவன் இருந்தான். அவன் நமது கோவலனுக்கு ஒன்பது தலைமுறைக்கு முற்பட்டவன்; அவன் பெயரும் பொருளையும் தன் முன்னோர் சேர்த்த பொருளையும் ஏழுநாட்களுக்குள் வறியோர்க்கு வழங்கிவிட்டுத் தவம் புரியத் தொடங்கினான். அவன் மலைபோலக் கட்டிய புத்தர் கோயில் இப்பொழுது சிறந்த இடமாக இந்நகரில் இலங்குகின்றது. நான் அதை வணங்கவே இங்கு வந்தேன்; 'புகார் நகரம் கடலால் கொள்ளப்படும்' என்று முனிவர்கள் கூறியதால் இங்கேய தங்கிவிட்டேன். உன் தந்தை பல பிறவிகள் எடுத்து, இறுதியில் புத்தர் தோன்றி அறவுரை செய்கையில் அவ்வுரை கேட்டுப் பிறப்பொழிப்பான் என்று முனிவர்கள் கூறினார்கள். நானும் புத்தர் பெருமானுடைய அறவுரைகளைக் கேட்டேன். நீ உனது எதிர்கால நிகழ்ச்சிகளைக் கந்திற் பாவை மூலம் அறிந்தனை என்பதை அறவண அடிகள் என்னிடம் அறிவித்தார், அவர் காஞ்சி நகரம் சென்றார்; அதுவே உனக்கு அறம் அறிவிக்கத் தக்க இடம் என்று என்னிடம் கூறினார். அவருடன் மாதவியும் சுதமதியும் சென்றனர். காஞ்சிநகரம் இப்பொழுது வறுமையால் வாடுகிறது; மழையின்றித் தவிக்கிறது; மாதவர்க்கு அன்னம் இடுவாரும் இல்லை. ஆதலால் மாதவர் பலர் இவ்வஞ்சிக்கு வந்துவிட்டனர். ஆருயிர் மருந்தாகிய அமுத சுரபியை வைத்திருக்கும் நீ 'ஆருயிர் மருந்து' போன்றவள். நீ உடன் சென்று காஞ்சியில் உள்ள உயிர்களைக் காப்பாயாக," என்றான்.

**கச்சியில் மணிமேகலை**

மணிமேகலை பாட்டன் பாதங்களைப் பணிந்து, உடனே காஞ்சியை நோக்கி விண்வழிப் படர்ந்தாள்; தேவேந்திரன் தலை நகரை ஒத்த காஞ்சி பொலிவற்று இருத்தலைக் கண்டு வருந்தினாள்; அம்மூதூர் மதிலை வலங்கொண்டு நகரத்தின் நடுவிடத்தை அடைந்தாள்; தொடுகழற் கிள்ளியின் தம்பியான

'இளங் கிள்ளி' கட்டியுள்ள புத்தர் கோயிலைக் கண்டாள்; அதனை வணங்கி, அதற்குத் தென்மேற்குப் பக்கமாகச் சென்று குளிர் பூஞ்சோலை ஒன்றில் தங்கினாள். மணிமேகலை வரவை அறிந்த சட்டையிட்ட பிரதானி ஒருவன் இளங்கிள்ளியிடம் சென்று அவனைப் பணிந்து, "அரசே. சிறந்த தவவொழுக்கமும் உடையவளும் யாவரினும் சிறந்தவளும் ஆகிய மணிமேகலை என்பவள், உயிர்கட்கெல்லாம் உணவளிக்கும் 'அமுதசுரபி' என்னும் பிச்சைக் கலனை ஏந்தி இந்நகர் வந்துள்ளாள். அவள் வருகை, கோடையில் மழை வருகை ஒப்பதாகும். அவள் தருமத வனத்தில் தங்கியுள்ளாள்" என்றாள்.

### கச்சியில் மணிபல்லவம்

அரசன் அது கேட்டு, 'கந்திற்பாவை கட்டுரை எல்லாம் உண்மையாகிறது' என்று எண்ணி வணங்கி, மணிமேகலையை அடைந்தான்; அடைந்து,

*"செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ*
*கொங்கவிழ் குழலார் கற்புக்குறை பட்டோ'*

இந்நகரர் வளம் இழந்து வறுமைப்பட்டது. இது கண்ட யான் துன்பக் கடலுள் ஆழ்ந்த போது ஒரு மாதெய்வம் தோன்றி, 'வருந்தாதே, நின் உயர் தவத்தால் ஓர் நங்கை பிச்சைக் கலன் ஏந்தி இங்கு வருவாள். அவள், அப்பாத்திரங் கொண்டு உயிர்கட்கு உண்டி படைப்பாள். கார் வறங் கூறினும் நீர் வறங்கூறாது. மணி பல்லவத் தீவைப் போல நீ அழகிய சோலைகளையும் குளத்தையும் இவ்விடத்தே உண்டாக்கிவை' என்றது. நான் உடனே இச்சோலையை அமைத்தேன்; குளந்தோட்டேன்" என்று அவ்விடம் முழுவதும் காட்டினான். அச் சோலை வனப்பைக் கண்ணுற்ற மணிமேகலை உளம் மகிழ்ந்தாள்; தனது பழும் பிறப்பை அறிவித்த புத்த பீடிகையையும் அச் சோலையில் செய்வித்தாள்; தீவதிலகையையும் மணிமேகலா தெய்வத்தையும் வழிபாடு செய்தற்குக் கோட்டங்கள் அமைப்பித்தாள்; அவற்றுக்கு நாட்பூசைகளும் சிறப்பு விழாக்களும் அரசனைக் கொண்டு நடத்தச் செய்து வழிபட்டாள்; புத்த பீடிகையில் அமுதசுரபியை வைத்துப் பூசித்து, 'பசிப் பிணியாளர் அனைவரும் உணவு கொள்ள வாருங்கள்' என்றாள்.

**அன்ன தானம்**

உடனே,

'காணார் கேளர் கால்முடப் பட்டோர்
பேணா மாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பியர் பசிநோ யுற்றோர்
மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்'

ஒருங்கு கூடினர்; வற்றாத வளமுடைய அமுத சுரபியின் உதவியால் உண்டு களித்தனர்; பசிப்பிணி போக்கிய பாவையைப் பலவாறு ஏத்தினர். அவள் வந்து அறம் செய்தலை அறிந்த அறவண அடிகளும் மாதவியும் சுதமதியும் அவளது இருக்கையை அடைந்தனர். மணிமேகலை உடனே அவர்களைப் பணிந்து, அடிகளை ஆசனத்தேற்றி அறுசுவை உண்டி படைத்துத் தான் செய்த நல்வினைப் பயன் தனக்குக் கிடைப்பதாக என்று சொல்லித் தொழுதாள்.

## 29. தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை

### பூம்புகார் கடல் கொண்ட செய்தி

தம்மை வணங்கிய மணிமேகலையை நோக்கி அறவண அடிகள், 'முன்பு நாக நாட்டை ஆள்பவன் மகளான பீலிவளை நம் சோழனுக்கு ஒரு மகனைப் பெற்றாள்; அம்மகனைச் சோழனிடம் சேர்ப்பிக்குமாறு மணிபல்லவத் தீவில் வந்து தங்கிய கம்பளச் செட்டி என்பானிடம் ஒப்புவித்தாள். கப்பல் நடுக்கடலில் உடைந்து போயிற்று. மைந்தன் காணப்படவில்லை. இச் செய்தியை அறிந்த சோழன் தன்னை மறந்தவனாய் மகனைத் தேடி அலைந்துகொண்டிருந்தான். குடிகளும் இந்திர விழாச் செய்தலை மறந்தனர். அதனாற் சினந்த இந்திரன், 'பூம்புகார் கடல் கொள்க' எனச் சபித்தான்.

"இஃதன்றி, முன்னொரு காலத்தில் உன் தந்தை மரபில் தோன்றிய முன்னோன் ஒருவன் கடலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது அவன் சென்ற கப்பல் உடைந்துவிட்டது. அதனால் அவன் **ஏழு நாள்** அளவும் கடலில் துன்பப்பட்டான். அவன் அற ஒழுக்கங்களில் சிறந்தவன். அதனால் அவனது துன்பத்தை இந்திரனது பாண்டு கம்பளம் தனது நடுக்கத்தால் இந்திரனுக்கு உணர்த்தியது. இந்திரன் உடனே மணிமேகலா தெய்வத்தை ஏவி அவனைக் காப்பாற்றும்படி செய்தான். உன் தந்தை இச் செய்தியைச் சாரணர் மூலமாக அறிந்தான்; அதனற்றான் உனக்கு அத்தெய்வத்தின் பெயரை இட்டான். பூம்புகாரில் இந்திரவிழா நடவாமையால் மணிமேகலா தெய்வமும் நகரைக் கடல் கொள்ளுமாறு சபித்தது. ஆதலால், காகந்தி நகரம் கடலில் மூழ்கியது. ஆதலால் நானும் உன் தாயும் சுதமதியும் வஞ்சிக்குச் சென்று, பிறகு உன் பொருட்டு இங்கு வந்தோம்" என்று விளங்க உரைத்தார்.

**மணிமேகலையின் விண்ணப்பம்**

மணிமேகலை அடிகளைப் பணிந்து, "பூம்புகார் கடல் கொண்ட செய்தி மணிபல்லவத் தீவில் தீவதிலகையால் அறிந்தேன். அதனால் நான் அந்நகர்க்குப் போகாமல் வஞ்சி புகுந்தேன்; வேற்றுருக் கொண்டு, பல சமயவாதிகளிடம் அவரவர் சமயக் கொள்கைகளைக் கேட்டுணர்ந்தேன். அவை எல்லாம் என் மனத்தை அமைதியின் நிறுத்தவில்லை. ஆதலின் யான் அவை எல்லாம் மறந்தேன், இப்பொழுது தாங்களே எனக்கு மெய்ப்பொருளை உரைத்தருளல் வேண்டும்," என்று வேண்டினாள்.

**அடிகள் அறவுரை**

அறவண அடிகள் மணிமேகலையை நோக்கி, முதலில் **ஆதி சினேந்திரன்** அருளிய '**காண்டல், கருதல்**' என்னும் இரண்டு அளவைகளையும் அவற்றின் போலி வகைகளையும் விரிவாகக் கூறி விளக்கினார்.

# 30. 'பவத்திறம் அறுக' எனப் பாவை நோற்ற காதை

### அடிகள் அருளுரை

*தானம் செய்தலை மேற்கொண்டு, பிக்குணிக்கு உரிய தச சீலங்களைக் கைக்கொண்டு சென்ற பிறப்பு நிகழ்ச்சிகளை முற்று உணர்ந்தவளான மணிமேகலை-***புத்தர்: புத்த தருமம், புத்த சங்கம்** *என்னும்* **முத்திற மணிகளை** *மும்மையின் வணங்கிச் சரணாகதியாய் அறவண அடிகளை வணங்கினாள். அடிகள் மணிமேகலையை நோக்கி, "உலகில் உள்ள உயிர்கள் உண்மைப் பொருளை உணராது வருந்தும் போது தேவர்கள் துடிதலோகத்தில் உள்ள* **பிரபாலர்** *என்னும் கடவுளை அடைந்து முறையிடுவர் .அக்கடவுள் இவ்வுலகிற் புத்தராகப் பிறப்பார்; பின்னர் அரசமரத்தடியில் இருந்து உண்மை உணர்ந்து, முக்குற்றங்கள் அற்றவராய் விளங்குவார். அப்பெரியார் அறையும் அறவுரைகளே உனக்கு யான் உரைத்தவை. இவற்றைத் தாம் முன்னர்த் தோன்றிய புத்தர்களும் உயிர்கட்கு உரைத்தருளினர்," என்றார்.*

### பாவையின் நோன்பு

மேலும் அவர் பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பிறப்பு, தோற்றம், வினைப்பயன் என்னும் பன்னிரு நிதானங்களின் விரிவுகளையும், வேறு பல புத்தமத உண்மைகளையும் நன்கு விளக்கினார்; விளக்கி, "ஞானநூற் பொருளைக் **கேட்டல், சிந்தித்தல், தெளிதல், அறிதல்** ஆகிய நான்காலும் நின் மனத்திருள் நீக்குக" என்று "**ஞானதீபம்** நன்கனங் காட்டினார். தவத்திறம் பூண்டு தருமங் கேட்ட பாவை, '**பவத்திறம் அறுக**' (பிறவி வகை ஒழிக) என்று தவஞ்செய்தனள்.

குறிப்புகள்